# விளக்கு

ஆசிரியர் நாள்
சிறப்பிதழ்



ஒக்டோபர் 2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதய பூர்வமான வாழ்த்துக்கள்!

கடந்த 28 வருடங்களாக
வடமாகாண - யாழ் மண்ணில்,
பதனிடல் உபகரணங்கள் மற்றும்
உற்பத்தி ஆலைகள்
போன்றவற்றிற்கான
வடிவமைப்பு, தயாரிப்பு,
பொருத்துதல்,
செயலூட்டல், பராமரித்தல்
போன்ற சகல துறைகளிலும்
முன்னணி நிறுவனமாக
விளங்கும்.........

இயந்திரவியல், மின்சாரம், குளிரூட்டல், கைத்தொழில்
போன்றவற்றிற்கான பொறியியலாளர்களும் ஆலோசகர்களும்.

**புறோமோட்டோர்ஸ் என்ஜினியரிங்
கம்பனி லிமிடெட்**

Tel. & Fax: 021-222-5780 E-mail: pecjff@sltnet.lk

844, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
யாழ்ப்பாணம்

Global Business Unit
515/7T.'B.Jayah Mawatha, Colombo 10.
Tel:0112683331 Fax:0112683330 e-mail issf123@lanka.ccom.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கின் பணி தொடரட்டும்

எமது வளமான கல்விக்கு உயரிய வளங்களாக உலவும் ஆசிரியப் பெருந்தகைகளை ஆசிரியர் நாளில், இன்று மட்டுமல்ல; என்றும் போற்று வோம். அவர்தம் பணியினை மதிப் போம். ''விளக்கு'' தாளிகை. உலக ஆசிரிய நாளின் மேன்மைக்கு ஒளியூட்டும் வகையில் வெளியிடும் சிறப்புமலர் கண்டு மகிழ்கின்றேன்.



ஆசிரியர்களின் வளம் எமது கல்விக்குப் பெருந்துணையாய் நிற்பதை நாம் நன்கறிவோம். எமது கல்வியின் உறுதிக்கும் எதிர்காலச் சிறார்களின் செழிப்புக்கும் அவர் களே உயிர்நாடிகள் என்பதையும், அதற்கென அனைத்து ஆசிரியர் களும் உணர்ந்தே செயலாற்று கிறார்கள் என்பதையும் நம்பிக்கை யுடன் நோக்குகின்றோம்.

எமது சிறார்களின் மேன்மையை மனத் திருத்தி ஆசிரியர்கள் தமது வாண்மையை மேம்படுத்திக்கொள்வதும் அந்தப் பணியில் தம்மை முழுமையாய் ஈடுபடுத்துதலும் இன்றியமையாதவையாகும். போரும், கல்வியும் எமது மக்களின் விடுதலைக்கு உறுதுணையானவை. என்பதை உணர்வதால் அதற்கென உழைக்கும் ஆசிரியப் பெருந்தகைகள் அனைவரையும் பாராட்டுகின்றேன். அவர் தம் வாண்மை ஒளிர வெளிவரும் ''விளக்கு'' தாளிகையின் பணி தொடர வாழ்த்துகிறேன்.

வெ. இளங்குமரன்
தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வாண்மை ஓங்க மாநிலம் சிறக்கும்"


# வெளிச்சம்

அகல்: 05 தாரண வருஷம் திருவள்ளுவர் ஆண்டு - 2035 அக்டோபர் 2004
சுடர்: 01


# உலக ஆசிரியர் நாள்

நாங்கள் ஆசிரியர்கள் என்பதும் நாங்கள் செய்யும் தொழில் புனிதமானதென்பதும் உயர்வானதென்பதும் பன்னெடுங்காலமாகப் பலராலும் உணரப்பட்டும் உரைக்கப்பட்டும் வருவதோடு போற்றப்பட்டு வருவதும் வழமையானதாகும்.

இன்று மீண்டும் ஓர் ஆசிரியநாளில் ஆசிரியர்களின் பணி போற்றி, நினைவு கூரப்படுகிறது. அவர்களின் சிறப்பான சேவை பாராட்டப்படுகிறது. ஆசிரியர்களாகிய நாம் ஒவ்வொருவரும் எமது சேவையில் உண்மைத் தன்மையை, உன்னதநிலையை, ஆழமாக நோக்கி உணர்ந்து தொடரும் காலங்களில் எமது சமூகத்தின் கல்வி மேம்பட நீதியாய்ப் பணியாற்றி முன்னேற முயல்வோம்.

எமது முன்னோரான அன்றைய ஆசிரியர்கள் எவ்வாறு சமூகத்தில் மதிக்கப்பட்டார்கள் என்பதையும் சமூகத்தின் நண்பராக, நல்வழிகாட்டுவோராக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியுரைக்கும் நெறிமுறை ஒழுக்கசீலராக எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதையும் சொல்லக்கேட்டிருக்கிறோம்.

இன்று ஆசிரியராகப் பணி தொடரும் பலர் அத்தகைய அறிவு, ஆற்றல், நற்பண்புகள், நிறைந்து முன்மாதிரியான நடத்தையுடன் வளரவும், வாழவும் தமது பணிமீது பற்றுக்கொண்டு செயலாற்றவும் காணும்போது எமது சமூகம் மகிழ்கிறது.

எந்நிலையிலும், எவ்விடத்திலும் ஆசிரியராக, ஆசிரியத் துவத்தின் மகிமை விளங்கத் தமது நடை, உடை பாவனைகளால் மாத்திரமல்ல, உள்ளார்ந்த உணர்வுசேர் நடத்தைகளாலும் உலகம் போற்றத் தொடர்ந்தும் சேவையாற்றும் மனங்கொள்ளவேண்டும்.

உலக ஆசிரியர் நாளான இந்நாளில் ஆசிரியர்களாகிய நாம் பெறும் பாராட்டுக்கள் எம்மை வழிநடத்திய முன்னோர்களான ஆசிரியர்களால் எமக்கு உரித்தானது என்பதை உணர்த்தும் வகையில் நாம் எமது கற்றல் கற்பித்தற் பணிகளை முன்னெடுக்க உறுதி பூணுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே உள்ளவை

முதலாம் பரிசுபெற்ற ஆசிரியர் நாள் எழுத்தாக்கங்கள்:-

- ✦ மு. மோகனேந்திரன்
- ✦ எம். வீ. எஃப். ஸீல்ஃபிகா
- ✦ யோசெப் ஆரோக்கியம் குருஸ்
- ✦ கா. சசிதரன்

✡ ஜேர்மனியில் தமிழாலயங்களின் கல்விப்பணி

கல்வியியலாளர்களின் கருத்துக்கள்:-

- ✦ பேராசிரியர் சபா. ஜெயராஜா,
- ✦ பா. தனபாலன்,
- ✦ திருமதி க. பொன்னம்பலம்,
- ✦ செல்வி திலகவதி பெரியதம்பி,
- ✦ கு. சதாசிவமூர்த்தி,
- ✦ க. ரட்ணேஸ்வரன்,
- ✦ க. சத்தியபாலன்,
- ✦ திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம்,
- ✦ அருட்சகோதரி மேரி தஸ்நேவிஸ். லடிஸ்லாஸ்,
- ✦ க. கதிரமலை,
- ✦ திருமதி. அ. பாலகிருஷ்ணராஜா,


இதழ் ஆலோசகர்கள்:-
உயர்திரு. க. சொக்கலிங்கம்
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
உயர்திரு. அ. பஞ்சலிங்கம்
உயர்திரு. பா. தனபாலன்
உயர்திரு. எஸ். சேதுராஜா
உயர்திரு. க. சரவணபவன்

இதழாசிரியர்:-
செ. மகேஷ்

இணையாசிரியர்:-
வே. சிவநேசன்


கவிதைகள்:-

- ✦ புத்தூர் வே. இளையகுட்டி
- ✦ துரை சத்தியசீலன்
- ✦ வ. யோகானந்தசிவம்
- ✦ க. கேமலோஜினி


முகவரி: "விளக்கு"
கல்வி மேம்பாட்டுப்பேரவை,
யாழ் வலயக் கல்விப் பணிமனை,
யாழ்ப்பாணம்.


சிறுகதை:-

- ✦ செல்லமகேந்திரன்

வாழ்த்துக்கள்:-

- ✦ வெ. இளங்குமரன்,
- ✦ ப. விக்கினேஸ்வரன்,
- ✦ எம். எஸ். ஏ. எம். முபாறக்,
- ✦ கலாநிதி தி. கமலநாதன்,
- ✦ பொ. வேணுகோபாலவாணிதாஸன்





வெளியீடு: ஆசிரியர் வாண்மை விருத்திக்குழு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பதாவது அகவை காணும் எங்கள் தலைவனை வாழ்த்துவோம்.



கார்த்திகை மாதம் எமக்குக் களிப்பூட்டும் மாதம்
கனத்த இருள் விலக எம் கரிகாலன் உதித்த மாதம்
தரணியில் வாழும் தமிழரெல்லாம் மனம் மகிழும் மாதம்
தலை கவிழ்ந்த தமிழ்த் தாயை தலை நிமிர வைத்த மாதம்
தலைவன் பிறந்த மாதம் மாவீரர்க்கான மாதம்
தமிழீழம் தலைகுனியாத் தலைவனைத் தந்த மாதம்
கார்த்திகைப் பூக்கள் மண்ணில் மலருகின்ற மாதம்
களிப்போடு தமிழீழம் மன்னவனைப் பெற்ற மாதம்

அகிம்சை நனவுகள் அடிபட்டுப் போனதால்
ஆற்றல் மிகு கரத்தில் ஆயுதம் ஏந்துகின்ற
தாரக மந்திரத்தை எம் தலைவன் ஏற்றதனால்
தரணியில் தமிழர் தலை நிமிர்ந்து நிற்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு எமக்கு வழி காட்டி நின்றதனால்
வீரமிகு யுகத்தை எம் தலைவன் படைக்கின்றான்.
சத்தியம் எமக்குச் சாட்சியாக நிற்பதனால்
சமதர்மத் தமிழீழம் சமைப்பான் எம் தலைவன்.

தரணியில் தமிழனை தலை நிமிர வைத்தவரே
தமிழனுக்கு ஓர்படையை உருவாக்கி நின்றவரே
மண் மானம் பெரிதென பாரறியச் செய்தவரே
விண்கூட வியக்கம் கரும்புலியைப் படைத்தவரே
வீரயுகமொன்றை மீண்டும் விதைத்தவரே
நீசருக்கெல்லாம் நெருப்பாய் இருப்பவரே
விடுதலைத் தீயை வளர்த்தெடுக்கும் தேவனே
வாழ்க பல்லாண்டு வாழ்க பல்லாணடு.

தர்மத்தின் தலைவனாய் வந்துதித்த எம் தலைவா
தமிழ்த்தாய் இப்போ இளநகை காட்டுகிறாள்
விரைவில் தமிழீழம் விடியும் என்பதனால்
காலத்தை நோக்கி மக்கள் காத்துக் கிடக்கின்றார்.
ஒவ்வொரு மனிதனின் பிறப்பிற்கும் அர்த்தம்
உள்ளதென்பதை உணரவைக்க எம் தலைவா
ஆண்ட பரம்பரை நாம் அரியணை ஏற்றி வைக்க
வாழ்க பல்லாண்டு வாழ்க பல்லாண்டு.

மண்ணைக் காதலிப்பதே உன்னதமென்று
உவகிற்குக் காட்டிய உத்தமத் தலைவனே
பெண்களின் உயர்வுக்காய் சரியாசனம் தந்து
ஓயாது உழைக்கின்ற அன்பான தலைவா
பரணி பாடுவோம் நாம் பரணி பாடுவோம்
தமிழீழப் பரணியை நாம் விரைவில் பாடுவோம்.
விடியும் கோலம் விரைவில் காண
வாழ்க பல்லாண்டு வாழ்க பல்லாண்டு.

துரைசத்யசீலன்
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத்துவத்தின் மாண்பு




ஆசிரியத்துவம் புனிதமானது, இப்புனித கைங்கரியத்தின் ஊற்றும் அடிநாதமுமாய் இருந்து அனைத்தையும் இயக்குபவர் இறைவனே. ஆசிரியர் நடமாடும் உலகமோ பாடசாலை எனும் இளமை வனப்புப்பொலியும் இனிய நறுமணப் பூங்காவாகும். அங்கு மலரும், ஒளிரும், உயிர்க்கும், வளரும், வாழ்வு பெறும் ஒவ்வொரு உயிர்களும் இறைவனின் தெய்வீகச் சாயல்களே, ஆசிரியர்கள் உலவுகின்ற பாடசாலைகள் எல்லாம் கோவில்களே, வகுப்பறைகள் எல்லாம் ஒவ்வொரு தெய்வீகபீடங்களே. இங்குதான் ஒவ்வொரு ஆசிரியர்களும் தங்களை நாளாந்தம் இறைவனுக்கு அர்ச்சனையாக்குகின்றார்கள். இந்த அர்ச்சனை பல தியாகங்களை இவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது.

மனிதனைப் புனிதனாக்கும் இறை பணியை ஆசிரியத்துவத்தின் வழியாக ஒவ்வொரு ஆசிரியர்களும் செய்கின்றனர். "வாழ்க்கைக்குத் தயாராக்கும்" இப்பணி பல பரிமாணங்களையும் உட்கட்டுமானங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதன் நடிபங்குகளோ பலப்பல. அதுவும் இன்றைய நவீன துரிதவீச்சுகளுக்கு மனிதனைத் தயாராக்கும். பாரிய பொறுப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றி உச்சப் பயன்பாடடிற்கு மாணவர்களை ஆற்றுப்படுத்தும் இப்பணியில் பங்கு கொள்ளும் ஆசிரியர்களும் ஆசிரிய வாண்மை நிறைந் திருப்பதோடு, தங்களைத் தற்காலப்படுத்திக் கொள்ளவேண்டும். **(Updating)**

ஆசிரியத்துவப் பணியினால் வெளிக்கொணரப்படும் ஒவ்வொரு மாணவர்களிடமும் "மனித நேயம்" மலர்ந் திருக்கவேண்டும். நாம் கற்பிக்கும் எல்லாக் கலைகளும் இம்மனித நேயத்தை மாணவர்களில் உருவாக்காவிட்டால் அப்பழியை சுமக்க வேண்டியவர்கள் ஒவ்வொரு ஆசிரியர்களுமே. இன்று ஆசிரியத்துவத்தில் "அர்ப்பணம்" என்ற புனித நோக்கமும், தன்மையும் வெகுவாகக் குறைந்து, வருவாயைத்தேடும் தொழிலாக மட்டுமே பலர் அதனைச் செய்து வருவது வேதனைக்குரியது. எங்கள் கைகளில் கடவுள் தந்த எல்லா மாணவர்களையும், குறிப்பாக உதிர்ந்த பூப்போன்றவர் களையும், உடைந்த மட்கலங்கள் போன்றவர்களையும், மடிந்தும் மடிய விரும்பாமல் உயிர்க்க விரும்பி ஏக்கப் பெருமூச்சுக்களோடு எம்மை அண்டி வருபவர்களையும் அணைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்தி, வாழ்வின் பொருளை உணர்த்தவேண்டியது ஆசிரியர்களின் மிக மேலான கடமையாகும்.

நாம் பாடசாலையில் கற்பிக்கும் எல்லா செயற்பாடுகளாலும் "உறவே மனிதம்; உறவே புனிதம்; உறவே தெய்வம்" என்ற தெய்வீக உயிரோட்டத்திற்குள் மாணவச் செல்வங்களை அழைத்து வராவிட்டால் 20, 30, 35, 40 வருடங்கள் நாம் கற்பித்துக் கண்ட பயன் என்ன?

எல்லாச் சூழலிலும் சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம், சுதந்திரம், போன்றவற்றை சரியான முறையில் புரிந்து கொள்ளும் பார்வையை மாணவர் மனங்களில், பாட அலகுகளுடன் சேர்த்து பட்டுணரவைப்பதும், தெய்வபக்தி, மனச்

**அருட்சகோதரி. மேரி. தஸ்நேவிஸ் லடிஸ்லாஸ்**
**அதிபர்**
**யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சி, மனிதநேயம், மனிதர்களை மதிப்பது, பணிவு, அன்பு, அமைதி, பண்பு, எளிமை, பொறுமை, உண்மை, மகிழ்ச்சி, பொறுப்புணர்வு போன்ற இன்னோரன்ன விழுமியங்களை விளங்கச் செய்வதில் அவர்களுக்கு ஒளி விளக்குகளாகத் திகழ வேண்டியதும் ஆசிரியர்கள் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும்.

பூக்கள் வசந்த காலத்திற்தான் பூக்கின்றன. பழங்கள் பருவகாலத்திற்தான் பழுக்கின்றன தடிகொண்டு அடித்து எதனையும் கனியாக்கிவிட முடியாது. ஒவ்வொன்றுக்கும் ஒரு பருவகாலம் உண்டு. எம்முடைய காலத்தில் கடவுளால் எமக்குத் தரப்பட்ட பிள்ளைகளை கடவுளுக்கும், மனிதருக்கும் உரிய வழியில் வளர்த்து விடும்போது கடவுளுடைய படைக்கும் பணியில் நாமும் பங்காளிகள் ஆகின்றோம். என்னால் என் ஆசிரியப்பணியில் ஓர் குழந்தை மகிழ்வாக, மனிதனாக இன்று உலகில் வாழ்கின்றது என்ற "ஆத்ம திருப்தி" ஓர் ஆசிரியருக்கு போதுமான புகழாரம் ஆகும். இன்றும் என்றும் 'ஆசிரியர் மாணவர் உறவு" திருப்தியாக அமைய நாம் விழிப்புணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

இப்பணியின் பரந்த பரிமாணங்களை எழுத்துக்களில் எழுதுவதும், வார்த்தைகளில் வடிவமைப்பதும் இலகுவானதல்ல. கடவுளின் பணியான இப்பணியை தூய உள்ளத்துடனும், தெளிந்த சிந்தனையுடனும், கூரிய பார்வையுடனும், தூர நோக்குடனும், நேர்மையான மனச்சாட்சியுடனும், வீரியம் மிக்க மனத்துடனும், மகிழ்வாக ஆற்றும் போது தெய்வத்தைத்தேடி பல்வேறு இடங்களிற்கு அலையவேண்டிய தேவைகள் ஆசிரியர்களாகிய எம்மில் பலருக்கு இருக்காது என்று நான் நம்புகின்றேன். தெய்வதரிசனம் எம் பாடசாலை வகுப்பறையில் கண்சிமிட்டி என்னோடு தொடர்பு கொள்ளும். ஒவ்வொரு மாணவச்செல்வங்கள் மூலமாகவும் எம் வாழ்வை நிறைக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்போது அதுவன்றோ இறைவனின் தரிசனம் பெறும் இடமாகும். இதைவிட எமக்கு வாழ்வில் வேறு எந்தத் திருப்தி தான் வேண்டும்.

சுவாமி விவேகானந்தரின் இறை அனுபவ வாழ்வில் இருந்து வெளிக் கொணரப்பட்ட சில வரிகளை ஆசிரியர் களாகிய உங்களின் சிந்தனைகளில் சிதற விடுகின்றேன்: நவீன உலகின் போக்கு களினுள் [illegible] நம்பியோ விரும்பாமலோ சிக்கிக்கொண்டு பணியாற்றும் ஆசிரியர் களாகிய எம்மையெல்லாம் இவ்வார்த் தைகள் சரியான வழியில் நெறிப் படுத்தவும், மனமாற்றம் பெறவும் ஓர் உந்து சக்தியாக அமையும் என்று நம்புகின்றேன்.

**"தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள்,**
**அறியாமை மிக்கவர்கள், ஏழைகள்,**
**கல்வியறிவு அற்றவர்கள், சக்கிலியர்,**
**தோட்டிகள் அனைவரும்**
**உன்னுடன் இரத்தத் தொடர்புடைய**
**நெருக்கமான உறவினர்களே,**
**உன் உடன்பிறந்த சகோதரர்களே**
**என்பதை நீ மறந்து விடாதே."**

# விளக்கு

விளக்கு நீ விளக்கு
வையகம் வாழ விளக்கு
கல்வியை கற்க விளக்கு
காட்டிடும் வழியை விளக்கு
எம்மவர் வாழ்வை விளக்கு
ஏந்தும் புகழை விளக்கு
கற்றவர் வாழ்வை விளக்கு
கல்விக் கண்களை திறந்திட விளக்கு
உற்றவர் எமக்கு நீ விளக்கு
ஊரெல்லாம் உலாவர விளக்கு
நற்பணி புரிய விளக்கு
நயந்திதமை காக்க விளக்கு
நற்பணி புரிய விளக்கு
நயந்திதமை காக்க விளக்கு
ஒப்பிலா உயர்வு விளக்கு
ஓங்கு புகழ் அடைவாய் விளக்கு.



க. கேமலோஜினி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத் தாத்தா

ஈழநாட்டுப் புலவர் சரித வரலாற்றிலே மரபு பிறழாது பழமைக்கும், புதுமைக்கும் பாலமாகத் திகழ்ந்த ஒப்பற்ற புலவர்தான் நவாலியூர் சோமசுந்தரப்புலவர். தங்கமயமான தோற்றம். அகத்தினழகு அவர் முகத்தில் தெரியும். அகன்ற நெற்றியிலே அழகாக அமைந்த நீற்றின் முக்குறி இதன் நடுவே அமைந்திருக்கும் சந்தனத்திலகமும் குங்குமத் திலகமும் இவரைச் சிவப்பழகாகக் காட்டிநிற்கும் கையிலே காகிதமும், அழகான எழுதுகோலும் அவரை அழகு செய்யும். மெல்லிய வெள்ளிக் கம்பிகள் பதித்தாற் போன்று விளங்கிய இவரின் அழகார்ந்த தாடியோ காற்றிலசைந்து சோபிக்கும். இவர் வெண்டுகில் புனைந்து மெல்லென நடைபயின்று வருவதேயொரு தனியழகு. இவ்வாறான தோற்றமுடையவர்தான் தங்கத்தாத்தா என எல்லோராலும் அழைக்கப்படும் நம் நவாலியூர் சோம சுந்தரப்புலவர்.

இவர் 1878ம் ஆண்டு யாழ்ப்பாணத்து நவாலி என்னும் நற்பதியில் கதிர்காமருக்கும் இலக்குமிப்பிள்ளைக்கும் மூத்த புதல்வராக அவதரித்தார். இளமையிலிருந்தே கல்வி கற்கும் ஆர்வமுடையவராக விளங்கினார். ஆரம்பக் கல்வியை மானிப்பாய் அருணாசல உபாத்தியாயரிடமும் தொடர்ந்து மாரிமுத்து உபாத்தியாயர், இராமலிங்க உபாத்தியாயர்



"வாழ்க தமிழ்
வளர்க புலவர் புகழ்"

ஆகியோரிடமும் கல்வி கற்றுத் தேறினார். தமிழிலே பாட்டுப்பாட வேண்டும் என்ற எண்ணம் புலவருக்குப் பதினைந்து வயதில் தோன்றியபோது வைத்திலிங்கம் என்ற நண்பரின் வேண்டுகோளுக்கிணங்க ஆறுமுகமெனத் தொடங்கிக் கதியென முடியும் வெண்பாப்பாடலை பாடினார்.

கி.பி. 1899 ஆண்டு பங்குனி 24ம் நாள் வட்டுக்கோட்டையில் கலட்டி என்னுமிடத்தில் சின்னத்துரை ஆசிரியரும், புலவரும் சேர்ந்து ஒரு சைவாங்கிலப் பாடசாலையை ஆரம்பித்து நடத்தினார்கள். இதுவே இன்று வட்டு. இந்துக் கல்லூரியாக விளங்குகிறது. இங்கு 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகள் தொடர்ந்து கல்வி கற்பித்து மாணவர் மனதில் அழியா இடம் பெற்றார். தேவாரம் இசைத்தல், புராணம் படித்தல், பயன் சொல்லல், சமய தீட்சைகள் வைத்தல் ஆகிய பணிகளைச் செய்து 1983ல் பொற்கிழி வழங்கிக் கௌரவிக் கப்பட்டார். புலவருக்கு 21 வயதாகும் போது தென்னிந்தியாவிலுள்ள பெங்களூ ரிலிருந்து நவாலிக்கு வந்த சுப்பிரமணிய சுவாமிகளின் அருட்கடாட்சம் கிடைக்கப் பெற்றபோது இவருக்கு தம்பையா உபாத்தியாயரின் தொடர்பும் கிடைத்தது.

பின் 28வது வயதில் பெற்றோரின் விருப்பப்படி தாய்மாமனாரான சங்கு வேலியில் வாழ்ந்த வேலுப்பிள்ளை என்ப வரின் மகள் சின்னம்மையை திருமணம் செய்து மூன்று புதல்வர்களையும், இரண்டு புதல்விகளையும் பெற்றெடுத்து வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தனர். 1929இல் புலவருக்கு ஒரு கண்ணோய் ஏற்பட்டது. கதிர்காமக்கந்தன் மீது ஒரு சிலேடைவெண்பா பிரபந்தம் பாடி நோய் நீங்கப் பெற்றார். "சைவபாலிய சம போதனி" என்ற பெயரில் பத்திரிகை யையும் நடத்தினார். 30 வயதில் தனிப்பாடல்கள் பாடினார். இவை பத்திரி கைகளிலும் வெளிவந்து புகழ்பெறக் காரணமாயின. நவாலி அட்டகிரி முருகன் மீது "அட்டகிரி முருகன் கலம்பகம், அட்டகிரி வெண்பா, அட்டகிரி முருகன் ஊஞ்சல்பாட்டு" என்பனவற்றையும், நல்லூர் முருகன் மீது பாமாலையையும் பாடினார். சிறுவர்களுக்காக "பருத்தித் துறை ஊராம் பவளக்கொடி பேராம், ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை, கத்தரித்தோட்டத்து மத்தியிலே, வீமா வீமா ஓடிவா" ஆகிய பாடல்களைப் பாடினார்.

புலவர் 15,000 இற்கு மேற்பட்ட செஞ்சொற் கவிதைகளைப் பாடியுள்ளா ரெனினும் இவற்றுள் பல கவிதைகள் நூல்களாகக் காட்சியளிக்கின்றன. இவற்றுள் "கதிரைச் சிலேடை வெண்பா, சிறுவர் செந்தமிழ், தாலவிலாசம், இலங்கைவளம்" என்பவை பிரதான மானவை. "உயிரிளங்குமரன்" என்னும் நாடகத்தை எழுதி நடிப்பித்துப் பலரது பாராட்டுக்களையும், பரிசில்களையும் பெற்றார். தந்தையின் இறப்பின் ஞாபக மாக "தந்தையார் பதிற்றுப்பத்து" என்ற நூலை எழுதினார்.

நவாலி, ஆனைக்கோட்டை, சுது மலை, வட்டுக்கோட்டை ஆகிய இடங் களில் சைவ வாலிபர் சங்கங்களை உருவாக்கினார். யாழ். நவாலி மகாவித்தி யாலயம் தோன்றுவதற்கும், வளர்ச்சி பெறுவதற்கும் பெரும்பங்காற்றினார். பாட சாலையில் மட்டுமல்லாது வீடுகளில் வகுப் புகளை நடாத்தி மாணவர்களை ஊக்கு வித்தார். ஆலயங்களில் சைவ சித்தாந்த விளக்கங்களையும், சமய அனுட்டா னங்கள் பற்றிய விளக்கங்களையம் செய் தார். இவரது பிற்பட்டகாலத்தில் நோய் வாய்ப்பட்டிருந்தும் தமது பணிகளைத் தவறாது செய்துவந்தார்.

நாம் எல்லோரும் ஒற்றுமையாகவும் இன, மத, மொழி வேறுபாடின்றி அன்புடனும், ஜீவகாருண்யத்துடனும்,

**திருமதி. அ. பாலகிருஷ்ணராசா**
**ஆசிரியர்**
**நவாலி மகாவித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையாகவும், எளிமையாகவும் வாழ வேண்டும் என வாழ்ந்து காட்டிய இப் பெரியார் 1953 ஆம் ஆண்டு இறைபத மெய்தினார்.

பல அருஞ்செயல்கள் புரிந்த இப்பெரியாருக்கு ஒரு சிலை அமைத்துக் கௌரவிக்கவில்லையே என்ற குறைபாடு நெடுங்காலமாக இருந்து வந்தது. இக்குறைபாட்டை நிவர்த்திசெய்யும் முகமாக நவாலி மகாவித்தியாலய மானது புலவருக்கு சிலையமைத்து கௌரவிப்பதில் பெருமகிழ்வெய்து கின்றது.

புகழோடு தோன்றிப் புகழோடு மறைந்த "தங்கத்தாத்தா" என சிறப் பிக்கப்படும் நம் நவாலியூர்ச் சோம சுந்தரப்புலவர் இன்று எம்மத்தியில் இல்லையாயினும் இவர் தம் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.

# இலக்கணம் கற்பித்தல்

நாம் இன்று கற்பிக்கும் இலக்கணம் எந்த அளவுக்குப் பிள்ளையின் மொழிக் கையாளுகைக்கு உதவுகின்றது. என்பதே பிரதான விடயமாகும். பிள்ளை தான் பயிலும் இலக்கணத்தைக் கொண்டு மொழியை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தும் திறனை வளர்க்கவேண்டும். ஆனால் இதற்கு எந்த அளவுக்கு நாம் பயிற்றும் இலக்கணம் உதவுகிறது?.

நாம் பயிற்றுவது பெரும்பாலும் மொழி பற்றிய தகவல்களே! இந்தத் தகவல்களிற் பல இந்த வகுப்பு நிலைகளுக்கு அப்பாற்பட்டவை. பிள்ளை அவற்றை மனனம் செய்யலாமே தவிர விளங்கி உள்வாங்கிக் கொள்ளமுடியாது. இதுமாத்திரமல்ல நாம் இலக்கணத்தைப் படிப்பிக்கும் முறையின் விதிமுறையானது. வைத்தியர் ஒருவர் நமது நோய்க்கு இன்ன மருந்தைச் சாப்பிடுங்கள் என்று விதிப்பது மாதிரி, நமக்கு நோய் என்னவென்றும் தெரியாது. இந்த மருந்து அதை எப்படிக் கட்டுப்படுத்துகிறது என்பதும் தெரியாது. ஆனால் மற்றைய பாடங்களைப் படிப்பிக்கும்பொழுது மாணவர்களுக்கு அவற்றை நாம் காரணகாரியத் தொடர்புகளோடுதான் படிப்பிக்கின்றோம்.

எனவே இங்குள்ள பிரச்சனை இலக்கணம் வேண்டாம் என்பதல்ல. இலக்கணம் என்பது என்ன? அந்த இலக்கணத்தில் இந்த வகுப்பு மாணவர்கள் அறியவேண்டியவை யாவை? என்பதை விளங்கிக்கொள்வதே முக்கியமானதாகும். இலக்கணம் என நாம் இன்று கற்பிப்பவற்றுட் பெரும்பாலானவை உண்மையான, நியமமான இலக்கணத்துக்குள் வரா. இலக்கணம் என்பது சொற்களின் அமைப்பொழுங்கில் காணப்படும் நியமம் பற்றியதாகும். இந்த அமைப்பொழுங்கிலேதான் வாக்கியத்தின் பொருள் தங்கியுள்ளது. வாக்கிய அமைப்பில் சொற்கள் அமைந்துள்ள முறையில், சந்த அமைப்பு முறையில் ஒரு பயன்பாடு உள்ளது. அந்தப் பயன்பாட்டை விளங்கிக்கொள்ளும் வகையிலேதான் இலக்கணம் அமைதல் வேண்டும்.

- பேராசிரியர் கா. சிவத்தம்பி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "விளக்கு" தாளிகை நடாத்திய உலக ஆசிரியர் நாள் கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்ற கவிதை



# கற்கை நன்றே

ஆராரோ சொல்லவொரு தொட்டிலில்லை
ஆவன்னாப் படிக்கவொரு பள்ளியில்லை
ஊரென்று சொல்லவொரு இடமுமில்லை
உயிருக்கும் கூடத்தான் உறுதியில்லை

பட்டங்கள் பதவியெலாம் எமக்கெதற்கு
படிப்பதற்கு ஏற்றவழி கண்டால் போதும்
கட்டடங்கள் கலகத்தால் நொறுங்கிப் போச்சு
கற்பதற்கு காட்டுமர நிழலேயாச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்கள் கற்பதற்காம் சாதனங்கள்
பைநிறையக் கொண்டு வர வசதியில்லை
எத்தனையோ தடவைகள் இடம்பெயர்ந்து
எதைப் பாதுகாப்பதென்று புரியவில்லை

பாடங்கள் பலவுண்டாம் படிப்பதற்கு
படிப்பிக்க ஆசிரியர் பற்றாக்குறைதான்
ஆடல்கள் பாடல்கள் விளையாட்டெல்லாம்
அனுபவிக்க எங்களுக்கு வாய்ப்புமில்லை

கொந்தளிக்கும் கடல்மீது ஓடம்போல
குழம்பிப்போய் வாழ்கின்றோம் இருட்டினுள்ளே
கந்தலுடை கால்வயிறு இருந்தும் உரிமைக்
குரல்கொடுக்கத் தயங்காத வீரம் வாழ்க

எப்போதும் கூனிப்போய் இருக்கலாமோ
எழவேண்டும் தியாகிகளாய் வேகம் கொண்டு
துப்பாக்கி இப்போதே வேண்டாம் கல்விச்
செல்வத்தை ஏந்திடுவோம் பிச்சை புகினும்

எம். வீ. எஃப். ஸூல்ஃபிகா
ஹொ/ அல்கஸ்ஸாலி மத்திய கல்லூரி,
அட்டுலுகம,
பண்டாரகம.

---

**எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்**
**பொய்யா விள்க்கே விளக்கு.** திருக்குறள் -

"புறத்திருளைப் போக்கும் விளக்குகள் எல்லாம் விளக்காக மாட்டா, மனத்திருளைப் போக்கும் பொய்யாமையாகிய விளக்கே சான்றோருக்கு விளக்காகும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிரித்திருங்கள்.

## இது யாரை ஏமாற்றுவது?

வியாபாரி ஒருவன் ஆண்டவனிடம் ''ஆண்டவா எனக்கு ஒரு இலட்சம் ருபாய் கிடைக்க அருள் புரிவாய். அப்படி நீ அருளினால் உனக்கு காணிக்கையாக ஐம்பதாயிரம் ருபா உங்கள் உண்டியலில் போட்டு வீடுகிறேன். இது சத்தியம்'' என்று வேண்டிக்கொண்டான்.

இவ்வாறு வேண்டினாலும் மனதளவில் அவன் ஒருவேளை ஆண்டவன் அருளி விட்டால் ஐம்பதாயிரத்தை உண்டியலில் போடுவதா, இல்லையா என்று இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தான்.

அவன் வீட்டுக்குச் சென்றதும் உண்மையிலேயே அதிஷ்டலாபச் சீட்டில் அவனுக்கு ருபா ஐம்பதாயிரம் பரிசு கிடைத்திருப்பதை அறிந்தான். உடனே அவன் ''ஆண்டவா எனக்குத் தர்மசங்கடம் ஏற்படாமல் இருக்க நீங்களே ஐம்பதாயிரம் ருபாவைக் கழித்துக்கொண்டு மீதியை எனக்குத் தந்துவிட்டீர்கள். உங்கள் கருணையே கருணை'' என்று கடவுளை மெச்சினான்.

**மாவுறையூரான்**

## யாருக்கு அதிக பசி?

அரண்மனையில் நடந்த ஒரு விருந்தில் பீர்பால் அக்பருக்கு அருகில் அமர்ந்திருந்தார். அக்பர் பீர்பாலைக் கேலி செய்ய விரும்பினார்.


யாருக்கும் தெரியாமல் அவர் தமது உணவுத் தட்டில் இருந்த வாழைப்பழத் தோல்களை பீர்பாலின் தட்டில் போட்டுவிட்டு ''இன்று பீர்பால் மிகுந்த பசியில் இருக்கிறார்போல் இருக்கிறது. அவர்களுடைய தட்டில் சாதாரணமாய் இருப்பதைவிட வாழைப்பழத் தோல்கள் இரண்டு மடங்காக அதிகரித்திருக்கின்றன'' எனக் கூறினார்.

பீர்பாலும் சற்றும் சளைக்காமல் உடனே ''என்னை விட அரசருக்குத்தான் அதிக பசி என்று நினைக்கிறேன். ஏனெனில் அரசரது தட்டில் தோலைக்கூட காணவில்லையே'' என்று அமைதியாகக் கூறினார்.

✣✣✣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொழில் வாண்மை என்பது ஏனைய தொழில்களில் செல்வாக்குச் செலுத்திய அளவுக்கு கல்வியில் செல் வாக்குச் செலுத்தவில்லை என்ற குறை பாடு கல்வியியலாளர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது. செய்யும் தொழிலின் வாண்மையை நன்கறிந்து செயற்படும் மருத்துவத்துறை, சட்டத்துறை, பொறியி யற்றுறை, கணக்காய்வுத்துறை போன்று ஆசிரிய வாண்மைத்துறை வளர்ச்சிய டைந்ததாக இல்லை என்றே கருதப் படுகிறது.

ஆசிரியவாண்மை என்பது மிக முக்கியமானது. ஆசிரியப் பண்புகள் என்று நாம் கருதும் பொழுது, சிலமுக்கிய அம்சங்கள் நமது மனதில் தோன்றும் பல ஆண்டுகளுக்கு முன்பு கிராமப் புறங் களில் ஆசிரியர் ஒருவரை பிறிதொருவர் "இவர் ஓர் ஆசிரியர்" என்று அறிமுகம் செய்யாமலேயே நாம் கண்டு கொள்ளக் கூடியதாயிருந்தது. அவர்களின் பேச்சிலும், நடத்தையிலும், பண்பிலும் இவற்றை நாம் காணலாம். இன்றும் சில இடங்களில் இதைக் காணலாம். இவ்விதமான ஆசிரியர்கள் பெரியதொரு பொறுப்பு தம்மிடம் விடப்பட்டுள்ளது. என்றும் தம்மிடம் பயிலும் மாணவர்கள் தமது சொந்தப் பிள்ளைகளே என்றும் சதா சிந்திப்பவர்களாகவே காணப்படுவர். இதனாலேயே ஆசிரியத்தொழில் "ஒரு நாட்டைக் கட்டியெழுப்பும் தொழில்" எனக் கருதப்பட்டது. "கேத்திர கணிதம் தெரியாதவர் பல்கலைக்கழகத்துக்குள் நுழையக் கூடாது" என்று பிளேட்டோ குறிப்பிட்டது போன்று தொழில் வாண் மையை விளங்கிக் கொள்ளாதவர் ஆசிரியர் பணியில் ஈடுபடக்கூடாது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியத் தொழிலின் வாண்மை தொடர்பாக நன்னூலாரே நமக்கு சிறப் பாக எடுத்தியம்பியுள்ளார். நல்லாசிரி யனின் பண்புகள் பற்றி அவரால் குறிப்பிடப்படுகிறது. 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' தான் இன்றைய எமது தேவை. உலகம் துரித வேகத்தில் பல்வேறு மாற்றங்களைக் கண்டு வருகிறது. புதிய சிந்தனைகளும், உபகரணங்களும், உத்திகளும் தினமும் மாறிய வண்ணம் உள்ளன. தொழில்நுட்ப விருத்தி, தகவல் தொடர்பு சாதனங்கள் என்பவற்றால் கருத் துக்கள் கடத்தப்பட்ட வண்ணம் இருக் கின்றது. இந்நிலையில் காலத்தின் தேவைக்கு ஏற்ப நவீன கருத்துக்களு டனும், உடனடித் தகவல்களைத் தரக் கூடிய திறனுடனும் நம்ப கமும், தகுதியும் கொண்டவர்களாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசிரியர் ஒருவர் அடிப்படையான தொழில் சார் திறன்களையும், அறிவுசார் உள்ளடக்கத்தையும் பெற்றுவிட்டால் அவர் தொழிலில் வெற்றி பெற்றுள்ளார் என நாம் கருத முடியாது. ஆசிரியத் தொழிலானது தொடர்ச்சியான சவால் களைக் கொண்டுள்ளது. இவற்றில் சிலவற்றை நாம் முன்கூட்டியே உணர லாம். சில சவால்கள் எதிர்பாராத நிலையில் வருவனவாகும். பெரும்பாலான சவால்களை எதிர்கொண்டு வரும் பிரச்சி னைகளுக்கு முகங்கொடுக்காத ஆசிரி யரை தொழிலில் வெற்றி பெற்றவராகக் கருதமுடியாது. எனவே வெற்றியடைந்த ஆசிரியர் ஒருவர் இச்சவால்களை எதிர் கொள்ளக்கூடிய வகையில் வாண்மை ரீதி யான ஆயத்த நிலையில் உள்ளவராக இருப்பர்.

இலங்கையில் இன்று நடை முறைப்படுத்தப்படும் புதிய கல்வி மறுசீர மைப்பிலும் கூட ஆசிரியத் தொழில்சார் விருத்திக்கான பல்வேறு விதப்புரைகள் முன்மொழியப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் தொழில்வாண்மை விருத்திக்காக ஆசிரியர் களுக்கு தொழிலில் ஈடுபடு முன்னர் வழங்கப்படும் முன் சேவைப் பயிற்சியும், தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது வழங் கப்படும் தொடருறு பயிற்சிகளும் சேவைக்காலப் பயிற்சிகளும் ஆசிரிய வாண்மை விருத்தியை வளங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆசிரியர் தமது தொழிலைச் செய்கையில் அத்தொழிலுக்குரிய சிறப்புத் தேர்ச்சியை பெற்றிருக்க வேண்டும். அதாவது தமது கற்பித்தல் செயல்முறை யின்போது தமது மாணவர்கள் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் திறன்களைப் பெறுவதற்கு வேண்டிய தகுதியையும், அதற்குரிய தேர்ச்சியையும் கொண்டிருத் தலாகும். ஐக்கிய அமெரிக் காவில் எதிர்கால ஆசிரியர் தொடர்பாக கல்வி ஆணைக்குழு ஆனது "நல்லதொரு ஆசிரியர் குழாம் இன்றி நல்லதொரு பாடசாலையை உருவாக்கமுடியாது." என விதப்பரை செய்துள்ளது. அதாவது நல்லாசிரியர் இன்றி நாட்டில் கல்வி விருத்தியடையாது என்பதாகும்.

காலத்தின் தேவைக்கேற்ப மாறிவரும் சமூகத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு கல்வி மறுசீர மைப்புகள் நடைமுறைப்படுத்தப்படு கின்றன. அவ்வாறான புதிய செயற் பாடு களில் உயரியபயனைப் பெறுவதற்கு புதிய அறிவு, புதியதிறன்கள், நவீன தொழில் வாண்மை உத்திகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரியகுமாரி ஜெயவீரசிங்கம்.

அதிபர், யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.

ஆசிரியர்கள் உள்வாங்க வேண்டியவர்களாக உள்ளனர். உதாரணமாக இன்று கணினிக் கற்கைக்கான பயிற்சிநெறிகளுக்கு ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டுப் பயிற்றப்படுகின்றனர். இது பரவலாக்கப் படவேண்டும். நாட்டின் சகல பாடசாலை ஆசிரியர்களும், பெறத்தக்க வகையில் அவை விரிவுபடுத்தப்பட வேண்டும். வளர்ச்சி அடைந்த நாடுகளில் மாணவர்களின் கற்றல் கற்பித்தலை வினைத்திறனாக்குவதற்கு தொடர்பாடல் தொழில் நுட்பத்தை பெருமளவுக்குப் பயன்படுத்துகின்றனர். அதேபோல் இங்கும் ஆசிரியர் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் உயர்திறனைப் பெறுவதற்கு பயிற்சிகள் வழங்கப் படவேண்டும்.

### ஆசிரியர் எதிர்நோக்கும் நடைமுறைப் பிரச்சினைகள்:-

* மாணவர்களின் பயிற்சிகளைத் திருத்துவதில் நேரப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர்.
* மாணவர்களின் வரவு ஒழுங்கீனம் தொடர்பான பிரச்சினைகள்.
* மாணவர்களுக்கிடையிலான சச்சரவுகள், முரண்பாடுகள் வளர்தல்.
* சில பாடசாலைகளில் நிர்வாக ரீதியாக போதியளவு உதவியின்மை, பலவீனமான நிர்வாகமும், வழிகாட்டலும்.
* ஆசிரியரின் திருப்தியற்ற வேலை நிலைமைகள்
* உபகரணங்கள், பாடப்புத்தகங்கள், நிதிப்பற்றாக்குறை.
* அதிகளவு மாணவர்களைக் கொண்ட வகுப்பறை.
* குறைந்து செல்லும் மாணவர்சேர்வு.
* பெற்றோர், பழையமாணவர் ஆதரவின்மை.
* ஆசிரியரிடம் போதிய உளவியல் அறிவின்மை.
* பொருத்தமற்ற வகுப்பறைகளின் நிலை.

### நல்லாசிரியரின் பண்புகள்:

* மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முழுப்பொறுப்பையும் ஏற்பவர் ஆசிரியராவார். அவர் தம் கடமையைச் சரிவர நிறைவுசெய்வதற்கு பல வகைப்பட்ட நன்மனப் பாங்குகளை உடையவராக இருக்க வேண்டும். ("டொன்வெஸ்லி" என்பவர் ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் மரபுரீதியான முக்கிய மனப்பாங்குகள் பலவற்றை அடையாளங்கண்டுள்ளார்.)
* தாம் கற்பிக்கும் மாணவர்மீது கொண்டுள்ள அக்கறையும், கருணையும் அவர்கள் தம் தொழிலில் கொண்டுள்ள பற்றுறுதியை வெளிப்படுத்துவதாக அமைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தமது பணிக்கான வகைகூறும் பொறுப்பை ஆசிரியர் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆசிரியர் மாணவர்கள் தொடர்பான விடயங்களில் அவதான மாக இருப்பதோடு அவர்களின் அடைவு தொடர்பான விடயங் களுக்கு விளக்கம் அளிக்கும் மனப் பாங்கை வளர்த்தல் அவசியமாகும்.

* கற்பித்தல் செயற்பாடுகளை சிறந்த முறையில் ஒழுங்குபடுத்திக் கொள்வதன்மூலம் வகுப்பறையில் உகபபானதொரு சூழ்நிலையை உருவாக்குதல் வேண்டும். பல்வேறு பாடங்கள் தொடர்பாகவும் அவ்வ வற்றிற்கு பொருந்தும் விதத்தில் வகுப்பறைச் சூழ்நிலையை சிறப்பாக அமைத்துக்கொள்ளல்.

* சினேகபூர்வமானதும் நகைச்சுவை யுணர்வுடன் கூடியதும் சுவாரசிய மானதும் நியாயபூர்வமானதுமான சிறப்பான ஆசிரியர், மாணவர் இடைத்தொடர்புகளைப் பேணல்.

* மாணாக்கர் இலகுவாகக் கிரகித்துக் கொள்ளக்கூடிய விதத்தில் கற்பிக்கவிருக்கும் பாட உள்ளடக் கத்தினை அமைப்பாக்கி, ஒழுங்கு படுத்தி, இலகுவாக்கி வழங்குவதன் மூலம் கற்றலை தனதாக்கிக் கொள்ளுதல்.

* கற்றலுக்கு வழிகோலும் வகையிலான பாராட்டுதல் (புகழுதல்) போன்ற ஊக்குவிப்பு வழிகளைப் பயன்படுத்துதல்.

* கற்கும் விடயங்களை நன்கு தெளிவுபடுத்திக் காட்டுவதற்கு முயலுதல்.

* பாடத்தைக் கற்பிக்கும்போது மாணாக்கரைப் பல்வேறு பாடம் தொடர்பானசெயற்பாடு களிலும் ஈடுபடுத்துதல்.

* மாணாக்கரை சுயகற்றலில் ஈடுபடு மாறு ஊக்குவித்தலுடன். தாமும் தொடர்ந்து கற்பதில் ஈடுபாடு கொள்ளுதல்.

* வகுப்பிலும், பாடசாலையிலும் ஒழுக் காற்றைப் பேணுபவராக இருத்தல்.

* பாடங்கள் தொடர்பான பிரச்ச னைகள், மாணவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகள் என்பவற்றை விளங் கிக்கொண்டு அப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உதவும் பண்புள்ளவராக இருத்தல்.

* ஆசிரியர் தாம் கற்பிக்கும் குறிப் பிட்ட பாடம் தொடர்பாக சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்கக்கூடும். ஆயினும் அவர் தம் பாடங்களை கற்பிக்கமுன் திட்டமிடல் அவசிய மாகும். திட்டமிடாமல் கற்பிப்பதால் அப்பணி சிறப்படையாது தோல்வி யடையும்.பாட உள்ளடக்கம் பற்றியும், கற்பிக்கும் நுட்பமுறை பற்றியும், ஒழுங்கமைப்பு முறை பற்றியும், வகுப்பறையில் சமூக, பௌதீக, சுற்றாடல் பற்றியும், ஆசிரியர், மாணவர்கள் கற்பித்தல் செயற்பாடுகள் பற்றியும் முன்னரே செய்யவேண்டிய முக்கியத் தீர்மா னங்கள் பல உள. இதனாற்தான் திட்டமிடல் அவசியமாகின்றது.

உளவியல் கற்ற ஒரு ஆசிரி யரையும், கற்காத ஒரு ஆசிரியரையும் அவர்கள் கற்பித்தலில் ஈடுபடும்போது இலகுவில் அடையாளங் காணமுடியும். பிள்ளைகளுடன் சேர்ந்து இயங்கும் முறை, சுவையான விடயங்களை முன் வைக்கும் முறை என்பவற்றில் இவ்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகளை அவதானிக்க முடியும். சிறந்த ஆசிரியராக அமைவதற்கு உளவியல் அறிவு அவசியம்.

ஆசிரியரகள் பாடசாலைகளில் வழங்கப்படும் பல்வேறு பொறுப்புக் களையும் ஏற்று செயற்பட வேண்டும். இணைப்பாடவிதான செயற்பாடுகளின் வளர்ச்சியில் ஒவ்வொரு ஆசிரியனதும் பங்களிப்பு அவசியம். அவர்கள் தமக்கு வழங்கப்படும் பொறுப்புக்களை ஏற்று அதனைச் சரிவரச் செய்யும்போது தொழில் வாண்மைச் சிறப்பை அடைகின்றனர்.

ஒவ்வொரு ஆசிரியரும் பணியாற்றும் போது பல்வேறு தனியாட்களுடன் சிறந்த தொடர்பாடலை வைக்க வேண்டியதாக உள்ளார். மாணவர்கள், ஆசிரியர்கள், பகுதித்தலைவர்கள், சேவைக்கால ஆலோசகர்கள், கல்வி அதிகாரிகள், பெற் றோர், பழைய மாணவர், போன்றோரிடம் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது அவசியம். முக்கியமாகப் பாடசாலை அதிபருடன் அவர் கொள்ளும் சுமுகமான உறவு அவரின் சிறந்த செயற் பாடு, வாண்மை விருத்தி என்பவற்றுக்கு வழிவகுக்கும். எனவே தமது பாடக் குறிப்பு, பாடப்பதிவுகள், கணிப்பீடுகள், அதிபரால் வழங்கப்படும் மேலதிக செயற் பாடுகள் என்ப வற்றை திறம்படச் செய்து நற்பெயரைப் பெறுவதன்மூலம் தன் தொழில் வாண்மையை விருத்தி செய்யலாம்.

மேலும் கற்பித்தல் செயற்பாட்டின் போது ஆசிரியர் சிறந்த வகுப்பறை முகா மைத்துவத்தை கடைப்பிடிப்பவராக இருத்தல் வேண்டும். வகுப்பறை ஒழுங்கு, அமைதி, கட்டுப்பாடு என்பவற்றை முறையாக நடைமுறைப்படுத்தி சிறப்பான கற்பித்தலுக்கு வழியமைத்தல் அவசியம்.

முடிவாக ஆசிரிவாண்மை என்பது வகுப்பறையில் இடம்பெறுகின்ற செயற் பாடுகளையே பெரிதும் வலியுறுத்து கின்றது. வினைத்திறனுள்ள ஆசிரியன் ஒருவன் வினைத்திறனுள்ள கற்பித்தலை மேற்கொள்ளுவதிலேயே அவனது தொழில் வாண்மை மேலோங்கி நிற் கின்றது. ஆசிரியர் தமது நேரடி நுகர்வோ னான மாணவனின் தேவைகளை அறிந்து அதற்கேற்ற வகையில் வகுப்பறையை நெறிப்படுத்துவதன்மூலமே வாண்மை விருத்தி அர்த்தமுள்ளதாகின்றது.

## "குருவிச்சை மனிதர்கள்"

**பொன்னின் மதிப்பு பெரியது என்பர் - இந்த**
**மண்ணின் மதிப்பு அறியாத மனிதர்**
**மண்மீட்புநிதி நினைந்து மனவருத்தம் சிலர்க்குண்டு - இங்கு**
**தம்முயிர் தமையீந்து மண்மீட்கப் பலபேர் உண்டு**
**"குருவிச்சை மனிதர்கள்" குறைதீரும் நாளில் - நம்**
**குலமோங்கித் தமிழீழம் முழு வெற்றி காணும்**

தமிழ்நெறி மே. 2004 கோலாலம்பூர் மலேசியா இதழிலிருந்து...

**மு. தமிழரசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகியல் கல்வி மூலம் ஆரோக்கிய சமூகம் படைப்போம்.




**கலைக்கல்வியும். பாடசாலைகளும்.**

கலைக்கல்வி மூலம் கல்வியில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தமுடியும். உயர்ந்த மனிதப்பண்புகளையும், சிறந்த ஒழுக்க விழுமியங்களையும் இதன் மூலம் பெற்றுக்கொடுக்கலாம் என்பதும் ஆய்வாளர்கள் கருத்தாக உள்ளது. இன்றைய நவீன கல்வியியற் போக்கில் கலைகளோடு இணைந்த கல்வியே நிலையான தாக நிருபணமாகிறது.

மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர இக்கலை மூலம் அறிவு வளர்ச்சியை முதலாகக் கொண்டு தோன்றும் ஆளுமையும் வளர்ச்சி அடைகின்றது. சுதந்திரமான எண்ணங்களையும், கருத்துக்களையும் சொல்வதற்கான பரப்பாக இக் கலைக்களம் அமைகின்றது. பாடசாலைப் பாடத்திட்டத்திலுள்ள ஏனைய பாடங்களிலும் பார்க்க அறிவுப்புலமும், ஆற்றல் வளமும், உளஇயக்கமும் உரிய முறையில் இணைக்கப்படுகின்ற பாடப்பரப்பாக அழகியல் விளங்குகின்றது.

1. அறிவு
2. திறன்
3. மனப்பாங்கு

நவீன கற்றல் கற்பித்தல் முறைகளில் கலைத்துவப்புகுத்தல்கள் இல்லாத கல்விச் செயற்பாடுகளை உப்பில்லா பண்டங்களாக உள்ளெடுக்கப்படுவது கண்கூடாகின்றது. கற்றலில் முழுமை அடைவதற்குரிய ஆதாரங்கள் கலைக்கல்வி ஊடாக நிருபணம் ஆகின்றது. பல்வேறுபட்ட சூழல் காரணிகளால் உளக்குறைபாடுகளும், பின்னடைவும் அடைந்த, அடைந்து கொண்டிருக்கின்ற எமது தேசக் குழந்தைகளுக்கு அழகியல் மூலமான அறிவூட்டல்கள் தகுந்த ஆற்றுப்படுத்தல்கள் ஆகின்றன.

எமது பாடசாலைகளிற் பெரும்பாலானவை கலைக்கல்வியினை இரண்டாந்தர நிலையில் வைத்துப்பார்க்கின்ற நிலை கவலைக்குரியது. போட்டிகளில் பங்கேற்பதற்கும், விருந்தினரை மகிழ்விப்பதற்குமான ஒரு தளமாகவும் இதனை மட்டுப்படுத்துவது வேதனை தருவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைக்கல்வி கவனிப்பாரற்றிருக்கும் பல நகர்ப்புறப் பாடசாலைகளின் பரீட்சை முடிவுகளில் இன்று ஒன்பது பாடத்திற்கு விசேட அல்லது திறமைச்சித்தி பெற்றும் ஓவியக்கலையில் ஒன்றுமில்லாத சித்தியீனத்தையே காண்கின்றோம். இக்கலைப் பாடப் புறக்கணிப்புகளால் வெறும் அறிவைமட்டும் பெற்று விளங்கிய திமிங்கலங்களாக வெளியேறும் மாணவ சமுதாயம், கலைக்கல்வி மூலம் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற மானுடப்பண்பு களையும், மனிதவிழுமியங்களையும் இழந்து, ஈற்றில் "ராக்கிங்" மன்னர்களாக மீதப்படுவதை காண் கின்றோம். கலைக் கல்வி மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற சமநிலை ஆளுமைவிருத்தி ஆரம்ப காலங்களிலிருந்தே வித்திடப்படுவதற்கு வழிப்படுத்துவது கல்விச் சமூகத்தினது கட்டாய கடமையாகும். ஆக்க வெளிப் பாட்டுத்திறன்,

ஆக்கபூர்வ சிந்தனை விருத்தி, அழகியல் ரசனை, உயர்ந்த மனப் பாங்குகள் என்பனவற்றை உருவாக்கக் கூடிய நோக்காக விளங்கும் அழகியற் கலையின் அற்புதங்களை அனைவரும் புரிந்து கொண்டு செயற்படுதல் அவசிய மாகிறது.

**தேச அடையாளங்களாகக் கலைகள்.**

உலகச் செல் நெறியில் கலை களின் பார்வையும், பங்கேற்பும், பல்வேறு பரிமாணங்களில் பரவிச் செல்கின்றது. கலைத்தேடல்கள் முளைவிட்டுக் கிளை விடுகின்றன. எமது பண்பியற் சுயங் களையும், தேச அடையாளங்களையும் நிலைநிறுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும், பேணுவதற்கும், கலைத்தழுவல்களே கைகொடுக்கும் காத்திரமான சாதனமாகும்.

சிந்து வெளியைச் சிந்தித்தால் சிதறிக்கிடக்கும் சின்னங்கள், ஏராளம் எகிப்திய நைல்நதியோ கலை வாழ்ந்த ஆயிரம் கதைசொல்லும், கிரேக்கமும் கூட காத்திரமான கலைப்படைப்புக்களின் எழிற் சோலையாகும். இவ்வாறு மேலைத் தேய மும், கீழைத்தேயமும் மேலான கலை சொல்ல நாம் கீழே தேயக்கூடாது. எமது கலைகளின் கால எச்சங்களில் என்புகள் மட்டும் மீதியாகக்கூடாது. எமது சுயங் களை நிலைநிறுத்தக் கூடிய கலை மரபு களைக் கட்டியெழுப்பக் கவனம் கொள்ள வேண்டும். காலம் கடந்தும் வாழ்கின்ற மௌரிய, ஆந்திர, குப்த, பல்லவ, சோழ, பாண்டிய கலைமரபுகள்போல் ஈழத்தமிழர் கலைமரபு வாழவும் வரலாறு சொல்லவும் வழிசமைக்க வேண்டும்.

உலகளாவிய ரீதியில் இன்றைய இனங்களெல்லாம் தமது தேசிய அடை யாளங்களைப் பாதுகாக்கவும், பேணவும், அவற்றை நிலைநிறுத்தவும் கலை களையே பெரிதும் நம்புகின்றன. தேசியத்தின் மூச்சும் பண்பாட்டு விழுமி யங்களின் பேச்சும் கலைத்தழுவலிலே நிலைத்திருக்கின்றன. யுனஸ்கோ நிறு வனம் தனது அண்மைய வெளியீடொன் றில் இதனையே தெளிவுபடுத்தியிருக் கின்றது. இன்றைய சந்ததியினருக்கு மொழி சார்ந்த விருத்தியோடு கலை இலக்கியம் சார்ந்த கல்விக்கு ஊடாக திறன்களையும் விருத்தியாக்க வேண்டி யுள்ளது.

**க. ரட்ணேஸ்வரன்**
விரிவுரையாளர்
யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய எமது பாடசாலைக் கல்விமுறை வகுப்பறைக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே பெரிதும் அமைந்து வருகின்றது. பரீட்சைகளை மையமாகக் கொண்டிருக்கும் இவ்வாறான கல்வி முறையால், வீடுகளிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும், மாணவர்கள் இயந்திரங்களாகி சுயம் இழந்தவர்களாக இயங்குகின்ற நிலமைகளை உணரக் கூடியதாக உள்ளது. இதனால் பிற்கா லத்தில் மாணவர்கள் சமூகத்திற்குப் பயன்தரு நல்லவர்களாகப் பண்பட இட மில்லை. சுயநோக்கோடு சமூகமானிடப் பண்புகள் மறைந்த மனிதர்களாகவே இவர்கள் மீதப்படுகின்றனர்.

## விழுமிய மேம்பாட்டில் அழகியல்

கல்வியில் சமநிலை ஆளுமை யுடைய மனிதர்களை வெளிப்படுத்தக் கலைக்கல்வி பெரிதும் பங்காற்றுகின்றது. தனிமனித அறிவு, மனவெழுச்சி, உள இயக்கம் என்பன சிறப்பான முறையில் முன்னேறுவதே சமநிலை ஆளுமைக் குரிய விருத்தியெனக் கொள்ளலாம்.

எமது சமூக எத்தனத்தின் வெற்றி யானது ஒவ்வொரு தனி நபரிலும் பொது உழைப்பிலும் தங்கியிருக்கின்றது. பலவித கருத்து வேறுபாட்டுக்குள் ஒத்துவருதல், ஒரு குறிக்கோளை நோக்கிக் கூட்டா கவும், நல்லெண்ணத்துடனும் முன்னேற்று வதற்காக தொழிற்பாட்டினை அமைத்தல், ஒவ்வொருவரது திறமைகளையும் மதித் தல், தலைமை தாங்குதல், விமர்சனங் களை சகித்துக்கொள்ளல் போன்ற சிறந்த மனப்பாங்குகளைத் தனி நபருள் விருத்தி செய்வது அழகியற் கல்விமூலம் எளிதாக ஏற்படுத்த முடிகின்றது.


பலவித உடல் உளக்குறை பாடுகள் நிறைந்துள்ள எமது சமூகத்தில் பொதுவேலையில் ஈடுபடும் திறமை வாய்ந்த தலைமைத்துவம் அவசியமாகும். தொடங் கும் ஆற்றலுடன் கூடிய தலைமைத்துவக் குணங்களை விருத்தி செய்கின்ற ஒரு புலமாக அழகியல் விளங்குகின்றது.

மனிதன், மனிதன் மீது அனு தாபப் பார்வையைச் செலுத்தினாற் தான் அத்தகைய மனித சமூகமொன்றில் வாழ்தல் ஆறுதலளிக்கும் இன்று எமது சமூகப் போக்குகளை உய்த்தறிகின்ற போது பல்வேறுபட்ட பிறழ்வுகளை அவதா னிக்க முடிகின்றது. சமூகமட்டத்தில் கிளர்ந் தெழுகின்ற இவ்வாறான பிறழ்வுக்கு இளவயதினரே காரணகர்த்தாக்களாக அமைகின்றனர்.

நாளாந்த செய்திகளை அறிகின்ற போது பல்வேறுபட்ட வன்முறைச் சம்பவங் களும், சமூகச் சீரழிவுகளும் இல்லாமல் இல்லை. பழிவாங்கும் படலங்கள், கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், பாலியல் வன்முறைகள், பெற்றோரை ஆசிரியரை மதிக்காமை, அவர்களைக் கனம் பண்ணாமை போன்ற பல்வேறுபட்ட கவலைக்கிடமான சம்பவங்கள் நடந்தேறு கின்றன. இதற்கிடையில் தென்னிந்திய சாக்கடைச் சினிமாக்களும், உள்ளூர்த் தொலைக்காட்சி, வானொலி ஊடகங் களும், இளையோர் யுகத்தை வெறும் கற்ப னைப் பெட்டகங்களாகவும் களியாட்ட மன்னர்களாகவும் பெரிதும் உருவாக்கி உள்ள சூழ்நிலையில், வெளிநாட்டுப் பண மிகுதியால் மோட்டார்ச்சைக்கிள் பவனி களும், "கைத்தொலைபேசி" கவர்ச்சிகளும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவ்வாறான போக்குகளுக்குப் பல்வேறுபட்ட அரசியல், பொருளாதார சூழ்நிலைகளை மட்டும் காரணங்களாகக் காட்டுதல் பொருத்தமானதன்று. இளைஞர் களை இங்கிதப் பண்புடன் வாழ்வதற்கும், சமூகத்தில் உயர்ந்த, உகந்த மதிக்கக் கூடிய மனிதர்களாவதற்கும் அவர்களிடம் சிறந்த மனப்பாங்குகள் விருத்தியடைய வேண்டும். இன்றைய சமூகத்தையும், சமூகப் பிரச்சினைகளையும் அனுதாபத் துடன் நோக்குகின்ற மனிதனாக வேண்டும். அன்பு, தயவு, கீழ்ப்படிவு, கருணை போன்ற சிறந்த குணங்களைச் சிறுபரா யத்திலிருந்தே ஊக்குவிக்க வேண்டும். இவ்வகையான மனப்பாங்குகளைப் பிள்ளைகளின் மனதில் பிறக்கச் செய் வதற்கு அழகியல் வழிகோலுகின்றது.

**அழகியற் கல்வி அருமருந்து**

அனுதாபமுடையதும், அழகானது மான எண்ணங்கள் விருத்தி அடைவது அழகியற் கல்வி மூலமாகும். சமூகத்தில் முரணான குரோதமும், பகை, பழிவாங்கல் போன்ற கெட்ட உணர்வுகளும் மறைந்து மனித ஆதரவும் கலையை நயக்கும் திறனுள்ள அறிவுள்ள மனிதர்களை வெளிப்படுத்துவதற்குக் கலைக்கல்வி பேருதவியாக அமைகின்றது. மனித இனத்தின் முன்னேற்றத்திற்காக தன்னடக்க முள்ள நற்பண்புகளைக் கொண்ட ரசனை யுள்ள மனிதப்பண்புகளைப் பெறுதலானது கலைக் கல்வி மூலமாகவே சாத்திய மாகின்றது.

சுற்றத்தையும், சுற்றாடலையும் நேசிக்கவும் மதிக்கவும் தெரிந்த ஒருவ னுக்கு இயல்பாகவே மனிதநேய விருத்தி ஓங்குகின்றது. மனிதன் தான் வாழும் பிரதேசத்திலும், நாட்டிலும் இயற்கை எழிலையும், உயர்ந்த அழகையும் நன்கு ரசிக்கவும், மதிக்கவும், பாதுகாக்கவும் நிலைபெறச் செய்யவும் அழகியற் கல்வி பெரிதும் உறுதுணையாகின்றது.

**அழகியற் கல்வி பற்றி அறிஞர்கள்.....**

"கலையானது தன்னலமும், பழிவாங்கல்களும் நிறைந்த உலகைவிட்டு நம்மை அப்பால் அழைத்துச் செல்ல வல்லது." என்கிறார் கலைஞானி ரவீந்திர நாத்தாகூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனிதனின் மனதில் அறிவின்மையையும், துன்பத்தையும் அகற்றிக்கலையானது இன்பத்தைத் தருகின்றது. வேண்டாதவற்றைக்களைந்து வேண்டிய மகிழ்ச்சியையும், ரசனை உணர்ச்சியையும், அமைதியையும் வளர்ப்பதே கலையென்பர்.

கலை, கருத்தின் உறைவிடம், அழகின் பிறப்பிடம், கற்பனையின் சிகரம், இன்பம் இதன் பயன், "நீ இரண்டு அப்பத் துண்டுகள் வைத்திருந்தால் ஒன்றைவிற்று லில்லிப்பூ வாங்கு" என்பது சீனப்பழமொழி. உடம்பை வளர்ப்பதற்கு உணவு இன்றியமையாததுபோல் ஆத்மீக வளர்ச்சிக்கு அழகியற் பொருட்கள் அவசியம் என்கிறது அப்பழமொழி.

கலாநிதி சபா ஜெயராசா அவர்கள் தனது 'அழகியல்' எனும் நூலில் குறிப்பிடுகையில் அழகு என்பது ஆய்வுப் பொருளாகிவிட்டது. கலைப்படைப்பை அது பாதிப்பதால் சுவைப்பவனது விளக்கம் மேம்படல், அனுபவங்கள் விருத்திபெறல், ஒழுக்கம் நல்லாற்றுப்படல், வாழ்வுப் பயன் மேலோங்கல் முதலியன எழும் விளைவுகளாகும் என்கின்றார்.

ஆகவே கல்வியில், அழகியலின் தேவைகளை உணர்ந்து அப்பரப்பிலே நின்று நிலைக்கவேண்டிய கருத்தூன்றல்களையும், செய்முறைகளையும் கரிசனையோடு பின்பற்றல் வேண்டும்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி எம்மண்ணின் கலைத்துறை வளர்ச்சிக்கு தம்மாலியன்ற பங்களிப்புக்களை ஆற்றுவதற்கான செயற்றிட்டங்களை வகுத்து செயலாற்றி வருகின்றது. இக்கல்லூரியில் கலைத்துறைப் பாடங்களான சங்கீதம், நடனம், சித்திரம், நாடகம் ஆகிய துறைப்பாட நெறிகளும் ஆரம்பமாகி மிளிர்கின்றன. இதன் மூலம் எமது பிரதேசத்தின் குழந்தைகளுக்கு கலைக்கல்வியை தாராளப்படுத்தக்கூடிய தளங்கள் உருவாகி உள்ளன. இதன் மூலம் உருப்படியான, உயிர்துடிப்புள்ள மனித வளத்துக்கு ஆதாரமாகும் கலைக் கல்விப் பயணத்தில் பங்கேற்போம்; பணி செய்வோம்.

"கலையோடு இணைந்த எம் கல்வி
நிலையாகப் பெருகிடும் பல்கி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆரம்ப வகுப்பு மாணவர்களிடையே
# உடற்கல்வி



உடல் நலம் பற்றி விளக்கிக் கூறும் கல்வியே உடற்கல்வியாகும். இங்கு உடல்நலம் என்பது உடலால், மனதால், சமூகவாழ்வில் நலமாக வாழ்வது ஆகும். உடல்நலத்துடன் வாழுகின்ற ஒருவர் தான் ஆற்றுகின்ற செயல்களை எல்லாம் சிறப்பாகச் செய்து முடிக்கும் திறன் பெறுகின்றார். தன்னைச் சார்ந்திருக்கும் அனைவருக்கும் தன்னாலான உதவிகளைச் செய்து திறம்பட வாழ்ந்திட உதவுகின்ற கல்வியாகவே உடற்கல்விப்பாடம் அமைந்து காணப்படுகிறது. இந்தவகையில் உடற்கல்விப் பாடத்தின் ஊடாக மூன்று முக்கிய விடயங்கள் ஒன்றிணைக் கப்படுகின்றன.

1. உடல்ரீதியான உறுப்புக்களின் திறன்நிலை
2. உளரீதியான ஆரோக்கியம்
3. சமூகரீதியான ஆளுமையும், சமூகப்பண்பும்


ஒரு நாட்டின் வளங்களுள் முதன்மையானதும் அழிவடையாததும் சமூக அசைவியக்கத்தை ஏற்படுத்துவது மான செல்வம் கல்விச் செல்வமாகும். மனிதன் தோன்றிய காலம் முதல் கல்வியும் அவனது வாழ்க்கையில் ஒரு அங்கமாக உள்ளது. கல்வியின் ஊடாக பல நோக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அறிவு விருத்தி, முழுவாழ்வுப் பயன், அறத்தையும், ஒழுக்கத்தையும் விருத்தி செய்தல், உகந்த நற்பிரஜையை உருவாக்குதல், ஆன்ம ஈடேற்றம், வாழ்க்கைக்கு வழிசமைத்தல் போன்றவற்றில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ நிறைவு செய்வதாக அமைகிறது. இப்பொதுக்கல்வியின் ஓர் அங்கமே உடற்கல்வியாகும் இங்கு இக்கல்வி நோக்கங்களின் ஊடாக உடல்நலம் பற்றியும், உறக்கம், ஓய்வு, நோய்களிலிருந்து விலகி வாழுதல், உடல்வலுவை அதிகரித்தல் போன்றவை உடற்கல்வியின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது. ஏன் எனில் உடல்நலம் உள்ளவரே முழுமனிதராக வாழமுடியும் அதனாற்தான் உடல்நலமும், உடற்திறனும் ஒரு உடலுக்கு இருப்பது இரு கரங்களைப் போன்றதாகும்.


**க. சத்தியபாலன்**
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற்கல்விப் பாடமானது பாடசாலைக் கல்வி கலைத்திட்டத்திற்கு உட்பட்டதாகவும் இணை கலைத்திட்டத்திற்கு உட்பட்டதாகவும் போதிக்கப் படுகிறது. அவை ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கானது, எனவும் இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கானது எனவும் இரு முறைகளில் கற்பிக்கப்படுகின்றது. இவற்றுள் பின்வரும் குறிக்கோள்கள் உள்ளடங்கியுள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட பொதுவான குறிக் கோள்களை நிறைவேற்றும் ஒரு செயற் பாட்டுக்கான பாடமாகவே உடற் கல்விப் பாடம் அமைந்து காணப்படுகிறது. இவற்றின்மூலம் ஆரம்பவகுப்பு மாணவர் களுக்கான விளையாட்டு செயற்பாடு களின் தேவையும், அவசியத்தையும் பற்றி நோக்குவோம்.

**ஆரம்பக் கல்வி மாணவர்களும், திட்டமிடப்பட்ட விளையாட்டுக்களும்.**

புதிய கல்விச்சீர்திருத்தத்தின்படி ஆரம்பவகுப்பு மாணவர்களிடையே விளை யாட்டுச் செயற்பாட்டிற்கு அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. விளையாட்டுக்களின் ஊடாக கல்வி என்ற அடிப்படையிலேயே இப் பிரிவினருக் கான போதனைகள் நடை பெறுகின்றன. இங்கு புத்தகப்படிப்பிலும் பார்க்க திட்ட மிடப்பட்ட விளையாட்டு நடவடிக்கைகள் மற்றும் களிப்புடன் செய்யக்கூடிய வேலைகள் என்பவற்றின் மீது அதிகள வுக்கு கவனம் செலுத்தப்பட்டு வருவ தனை அவதானிக்க முடிகிறது. இவ் விளையாட்டுக்களின் ஊடாக அறிவு, ஆற்றல்கள் மற்றும் மனப்பாங்குகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சிக்கும் அதே வேளையில் இப்பாடத் துடன் சம்பந்தப்பட்ட தேர்ச்சி களையும் உள்ளடக்கும் திட்டமிட்ட விளையாட்டு. நடவடிக்கைகளின் ஊடாக இவற்றினை நிறைவேற்றிக் கொள்ள முடியும். எனவே பிள்ளைகள் அனைவரும் இத்தகைய விளையாட்டுச் செயற் பாட்டில் ஈடுபடுத்தப் படுவதால் அனைத்துப் பிள்ளைகளும் விருப்பத்துடன் பங்கேற்பர். அத்தகைய நடவடிக்கைகளின் முடிவின்போது பிள்ளைகள் தமக்குத் தேவைப்படும் சாதனை மட்டங் களை எட்டியிருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. உதார ணமாக தரம் ஒன்றைப் பொறுத்தவரையில் குறிப் பிட்ட பாடத்தில் "எமக்கு மகிழ்ச்சி தரக் கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றோம்." என்ற உணர்வினைச் சிறுவர்கள் பெறுகின்றனர். இதன் காரணமாக தரம் ஒன்றில் பிள்ளையை மையமாகக் கொண்டு திட்டமிட்ட விளையாட்டுக்கள், களிப்பூட்டக்கூடிய விளையாட்டுக்கள் என்பவற்றின் ஊடாக கல்வி போதிக்கப் படுகின்றது. இதன்மூலம் வகுப்பறையில் ஒரு சமூக மான விரும்பத்தக்க ஒரு சூழல் உருவாக்கப்படுவதுடன் அதன் விளை வாகப் பிள்ளைகள் பாடசாலைக்கு சமூக மளிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவார்கள். இவ்விளையாட்டுச் செயற்பாடுகளின் மூலம் பிள்ளைகள் பாடசாலையுடன் தம்மை இணைத்துக் கொள்கின்றனர். சுய கட்டுப்பாடு ஆளிடைத் தொடர்புகள் என்பவற்றை விளையாட்டின் ஊடாக அபி விருத்தி செய்து சமூக நெறிமுறைகள், ஒழுங்கு விதிகள், என்பவற்றை மதிக்கப் பழகிக்கொள்கிறார்கள். மேலும் அவர்கள் தர்க்கரீதியில் சிந்திக்கக்கூடியவராகவும் பல்வேறு வழிகளில் தமது ஆளுமையை வளர்த்துக் கொள்ளக்கூடியவராகவும் ஆக்கப்படுகின்றனர். எனவே ஆரம்பக் கல்விச் செயற்பாடுகளுக்கு உடற்கல்விப் பாடம் அதிக அளவில் பங்களிப்பு செய் கிறது. என்பதனை உணரமுடிகிறது.

**ஆரம்பக்கல்வி மாணவர்கள் விளை யாட்டுச் செயற்பாட்டின் மூலம் அடைந்து கொள்பவை**

- பிள்ளைகளின் உள இயக்கத்தை விருத்தி செய்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிள்ளைகளின் உடல் இயக்கத்தினை விருத்தி செய்தல்.
- பிள்ளைகளின் எழுச்சி சார்ந்த துறைவிருத்தி
- சுயகட்டுப்பாடு, ஒழுங்கு, மனப்பாங்கு, என்பவற்றை விருத்தி செய்தல்.
- உள்ளார்ந்த உடற்தகைமையையும் மனவெழுச்சித் தோற்றப்பாடு களையும் இனம்காணல்
- பிள்ளைகளின் உடற்தகைமை மட்டத்தை அறிந்துகொள்ளல்.
- பிள்ளைகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்துதல்.
- பிரச்சினைக்குரிய பிள்ளைக்கு தீர்வுகாண வழிகாட்டல்
- பிள்ளைகளின் தேவைகளை மையமாக வைத்து விளையாட்டு உருவாக்கப்படுவதால் எல்லாப் பிள்ளைகளும் விளையாட சந்தர்ப்பம் கிடைக்கின்றது.
- மாணவர்களிடையே இரசனைத் திறனை வளர்க்கமுடியும்.
- உபகரணங்களைக் கையாளப்பழகுதல்
- காண்பதன் மூலமும் பங்கு கொள்வதன் மூலமும் விளையாட்டுக்களின் ஊடாக அழகியல் ரீதியான மதிப்பீட்டுக்கு பழக்கமாதல்
- குறைந்த வளங்களைக் கொண்டு கூடிய அளவு பயன் பெறுதல்.
- விளையாட்டுக்களில் ஈடுபடுவதனால் மாணவர்களிடையே பின்வரும் நன்நெறிகளை விருத்தி செய்து கொள்ள முடியும்.
  - சட்டதிட்டங்களுக்கு மதிப் பளித்தல்
  - தலைமைக்கு கட்டுப்படப் பழகுதல்
  - பின்பற்றப் பழகுதல்
  - தாழ்மையுடன் கருமமாற்றுதல்
  - ஒத்துழைத்துக் கருமமாற்றுதல்
  - ஒற்றுமையை ஏற்படுத்துதல்
  - கூட்டாகத் தொழிற்படப் பழகுதல்
  - ஆசிரியர் ஆணைக்குக் கீழ்ப்படிதல்
  - சமூகப் பொருத்தப்பாட்டினை ஏற்படுத்துதல்.
- உடற்சுகத்தைப் பேணும் அவசியத்தை அறிந்துகொள்ளல்
- பிறரின் விளையாட்டுத் திறமைக்கு மதிப்பளிக்கப் பழகுதல்
- சுய ஒழுக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளப்பழகுதல்
- மாணவர்களிடையேசுறுசுறுப் பையும் உத்வேகத்தையும் ஏற்படுத்துதல்.

மேற்குறிப்பிட்ட பல நன்மைகளை ஆரம்பக்கல்வி மாணவர்களிடையே விளையாட்டுச் செயற்பாடுகளின் மூலம் ஏற்படுத்திக் கொள்ளமுடியும். இவை நிறைவேற வேண்டுமாயின் பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும், வகுப்பறையிலும் ஆசிரியர்களால் இவை நடைமுறைப்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. சரியான தொழிற்பாட்டின் மூலம் பிள்ளைகளிடையே பூரணவிருத்தியை ஏற்படுத்துவதுடன் அவர்களிடம் காணப்படும் திறமைகளை உடற்கல்விச் செயற்பாடுகளின் மூலம் தூண்டமுடியும். அத்துடன் வேறு பாடங்களைக்கூட புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக ஆரம்ப வகுப்புகளில் விளையாட்டுச் செயற்பாடுகள் மூலம் கற்பிக்கப்பட வேண்டும். எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு ஏற்றவாறு சிறப்பாகப் பயனளிக்கக்கூடிய வாறான வகையில் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான உடற்கல்விச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டு கற்பிக்கப்படல் வேண்டும்.

**ஆரம்பவகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும்**

ஆரம்ப வகுப்பு மாணவர்கள் காலை தொடக்கம் தொடர்ச்சியாக வகுப்பறையில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது மாணவர்களுக்குக் களைப்பு, சோர்வு, மனஉளைச்சல், என்பன ஏற்படுவது இயல்பானதாகும். இதனால் மாணவர்களிடையே தேவையற்ற துர் நடத்தைக் கோலங்களை நாம் வகுப்பறையில் அவதானிக்கமுடியும். இதனை நீக்குவதற்கு உடற்கல்விச் செயற்பாடுகளும், அழகியல்கல்வி செயற்பாடுகளும் பெரிதும் உதவுகின்றன. மாணவர்களை உற்சாகப்படுத்தி மனக்களைப்பைப் போக்கி கற்பிப்பதனால் கற்றல் வெற்றி பெறுகிறது. மாணவர்களின் கல்வி இலக்குகளையும் அதன் வெளிப்பாடுகளையும் இலகுவாக அடைந்துகொள்ள முடிகின்றது.. இதற்கு ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் முயற்சி முக்கியமானதாக அமைகின்றது.

ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு சாதாரண வகுப்பறையிலும் விளையாட்டுக்களை நடைமுறைப்படுத்த முடியும். **(Class Room Games)** இது எந்தவொரு பாடத்திற்கும் பொருத்தமானதாக அமையும். மாணவர்களை உற்சாகப்படுத்தி அதன் பின்னர் பாடத்தை தொடங்குவதற்கென வகுப்பறை விளையாட்டுச் செயற்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன. மேலை நாடுகளில் இவ்விளையாட்டுக்களை "ஓய்வூட்ட விளையாட்டுக்கள்" **(Refreshment Games)** எனவும் அறிமுகப்படுத்துகின்றனர். இவ் வகுப்பறை விளையாட்டுக்களுடன் மாணவர்களை மைதான விளையாட்டுகளிலும் விளையாட்டு முற்றங்களிலும் செயற்பாடுகளில் ஈடுபடுத்திக் கொள்ளுதல் நலம்.

சூழலில் மிக இலகுவாகப் பெறக்கூடிய பொருட்களையும், பாவித்து ஒதுக்கப்பட்ட பொருட்களையும் பயன்படுத்திக் குறைந்த இடப்பரப்பில் விளையாட்டு முற்றத்தை உருவாக்க முடியும். இவ் விளையாட்டு முற்றத்தின் ஊடாக மாணவர்கள் விருப்புடனும், மகிழ்ச்சியுடனும் விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபட ஊக்குவிக்க முடியும். இச்செயற்பாடுகளின் மூலம் உடல் விருத்தியுடன் உள விருத்திகான திறன்களும் இங்கு வளர்க்கப்படும். பாடசாலைகளில் விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டு அதன் ஊடாகக் கல்விச் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முயலவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவர்களுக்கான மைதான விளையாட்டுச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்துக் கொள்ளமுடியும். பொதுவாக மைதானச் செயற்பாடுகளை பின்வருமாறு உருவாக்கிக் கொள்ளமுடியும்.

1. உபகரணங்களின்றிய தனிச் செயற்பாடுகள்
2. உபகரணங்களுடனான தனிச் செயற்பாடுகள்
3. உபகரணமின்றி இருவர் இருவராக செயற்படும் விளையாட்டுக்கள்
4. உபகரணங்களுடன் இருவர் இருவராகசெயற்படும் விளையாட்டுக்கள்
5. குழுவாக செயற்படும் விளையாட்டுக்கள் (இரண்டிற்குமேல்)

மேலே குறிப்பிட்ட ஆரம்ப வகுப்பு மானவர்களுக்கான விளையாட்டுச் செயற்பாடுகளை பாடசாலைகளில் கருத்தியல் ரீதியாக அல்லாது செயற்பாட்டுரீதியாக ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் முன்னெடுத்துச் செல்வார்களாயின் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் இலகு வாக்கப்படுவதுடன் மாணவர்களின் வினைத் திறனும், உடல் நலமும் அதிகரிக்கும். இதற்கு ஆசிரியர் தமது உற்சாகமான, ஈடுபாட்டுடனான செயற்பாடுகளை அதிகரித்துக்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. இது ஒரு காலத்தின் தேவையாகவும் அமைகின்றது

அதேபோல் மைதானச் செயற்பாடுகளின் மூலமும் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான விளையாட்டுச் செயற்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும். இச்செயற்பாடுகளினால் மாணவர்களது ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பிள்ளைகளின் தன்மை, பால், வயது, காலம், நேரம், பௌதீகவளம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஆரம்ப வகுப்பு

"பொத்தகங்களை நீ எழுதினால் புகழ் பெறுவாய்; அதை விடச் சிறந்தது. உன்னைப் பற்றிய பொத்தகங்கள் எழுதப்படுவது."

~ பிராங்கிளின் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் பொறுப்பாண்மையும் எதிர்நோக்கும் சவால்களும்.

கல்வி என்றால் பூரண மனிதனை உருவாக்கல் என்று பொதுவாக வரைவிலக்கணம் கூறப்படும். சுவாமி விவேகானந்தர் அதனை அழகாக மனிதனுள் புதைத்திருக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துதல் என்கிறார். இத்தகைய கல்வியின் முக்கியத்துவம் இன்று சகல தரப்பினராலும் உணரப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார விருத்திக்கு ஊன்றுகோலாக உள்ள கல்வித்துறையில், உலகில் நாள்தோறும் நடைபெறும் மாற்றங்களிற் கேற்ப மாற்றங்கள் ஏற்படவேண்டும். என உணர்ந்த அரசாங்கம் 1997ம் ஆண்டு மறுசீரமைப்பின்மூலம் புதிய கலைத்திட்டத்தை உருவாக்கியது. இவற்றை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு பாடசாலைகளைச் சார்ந்ததாகும்.

பாடசாலை ஒன்றின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குவது முகாமைத்துவமே. ஒரு நிறுவனத்தையும் அதன் ஆளணியினரையும் நிர்வகிப்பதும் மேற்பார்வை செய்வதும் அந்நிறுவனத்திற்குப் பொருத்தமான ஆளணியையும் பௌதிக உள்ளகக் கட்டமைப்பையும் பேணி, ஊழியர்களின் தனிப்பட்ட நலன்களைப் பாதுகாத்து அவர்களைத் திருப்திப்படுத்துவதும் அதன்மூலம் அந்த நிறுவனத்தின் உச்ச வெளியீட்டை அதிகரிப்பதும் முகாமைத்துவம் எனப்படும். சுருக்கமாகக் கூறின் எந்த ஒரு நிறுவனத்தையும் வெற்றிகரமாகக் கொண்டு நடத்தும் நிறுவனத் தலைவரின் நாளாந்த செயற்பாடுகளைத் திட்டமிடல் முகாமைத்துவம் எனலாம். ஒரு பெரிய சமூகப் பொறுப்பைத் தாங்கி நிற்கும் அதிபர்கள் தமது பாடசாலைகளை சிறந்த விளைநிலமாக உருவாக்கத் தினமும் உழைக்க வேண்டும்.

பாடசாலை ஒன்றிலே வழங்கப்படும் கல்வியானது பின்வரும் தாக்கங்களை மாணவர்களில் ஏற்படுத்த வேண்டுமெனப் பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்றது.

- ♦ சிறந்த வாழ்க்கையை நடாத்துவதற்குவேண்டிய அறிவு, விளக்கம், செயற்றிறன்கள்,மனப்பாங்குகளை ஏற்படுத்துதல்.
- ♦ ஆக்கத்திறன், சுயதூண்டல், ஒழுக்கம் மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், சகிப்புத் தன்மை, நாட்டுப்பற்று, புரிந்துணர்வு என்பவற்றையும் ஏனைய பண்பாட்டு விழுமியங்களையும் கொண்ட பூரண ஆளுமைவிருத்தியை ஏற்படுத்துதல்.
- ♦ சிந்தித்து செயற்படும் ஆற்றலை வளர்த்தல்
- ♦ இனங்களுக்கிடையே சகோதரத்துவம், சமாதானம், சமத்துவம் என்ற உணர்வை வளர்த்தல். இவற்றுக்கேற்ப பாடசாலை ஒன்றின் முதல் நிலை முகாமையாளர் என கருதப்படும் ஒரு அதிபரினால் உச்சநிலை செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையிலே கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் திட்டமிடப் படலில் அதிபரின் செயற்பாடு முக்கியத்துவம் பெறுகின்றது. ஆசிரியர் மாணவர்களின் தேவைகள் ஈடுசெய்யப்படும் பொழுது அதாவது வளங்கள் விருத்தியாக்கப்படும் பொழுது கற்றல் கற்பித்தல் இலகுவாக்கப்படும். ஆசிரியர் கல்வி, பணியிடைப் பயிற்சி ஒழுங்குகள், ஆசிரியர் நலன் பேணல் என்பவற்றால் கற்பித்தலின் வினைத்திறனை வளம் படுத்துவதுடன் மாணவர்களுக்குரிய வசதிகள் வழங்கல்; ஊக்கல் நடவடிக்கைகள் தனியார் செயற்பாடுகள் போன்றவற்றால் கற்றலில் விளைதிறனை உருவாக்கவேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பாடசாலையின் சூழலைக் கவினுடையதாக வைத்திருந்தால் மாத்திரமே கற்றலுக்குரிய அடித்தளம் இடப்படும். எனவே சுற்றுச்சூழல், வகுப்பறைக் கல்விநிலை என்பவற்றில் கவனம் செலுத்தப்படல் இன்றியமையாததொன்றாகிறது. இச் செயற்பாடுகள் விளைதிறனுடையனவாக வேண்டுமெனின் தகுந்த மதிப்பீடுகள் அவசியம். சுய, பரஸ்பர, சகபாடி மதிப்பீடுகள்மூலம் இதனைக் கண்காணிக்கலாம்.

கலைத்திட்டத்துடன் இணைந்த செயற்பாடுகள் அடுத்து முக்கிய இடத்தைப் பெறுகின்றன. விளையாட்டுப் போட்டி உட்பட துறைசார்ந்த மன்றங்கள், திறன் வளர்ச்சி மன்றங்கள் மூலம் மாணவர் மத்தியில் தலைமைத்துவம், குழுவாகச் செயற்படல், கருத்து ஒருமைப்பாடு, மற்றவர்களில் கரிசனை, நீதி, நேர்மை என்ற உணர்வுகளை வளர்க்க முடியும். மாணவர்கள் தங்கள் திறன்களை வளர்க்கக்கூடிய விதத்திலும், மாணவர்கள் முழுமையாகப் பங்கேற்கக் கூடியவிதத்திலும் இவை ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.

இவற்றுள் மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுவது நூலகப் பயன்பாட்டினை ஊக்குவித்தலாகும். அறிவை சுயமாகவே பெற்றுக்கொள்ளல் வேண்டும். இன்று நாளுக்கு நாள் பல்வேறுதுறைகளிலும் ஆராய்ச்சிகள் ஊடாக அறிவு பெருகிக் கொண்டே இருக்கின்றது. இதனால் மாணவர் இன்று பெறும் அறிவும் திறன்களும் வெகுவிரைவில் காலாவதியாகிவிடுகிறது. பாடசாலைக் காலத்தின் பின்னரும் அறிவையும், திறனையும் சுயமாகவே கற்றுப் பெறவேண்டிய நிலை உள்ளது. இவ்வாறு புதிய திறனையும், அறிவையும் பெற்றுக்கொள்ளும்போது புதிய விஞ்ஞான தொழில்நுட்ப யுகத்தில் சமுதாயத்தில் பொருந்தி வாழக்கூடிய நிலை ஏற்படுகின்றது. எனவே பாடசாலைக் காலத்தில் பெறும் கல்வி பாடசாலையை விட்டு விலகிய பின்னரும் புதிய அறிவையும் திறனையும் கற்றுக் கொள்வதனை இலகுபடுத்தும் வகையில் சுயமாகவே கற்றுக்கொள்ளும் வழிகளைப் போதிப்பனவாக அமையவேண்டும். சுயமாகவே அறிவைப் பெற்றுக்கொள்ளல், கற்கும் போது செய்முறைகளை விளங்கிக் கொள்ளல் என்பன தமது கற்றலுக்குத் தாமே பொறுப்பேற்கும் நிலையை உண்டாக்கும். இது 'கற்றலுக்குக் கற்றல்' எனப்படும். மாணவர்கள் கட்டாயக் கல்வி பெறும் காலத்தில் அவர்கள் கற்பதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது இன்று எல்லோரது சிந்தனையையும் கவர்ந்துள்ள விடயமாகும். வாழ்க்கையில் நீடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## திருமதி க. பொன்னம்பலம்

அதிபர்

யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

கல்வியை யாவரும் பெறவேண்டுமானால் மாணவர்கள் தாம் பாடசாலையை விட்டு விலகிய பின்னரும் கற்பதற்கான வழி முறைகளைக் கற்கவேண்டும்.

எனவே ஒரு பாடசாலையின் இலக்கினை அடைய அதன் செயற்பாட்டிற்குத் தேவையான உள்ளீடுகளை நன்கு திட்டமிட்டு ஒழுங்கமைத்துச் செயற்படுத்தி வினைத்திறனுள்ள வகையில் உச்சவெளியீட்டைப் பெற்றுக்கொள்வதே நிறுவனத்தின் செயற்பாடாக இருக்க வேண்டும். கீழுள்ள பாய்ச்சற் கோட்டு வரிப்படம் இதனை விளக்குகின்றது.

| உள்ளீடு | செயற்பாடுகள் | வெளியீடு |
|---|---|---|
| மாணவர்<br>ஆசிரியர்<br>பெற்றோர்<br>ஊழியர்<br>பழைய மாணவர்<br>நிதி<br>தொழில்நுட்பம் | முகாமையிடல்<br>செயற்படுத்தல்<br>திட்டமிடல்<br>ஒழுங்கமைத்தல்<br>ஆளணியிடல்<br>கட்டுப்படுத்தல்<br>மதிப்பிடல் போன்றன | கற்பித்தல்<br>பெறுபேறுகள்<br>இணைப்பாடவிதான<br>செயற்பாடுகள்<br>சமூக விழுமியங்கள்<br>ஒழுக்கம்<br>பண்பாடு<br>சமூக அங்கீகாரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்நோக்கும் சவால்கள்:

பாடசாலைகள் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகள் ஆசிரியர் பற்றாக்குறை, பௌதீக வளப்பற்றாக் குறை அதிலும் முக்கியமாகத் தற் பொழுது கற்றல் கற்பித்தல் செயற்பாடு களை நவீன யுக்திகள் மூலம் முன் னெடுத்துச் செல்லவுள்ளதால் அதற்கு கந்த கட்புல செவிப்புல சாதனங்கள் இன்மையை. குறிப்பிடலாம்.

இவற்றைவிட ஆசிரியர், மாணவர் சார்ந்த உளப்பிரச்சனைகள் பாடசாலை களுக்குச் சவாலாக உள்ளன.

## மாணவர் தொடர்பானவை:

மாணவர்களைப் பொறுத்தவ ரையில் அவர்கள் உயர்தர வகுப்பிற்கு செல்லும்போது சரியான பாடத்து றையைத் தெரிவதில் தவறான முடிவை எடுக்கின்றார்கள். தமக்கேற்ற துறைத் தெரிவில் பாடசாலையின் வழிநடத்தலை அவர்கள் ஏற்கத் தவறுகின்றார்கள். இத்தவறிற்குப் பெற்றோரும் பங்காளி களாகின்றனர். இறுதியில் பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்படுகையில் அல்லது சிறந்த பெறுபேறு கிடைக்காத நிலையில் மன உடைவிற்கு உள்ளாகும் நிலை உருவாகின்றது. இந்நிலையைப் போக்கு வதற்கு துறைத் தெரிவில் பாடசாலையின் வழிகாட்டலைப் பின்பற்றுவதற்கு பெற் றோர்களும், மாணவர்களும் உடன்பாடு டையவர்களாக மாறவேண்டும்.

இன்று ஒரு பகுதி மாணவர்கள் பாடசாலைக்கல்வியை உதாசீனம் செய்யும் நிலை உருவாகியுள்ளது. பாட சாலைக் கல்விமூலம் பெறும் அனுபவங் களை வேறு எங்கும் பெறமுடியாது. எனும் எண்ணக்கருவும், சுயகற்றல், தேடிக்கற்றல் போன்ற விடயங்களின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டு இவற்றிற்கு அடித்தளமிடுவது பாடசா லைதான் என்ற உணர்வும் மாணவர் களிடையே புகுத்தப்பட்ட போதிலும் அவர்கள் பாடசாலையைப் புறக்கணித்து வேறு இடங்களை நாடுகின்றனர். பரீட்சை மையக்கல்வி முறை மாறி மாணவர் மையக் கல்விமுறை அமுலில் கொண்டு வரப்பட்டதாக கூறிவருகின்ற பொழுதிலும் மாணவர்களின் இறுதி இலக்கு பரீட்சையை மையமாகக்கொண்டு அமைவதால் இத்த கைய சவாலைப் பாடசாலைகள் ஈடு செய்ய முடியாதுள்ளது.

## ஆசிரியர் சார்பானவை:

ஆசிரியர்களது சம்பளத் திட்டத்தில் இருக்கும் முரண்பாடு காரண மாக சேவை மூப்புடைய ஆசிரியர்கள் உளநிலை பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். முகாமைத்துவக் குழு உறுப்பினர்களாக திறமைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பொழுது உயர்வேதனம் பெறுவோர் தடையாக உள்ளனர். இத்தகைய செயற் பாடுகள் சிறந்த முகாமைத்துவத்திற்குத் தடையாக உள்ளன. சம்பள முரண் பாடுகள் நீக்கப்பட்டு ஆசிரியர்களது உளம் சார்ந்த தாக்கங்கள் நீக்கப்படல் வேண்டும்.

*

> மாணவ மாணவியரின் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து வாழ்வின் பிரச்சினை களுக்குத் தீர்வுகாண ஆயத்தம் செய்து பக்குவப்படுத்துவதே சிறப்பான கல்வி யாகும்.
>
> – மகாத்மாகாந்தி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விளக்கு" தாளிகை நடாத்திய
உலக ஆசிரியர் நாள் கட்டுரைப் போட்டியில்
முதலிடம் பெற்ற கட்டுரை



# சுவாமி விபுலாநந்தர் அவர்களின்
# கல்விப்பணி

இந்துமா சமுத்திரத்தின் இரத்தின தீபம் என்றழைக்கப்படும் ஈழத்தின் கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்னும் இடத்தில் 1892-03-26 அன்று சுவாமி விபுலாநந்தர் அவதரித்தார். இவரது இளமைக் காலப் பெயர் மயில்வாகனன் என்பதாகும். 1924இல் துறவறம் பூண்டதன் பின்பு சுவாமி விபுலாநந்தர் என அழைக் கப்பட்டார். இவர் பல்வேறு பணிகளை ஆற்றியிருந்தாலும் அவரது கல்விப் பணியே மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. இதற்கு அவர் வகித்த பதவி களும் துணை புரிந்திருக்கின்றன.

ஆசிரியராக, பண்டிதராக, விஞ்ஞானமாணிப் பட்டதாரியாக, பாடசா லைகளின் முகாமையாளராக, பல்கலைக் கழகங்களின் தமிழ்த்துறைப் பேராசிரி யராக, எழுத்தாளராக, பதிப்பாசிரியராக, சஞ்சிகையாசிரியராக, மொழியியல் ஆராய்ச்சியாளராக, மொழிபெயர்ப்பா ளராக என்று பல்வேறு துறைகளிலும் பெயர்பெற்றுக் கல்விக் கருத்துக்களை வழங்கியவராக சுவாமி விபுலாநந்தர் திகழ்கின்றார். தனது சொந்த முயற்சி யினால் உழைத்து கல்வி கற்றார். ஆசிரியர் என்பவர் எப்போதும் கற்றுக்கொண்டே இருப்பவர் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் விபுலாநந்த அடிகளாவார்.

தமிழர்கள் கல்வியில் சிறந்தவர் களாக விளங்குவதற்கு சுயதொழிற் கல்வியே சிறந்ததும் அவசியமானது மாகும்; என்பதில் அடிகளார் உறுதியான வராக இருந்தார். பிறமொழிக் கல்விமூலம் ஒருநாளும் உயர்நிலையை அடைய முடியாது என்று அடிகள் கூறியுள்ளார். பாடங்களைத் தமிழ்மொழி மூலமாகவே படித்து தமிழ்மொழியிலேயே பரீட்சை எழுதவேண்டும் என்பதைச் செயற்படுத்த அடிகளார் காரணமாக இருந்தார்.

ஒருவன் கற்கின்ற கல்வியானது அவனது உள்ளத்திற்கு இனிமை பயப்பதுடன் அவனது உயிருக்கு உறுதி அளித்தலும் வேண்டும். என்று அடிகளார் கூறியுள்ளார். இவ்வகையில் அடிகளாரின் கல்வி நோக்கும் மகாகவி பாரதியாரின் கல்வி நோக்கும் ஒப்பிடக்கூடியதாகும். ஒருவனது வாழ்க்கைக்குப் பிரயோசனமாக கல்வி அமையவேண்டும் என்பது அடிக ளாரின் கருத்தாக இருந்தது.

ஆன்மீக வளர்ச்சியின் அவசியம் பற்றியும் அடிகள் வலியுறுத்திக் கூறியுள் ளார். நிலையானவற்றைத் தெரிந்து கொள்வதுதான் கல்வியின் நோக்காகும் என்பது அடிகளின் மிக உயர்ந்த கருத் தாகும். சமயக்கல்வியின் அவசியத்தை அடிகள் வலியுறுத்தியுள்ளது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. மோகனேந்திரன்,
தி/ ஈச்சந்தீவு விபுலாநந்த வித்தியாலயம்,
கிண்ணியா.

இதனாலேயே ஆகும். கற்றதன் படி நாம் செய்யவேண்டியது இறை வனுடன் நம்மை ஈடுபடுத்தலாகும். இதற்கான கருவியாக சமயத்தைக் கைக்கொள்ள வேண்டும். சமயக்கல்வி மூலம் ஒழுக் கத்தை அடையலாம் என்பதில் அடிக ளாருக்கு பூரணநம்பிக்கை இருந்தது.

ஆன்மீக வளர்ச்சிக்கு உடற் பயிற்சியும் உளப்பயிற்சியும் மிகவும் இன்றியமையாதவை என்று அடிகள் கூறியுள்ளார். உடற்பயிற்சி முறைகளில் மேனாட்டு உடற்பயிற்சி முறைகளை விட எமது பாரம்பரிய முறைகளான கட யோகம் சாலச்சிறந்தது என்று கூறுகின்ற அடிகளார், அதனை மாணவர்களுக்குப் பயிற்றுவித்தும் உள்ளார். இலங்கை இராமகிருஷ்ண சங்கத்தின் சிவானந்த வித்தியாலய மாணவர்களுக்கே அடிக ளார் யோகாசனத்தைப் பயிற்றினார்.

உளப்பயிற்சியை வழங்கி உளத் தினை நன்னெறிப்படுத்துவதற்கு அழகியற் கலைகள் பயிற்றுவிக்கப்படுவது அவசிய மாகும்; என்று அடிகள் கூறியுள்ளார். கண்ணினையும், செவியினையும் பயிற்றும் பொருட்டு மாணவர்களுக்கு ஓவியக் கலையும், இசைக்கலையும் கற்பிக்கப்பட வேண்டியது முக்கியம் என்று அடிகள் கூறியுள்ளார். மனிதனின் படைப்பாற்றலை வெளிக்கொணர உதவக்கூடிய இசை, ஓவியம், சிற்பம் நாடகம்போன்ற கலை களுக்கு கல்வியில் முக்கியபங்கு அளிக் கப்பட வேண்டும் என்று அடிகள் அன்றே கருதினார். இன்று எமது மாணவர்களுக்கு அழகியற்கல்விக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை அடிகளார் தமது காலத்திலேயே கூறிச் சென்றுள்ளார்.

இலங்கை முழுவதற்கும் ஒரு தேசிய முறையிலான கல்வியை ஏற்படுத்த வேண்டும். என்று அடிகளார் கூறியுள்ளார். தேசியக்கல்வி முறை ஒன்று கொண்டு வரப்படுவதன் மூலம் ஒற்றுமை யான ஒரு சமூகத்தை உருவாக்க முடியும் என்பது அடிகளாரின் கருத்தாகும். இதனை அடிகளார் குறிப்பிடும்போது நூற்றாண்டு காலத்துக்கு மேலாக கிறிஸ் தவ மிசனரிமார் எமக்கு அளித்த கல்வி யால் நாம் எமது சொந்த நாட்டிலேயே வேற்று நாட்டார் போல வாழக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது; எனக் கூறியுள்ளார். அத்துடன் மிகச் சிலருக்கே இலங்கைச் சரித்திரம் தெரியும். எனவே இழந்த சுதந்திரத்தை மீளப்பெற வேண்டும். என்று அக்கால கட்டத்தில் விடுதலை பற்றிய கருத்துக்களைத் தனது கல்விக் கருத்துக் களில் வெளியிட்டுள்ளதைக் காணலாம்.

தொழிற் கல்வியின் முக்கியத்து வத்தைப் பற்றியும் அடிகளார் கூறியுள் ளார். அடிகளாரது கல்விச் சிந்தனையில் ஏட்டுக்கல்வி மட்டுமல்லாது தொழிற் கல்வியும் முக்கிய இடம் பெற்றுள்ளது. இதனை அடிகளாரின் பின்வரும் கூற்று விளக்குகின்றது. "நம் நாட்டு தற்காலத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமையில் ஒவ்வொருவரும் தாம் எத்தொழிலைப் பின்பற்றுவதென்று விளங்கவில்லை. விளக்குவதற்கு தகுந்த ஏற்பாடுகளும் இல்லை.'' அடிகளாரின் கருத்துப்படி கல்வி முறையில் மாற்றம் தேவை என்பதை அவரது பின்வரும் கூற்று எடுத்துக் காட்டுகிறது. "விஞ்ஞானம் மாறுகிறது. சமுதாயம் மாறுகிறது. வரலாற்று நோக்கு மாறுகின்றது. அரசியல் குறிக்கோள் மாறுகின்றது. வழக்கம் மாறுகிறது. சட்டம் மாறுகிறது; ஆனால் நம் கல்விமுறை மட்டும் மாறாது இருக்கிறது."

விஞ்ஞான மாணிப் பட்டதாரியான அடிகளார் விஞ்ஞானக்கல்வியில் ஆர்வம் காட்டியது ஒன்றும் ஆச்சரியப்படுவதற் கில்லை. ''விஞ்ஞானக் கல்வியை வளர்ப்பதன் மூலமே ஒருநாடு வறுமை, நோய், பட்டினி போன்றவற்றைப் படிப்படியாகக் குறைக்க முடியும் என்றும் முன்னேறும் நிலையை அடைய முடியும்; என்றும் அடிகளார் குறிப்பிட்டார். ஐம்பூதத்தின் அறிவுதான் விஞ்ஞான அறிவு என்று அடிகளார் கூறியுள்ளார். விஞ்ஞானத்தைத் தமிழ்மொழிமூலம் போதிக்க வேண்டும் என்று அடிகளார் விரும்பியுள்ளார். இதற்காக தமிழ்ச் சொற்களை ஆக்கி அளிக்க வேண்டும் என்று அடிகள் கருதினார். விஞ்ஞான தீபத்தில் அடிகளார் அழகிய தமிழ்ச் சொற்களைக் கொண்டு கட்டுரைகளை ஆக்கியுள்ளதைக் காணலாம்.

அடிகளார் பெண்கல்வி விடயத் திலும் ஈடுபாடு கொண்டிருந்ததனை அவதானிக்கலாம். "பெண்களுக்குக் கல்வி யறிவு மிக அவசியம். முறையான கல்வி பயிற்றப்படும்போது மாணவிகள் நாட்டுக்கு



சேவை செய்யத் தகுந்தநிலையை அடை கிறார்கள்." என்று அடிகள் கூறியுள்ளார்.

இவ்வாறு கல்விமுறை எவ்வாறு அமைதல் வேண்டும் என்று கூறியுள்ள அடிகளார் கல்விப்பணிகளை தமக்குரிய பொறுப்புணர்வுடன் செய்துள்ளதனைக் காணலாம். 1909 - 1910 வரை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி, 1911 இல் கல்முனை கத்தோலிக்கப் பாடசாலை 1911 - 1912 இல் ஆசிரியர் பயிற்சி, 1913 - 1914 இல் மீண்டும் மட்டக்களப்பு புனித மில்கேல் கல்லூரி, 1915 - 1916 இல் இலங்கை அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியில் விஞ்ஞானப் பயிற்சியின் பின்னர் 1917 இல் கொழும்பு அரசினர் கல்லூரி, 1917 - 1920 இல் யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி போன்றவற்றில் ஆசிரியராகக் கடமை யாற்றி உள்ளார். ஆசிரியராகப் பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாற்றிய காலத்திலேயே கல்வியறிவையும், அனுபவத்தையும், தகுதியையும் விருத்தி செய்து கொள்வதற்காக ஆசிரியர் கலாசாலைப் பயிற்சி, தொழினுட்பக் கல்லூரிப் பயிற்சி என்பவற்றைப் பெற்றதோடு மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பண்டித பரீட்சை, போன்றவற்றில் சித்தியும் அடைந்தார். 1920ம் ஆண்டு வரை அடிகளாரின் கல்வித் தொண்டு ஆசிரியத் தொழிலுடன் தொடர்பு உடையதாக இருந்தது. அவரது ஆசிரியப் பணி பிறர் போற்றும்படி மிகவும் சிறப்புற்றே இருந்தது.

1920 இல் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் தலைவராகப் பணிபுரியும் சந்தர்ப்பம் அடிகளாருக்கு வழங்கப்பட்டது. கல்லூரியில் அவர் செய்த சீர்திருத்தங்கள் பல. இக்காலத்திலேயே யாழ்ப்பாணம் ஆரிய திராவிடபாசா விருத்திச் சங்கத்தின் முயற்சிகளுக்கும் நடவடிக்கைகளுக்கும், கணிசமான அளவு தொண்டாற்றினார்.

1922ம் ஆண்டின் பின்னர் அடிகளாருக்கு மேலும் விரிவானவகையில் கல்வித் தொண்டாற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இராமகிருஷ்ண சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பாடசாலைகளை ஏற்று நிர்வகிக்கும் முக்கியமான பொறுப்பு அடிகளாருக்கு வழங்கப்பட்டது. 1925 - 1930 வரை இப்பாடசாலைகளின் முகாமையாளராக அடிகளார் இராமகிருஷ்ண சங்கப் பாடசாலைகளைப் பொறுப்பெடுத்ததன் பின்னர் கல்வி வளர்ச்சியில் பாரியமாற்றம் ஏற்பட்டது. குறிப்பாக கிழக்கிலங்கையின் கல்வி வரலாற்றில் அடிகளாரின் கல்விப்பணி மறக்கமுடியாத ஒன்றாகும். திருகோணமலை இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம் என்பவற்றை உருவாக்கிய பெருமை விபுலாநந்த அடிகளையே சேரும். இவ்விரண்டு பாடசாலைகளும் இன்று திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் பிரபல பாடசாலை களாக உள்ளன.

சுவாமி விபுலாநந்தர் 1931ம் ஆண்டு தொடக்கம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகவும். கீழைத்தேயக் கல்விப் பீடத்தின் தலைவராகவும் இருந்து தமது கல்விப் பணியை ஆற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருந்த காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களது கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு உதவிகளையும் அடிகளார் செய்து கொடுத்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பாரதியார் கழகத்தைத் தோற்றுவித்த பெருமையும் அடிகளுக்கே உரியதாகும். அதற்கு முன்னர் பாரதியின் பாடல்கள் கஞ்சாக் கவியின் பாடல்கள் என்று அக்கால அறிஞர்களால் கூறப்பட்டன. அடிகளார் பாரதிக்கு முக்கியத்துவம் கொடுத்த பின்னரே பாரதியின் பாடல்களைத் தமிழ் உலகம் அறிந்து கொண்டது. தேடாதிருந்த பாரதியை தமிழுலகம் கனம் பண்ண வைத்த பெருமையும் அடிகளுக்கே உரியது. இன்று தமிழ் மாணவர்கள் பாரதியின் பாடல்களைப் படிப்பதற்கு வழிசமைத்துக் கொடுத்தவர் அடிகளாரே.

1943 முதல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிய அடிகள் அழைக்கப்பட்டார். அடிகளாரின் வருகையுடன் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை புது வடிவம் பெற்றது. தன்னை அடுத்து தொடர்ச்சியான தமிழ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்கள் வரிசையையே ஏற்படுத்தி விட்டவர் அடிகளாராவர். பேராசிரியர். க.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வி.செல்வநாயகம் ஆகியோர் அடிகளாரின் மாணவர்களாவார்கள். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முதுமாணி வகுப்பி னையும் தொடக்கி வைத்தவர் அடிக ளாரே ஆவார். அடிகளார் இறைவனடி எய்தும்வரை இலங்கைப் பல்கலைக் கழகத்திலேயே தொண்டாற்றினார்.

இவ்வாறு அடிகளார் ஆசிரியராக, பண்டிதராக, விஞ்ஞானமாணிப்பட்டதாரி யாக, அதிபராக, பாடசாலைகளின் முகாமையாளராக, பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியராக, எழுத்தா ளராக, பதிப்பாசிரியராக, சஞ்சிகை ஆசிரி யராக, மொழியியல் ஆராய்ச்சியாளராக, மொழி பெயர்ப்பாளராக என்று பல்வேறு துறைகளிலும் சிறப்புற்று விளங்கி கல்வி பற்றிய கருத்துக்களையும் வழங்கினார். தன்னால் இயன்றவரை கல்விக்காகத் தொண்டாற்றினார். அடிகளாரின் யாழ்நூல் என்ற ஆராய்ச்சிநூல் தமிழரின் பாரம்பரிய இசைமரபை வெளிக்கொண்டு வந்தது. இது தவிர பல்வேறு கட்டுரைகளையும் எழுதிக் கல்விப்பணியை மட்டுமன்றி ஆன்மீகப்பணியையும் மேற்கொண்ட ஒருவராக சுவாமி விபுலாநந்தர் திகழ் கின்றார். அடிகளார் மறைந்தபோதும் அடிகளின் கல்விப்பணியும், ஆன்மீகப் பணியும் மறையாமல் நிலைத்து நின்று அடிகளின் பெருமையை உலகிற்கு உணர்த்திக்கொண்டே இருக்கும்.

ஃ

## சிறந்திட வைக்கும் ஆசான்!



அறிவுக் கண்ணைத் திறந்து
அகிலத்தைக் காட்டும் ஆசான்
நெறியுடன் வாழ்வதற்கு
நித்தமும் உரைக்கும் ஆசான்
குறிதவ றாது வாழக்
கொள்கையைக் கூறும் ஆசான்
சிறிதுமே ஓய்வு இன்றிச்
சிறந்திட வைக்கும் ஆசான்

**வ. யோகானந்தசிவம்**
ஓய்வுபெற்ற அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது பிரதேசக் கல்விநிலை

பாடசாலைமட்ட பொதுப் பரீட்சைகளின் பெறுபேற்றுப் புள்ளிவிபரங்களை நோக்கும்போது, எமது நாட்டின் கல்வியில் முன்னணி வகித்த யாழ்மாவட்டம் மிகவும் பின்தங்கியுள்ளமை புலனாகின்றது. அத்துடன் தொடர்ந்தும் கல்வித்தரம் படிப்படியாக குறைந்து செல்வதனை அறியமுடிகிறது. ஆரம்பக் கல்விமுதல் எமது பல்கலைக்கழக கல்விவரை அனைத்து மட்டத்திலும் மந்தநிலை காணப்படுகிறது. பல்கலைக்கழக மட்டக் கல்விநிலை ஒரு தனி ஆய்வுக் குரிய விடயமாகும். அதைவிடுத்து எமது எதிர்காலத்தினைத் தீர்மானிக்கும் இளைய தலைமுறையினர் அனைவரினதும் கல்வி வளர்ச்சியில் முழுமையாகப் பங்கு வகிக்கும் பாடசாலை மட்டக்கல்வி வீழ்ச்சிக்கான காரணங்களை இனங் காண்பதும் அவற்றை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

கல்வி வளர்ச்சிக்கான பணிகள் என நோக்கும்போது அவை கூட்டு முயற்சிகளாகவே அமையவேண்டும். 'தனிமரம் தோப்பாகாது'. அவர்களின் கல்வி வளர்ச்சியில் பங்கெடுக்க வேண்டியவர்கள் யார் என நோக்கும் போது, பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்விநிர்வாகிகள், கல்விமான்கள், மற்றும் வருமான நோக்குடன் நுழைந்து இடம்பிடித்து, தாமே கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றுபவர்கள் என விளம்பரப்படுத்திக்கொள்ளும் தனியார்கல்வி நிறுவனங்கள், செய்தி பரப்பும் ஊடகங்கள் என பல் பிரிவினர் சேர அது விரிந்து செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி வளர்ச்சியில் பங்கெடுக்க வேண்டியவர்களின் கடமைக் கூறுகள் எவை? உண்மையில் அவர்கள் ஆற்று கின்ற பணியாது? என ஆராயும்போது பல போலி வேடங்களும், பொறுப்பின்மை களும், அறியாமையும், ஆற்றலின் மையும், சுயநலமும், ஆணவமும் எல்லாம் எம் குழந்தைகளின் தலையில் (கல்விவளர்ச் சியில்) மண்போட்டுக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

கடந்த இரு தசாப்தங்களாக நாம் எதிர்நோக்கி வரும் ஸ்திரமற்ற வாழ்வு, துன்பகரமான இடப்பெயர்வுகள், பிரிவுகள், அதன்பின் விளைவின் ஓர் அங்கமான வெளிநாட்டு வருமானங்கள், கலாச்சாரச் சீரகேடுகள் போன்றவற்றின் தாக்கங்களும் எமது கல்வியைச் சீர்குலைத்துள்ளமை அனைவரும் அறிந்ததே.

இவற்றுக்கப்பால், காலத்திற்குக் காலம் மாறிவரும் கல்விச் சீர்திருத்தங் களுக்குஅமைய கல்வியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை - அதாவது போதனை முறைமைகள், பரீட்சை முறைமைகள் போன்றவற்றை யாழ் மாவட்டத்தினர் உள்வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்க வில்லை. உள்வாங்கவும் இல்லை. இதற்கான முக்கிய காரணம் கடந்த இரு தசாப்தங்களும் நாம் அந்நியப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு இருந்தமையே ஆகும். எனவே, இதனால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு ஆசிரியர்களைக் குறை கூறமுடியாது. ஆனால் கல்விப் பயணத்தில் நாம் பின்தங்கியுள்ளோம் என்பது நிதர்சனமான உண்மையாகும்.

எமது மக்கள் பழமைபேணும் இயல்பினை இறுக்கமாகக் கடைப் பிடிப்பவர்கள். கல்வியில் ஏற்பட்ட மாற்றங் களைக்கூட விரைவில் ஏற்று நடை முறைப்படுத்த ஆசிரியர்கள் தயங்கு கின்றனர். பழைய முறையான நெட்டுருக் கல்வியிலேயே இன்றும் நம்பிக்கை கொண்டு செயல்படுகின்றனர். ஆனால், எண்ணக்கரு உருவாக்கம், செயல்சார் சிந்தனை, கற்கக் கற்றல், கற்றல் இட மாற்றம் போன்ற கல்விசார் சிந்தனைகள் இன்றும் எமது கல்வி உலகிற்குள், கல்விப் புலத்திற்குள் வேர்கொள்ளாது இருப்பது எமது கல்விப் பின்னடைவிற்கான முக்கிய காரணமாகும்.

கல்வி வளர்ச்சிக்கான பல திட்டங்கள் அனைத்துப் பாடசாலைகளி லும் அரசினால் அறிமுகப்படுத்தப்பட் டுள்ளன. அத்திட்டங்களின் நோக்கங்களை அறிந்து, பயனுறுவிதத்தில் செயற்படு வதில் யாழ்மாவட்ட ஆசிரியர்கள், அதிபர்கள் பின்தங்கியுள்ளனர். உதார ணமாக, கல்வித்தரத்தை உயர்த்துவதற் காக வழங்கப்படும் நிதியைப் பயன்படுத் துதல், கிடைக்கும் பௌதீக வளங்களின் உச்சப்பயன்பாடு, ஆசிரியவாண்மை விருத்திக்கான செயற்றிட்டங்களை முன்னெடுத்தல் தத்தமது பாடசாலை மட்டத்திற்கேற்ற இலக்குகளை வரை யறுத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை சிறப்புற மேற்கொள்வதில் அதிபர், ஆசிரியர்கள், மற்றும் நலன் விரும்பிகள் அனைவரும் ஒருமித்து தமது பாடசாலையின் நலன்களில் அக்கறை யுடன், அர்ப்பணிப்புடன் செயலாற்ற முன்வர வேண்டும். அதைவிடுத்து அதிபர், ஆசிரியர்களிடையே சுயலாபம் கருதிய போட்டிகள், தமது பெருமைகளை நிலை நாட்டுவதில் ஆர்வம், துதிபாடி அடிபணிந் தாவது பதவி உயர்வுகளைத் தட்டிக் கொள்வதிலேயே கரிசனையுடன் செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுதல், மாணவர் கல்வி வளர்ச்சியில் அக்கறையின்மை தம் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றாமை போன்ற நிலைமைகளால் கல்வி வளர்ச்சிக்கான சாதக நிலைமைகள் வழுவிப் போகின்றன. கல்வியதிகாரிகளின் நேரடி மேற்பார்வை, ஆலோசனை வழங்கல் என்பனவும் அரிதாகியுள்ளன.

எமது பின்னடைவிற்கான காரணங்களை மென்மேலும் அடுக்கிக் கொண்டு போகலாம். வெறும் பத்திரிகை விளம்பரத்திற்காக மேடையில் நின்று எமது கல்வித்தரம் வீழ்ச்சிடைந்து கொண்டு போகின்றது என்று கூறுவதோ அல்லது அறிக்கை விடுவதோ எமது நோக்கமல்ல. யதார்த்தரீதியாக, எமது பின்னடைவிற்கான காரணங்களை அறிந்து நிவர்த்திசெய்ய முயற்சிக்க வேண்டும். எனவே கல்வி வளர்ச்சியில் பங்கெடுக்க வேண்டியவர்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து செயற்படல், உளவியல் ரீதியாக மேற்கொள்ள வேண் டிய அணுகுமுறைகளைக் கையாளுதல், கல்வியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு ஏற்ப எமது செயற்பாடுகளைச் செம்மைப் படுத்துதல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

முதிர்ச்சியடைந்த ஒருவர் தனது உயரத்தின் பெரும்பகுதியை (75-85 செ.மீ உயரம்) ஒரு குறித்தகால எல்லைக்குள் அடைந்து விடுகின்றார் என்பதை நம்ப முடியாதுள்ளது. அதாவது கண்ணால் பார்க்கக்கூடிய உடல் வளர்ச்சியினைக் கூட எம்மால் அவதானிக்க முடிவதில்லை. பார்த்து அறியமுடியாத உளவளர்ச் சியினை எப்படி அறியமுடியும். குழந் தையின் முழுமையான உள வளர்ச்சிக் கான அடித்தளம் முதலாம் வயதின் பின்னரான அரைப்பகுதியிலே நடைபெறுவதாக போல்யி என்பவரும் முதல் இரண்டு வயதிற்குள் நடைபெறுவதாக எயின்வேர்த் என்பவரும் முதல் ஐந்துவயதிற்குள் குழந்தையின் முழுமையான ஆளுமை, ஆற்றல் என்பன தீர்மானிக்கப்படுகிறது என சிக்மன் புறொயிட் அவர்களும் கூறியிருப்பவை நோக்கற்பாலது. அதாவது குழந்தை அறிவுபெறும் ஆற்றலுக்கான அடித்தளம் பாடசாலை புகாநிலைப் பருவத்திலேயே அமைக்கப்படுகிறது.

முன்பு, குழந்தைகள் தம் தாய் தந்தையரின் அரவணைப்புடன் தமது சூழலை (இயற்கையை) அவதானிக்கவும், சுதந்திரமாக விளையாடுவதன் மூலம் அனுபவம் பெறவும் சந்தர்ப்பம் கிடைப்ப துண்டு. ஆனால் தற்பொழுது சிக்மன் புறொயிட் குறிப்பிட்டவாறு ஐந்து வயதிற் குட்பட்ட இயல்பான வாழ்வுதானும் பிள்ளைகளுக்குக் கிடைப்பதில்லை. பியாஜே கூறும் எண்ணக்கருவுக்கு முற்பட்ட பருவத்திலேயே அறிவுச்சுமை யைத் திணிக்கப் பெற்றோர் முனை கின்றனர்.

அறிவு பெறவேண்டிய சிறார்கள் வெறும் கொள்கலன்கள் அல்ல. தலை யணை உறையில் பஞ்சு திணிப்பது போன்று கல்வி அறிவு திணிக்கப்படக் கூடிய ஒன்றன்று. ஒரு நாள் கூத்துக்கு


கு. சதாசிவமூர்த்தி,
அதிபர்,
பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கும் தற்காலிகக் கொட்டகை போன்று பரீட்சை மண்டபத்தில் உமிழ் வதற்கான தரவுகளை மட்டும் உள்வாங்க வேண்டியவர்களுமல்லர். "குழந்தைகள் பிறக்கும் போது அவர்களது உள்ளம் வெற்றுத்தாள் போன்றுள்ளது. படிப்படி யாக அவர்கள் பெறும் அறிவுசிலையில் எழுத்தாக அமைந்து நீண்டகால நிலை யான நடத்தைக்கு உதவவேண்டும்." என்ற உளவியலாளரின் கருத்தைக் கவனத்திற்கு எடுக்கவேண்டியது அவசிய மாகும்.

ஆரம்பக்கல்வியானது செயல்சார்ந்த இயற்கையோடு ஒன்றிய சொற்ப (ஆனால் தெளிவான) அறிவினைப் பெறக்கூடிய தாகவும், தன் குடும்பத்திலும், தான் வாழும் சமூகத்திலும் தேவையான அடிப் படை அறிவினைப் பெறக்கூடிய வகை யிலும் திட்டமிடப்பட்டுள்ளது. பிள்ளைகள் சுயமாகச் செயற்பட போதிய ஓய்வு வழங் கப்படவேண்டும். ஆனால், பல பெற் றார்கள் குழந்தைகளின் இயல்பான வளர்ச்சியைக் குழப்புகின்றனர். பாடசா லையால் வந்தவுடன் தனியார் கல்வி நிலையத்திற்கு அனுப்பி வைக்கின்றனர். 'மாலை முழுவதும் விளையாட்டு' என்பது மாறி 'மாலை முழுவதும் தனியார்கல்வி நிலையங்களில் கற்றல்' என்றாகிவிட்டது.

பாடசாலை நாட்களில் மாலை நேரங்களிலும் சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் முழுமையாகவும் தனியார் கல்வி நிலையங்களில் பிள்ளைகள் காலத்தைக் கழிக்கின்றனர். தாம் கற்ற வற்றை மீட்டல் செய்யக்கூடிய நேர மில்லை. பிள்ளைகளுக்கு ஓய்வே இல்லை. இதனால் திடகாத்திரமான உடல் வளர்ச்சியோ, உள வளர்ச்சியோ இல்லாது போகிறது. இந்நிலை தொடரு மானால் எதிர்காலத்தில் அறிவு வளர்ச்சி மட்டுமல்ல, உடற்பலமும் இல்லாத சமூகமே உருவாகநேரிடும் என எதிர்வு கூறலாம்.

இன்றைய தனியார் கல்வி முறைமை இலவசக்கல்விக்கு சாவு மணி அடித்துள்ளது. சுயகற்றல் வாய்ப்பினை ஒழித்துள்ளது. வசதியற்ற மாணவர்களை இடைவிலகத் தூண்டியுள்ளது. வீட்டில் பற்றின்மைக்கும், கட்டுப்பாடின்மைக்கும் காரணமாய் அமைகிறது. தனியார் கல்வியின் உச்சவளர்ச்சியும் எமது கல்வி வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்திருக் கிறது. பாடசாலைக் கல்வியில் பின்ன டைவான பிள்ளைகளுக்கு உதவும் வகையில் தனியார் கல்வி அமைந்தால் வரவேற்கத்தக்கது. பாடசாலைக் கல்விக் குத் தடையாக அமையும் தனியார்கல்வி அமைப்பு நீண்ட காலத்தில் கல்வி வீழ்ச் சிக்கே வித்திடும் என்பதில் ஐயமில்லை. க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள் கடைசி 1/3 பங்கு காலத்தை (தவணைகள்) பாடசாலை செல்லாது தடுக்குமளவிற்கு தனியார்கல்வி நிறுவ னங்களின் செயற்பாடு அமைந்துள்ளது. அதற்கு பாடசாலைகளில் ஆசிரியர்கள் பலர் தம் பொறுப்பைத் தட்டிக்கழிப்பதும், சிலர் மாணவர்களைத் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதை ஊக்கு விப்பதும் காரணங்களாகின்றன.

கல்வித் தரத்தில் முன்னணி வகிக்கும் பாடசாலைகளில் தம் பிள்ளை களைச் சேர்ப்பதில் பெற்றோர் அக்கறை காட்டுகின்றனர். அத்துடன் தம்பணி முடிந்துவிட்டதாகக் கருதிக்கொண்டு தனியார் கல்வி நிறுவனத்தில் தம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை கற்பதிலேயே நம்பிக்கை வைக்கின்றனர். உண்மையில் முறைவகுப்பு நடாத்துதல், பாடத்திட்டத்திற்கமையக் கற்பித்தல், வரவுபதிதல், ஒழுக்கம் பேணுதல், பரீட்சைகள் நடாத்துதல், மதிப்பிடுதல், மாணவர் தேர்ச்சி அறிக்கை வழங்குதல், இணைப் பாடவிதானச் செயற்பாடுகளை செவ்வனே மேற்கொள்ளல் போன்ற கல்விவளர்ச்சிக்கான முழுமையான செயற்பாடுகளும் பாடசாலைகளிலேயே நடைபெறுகின்றன. எனவே, பாடசாலையின் முக்கியத்தை உணர்ந்து ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகள் கற்கும் பாடசாலைகளின் நலனில் அக்கறை கொள்ளவேண்டும்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்கள். அவர்கள் தாம் கற்பிக்கும் பாடம் பற்றிய முழுமையான தெளிவான அறிவு பெற்றிருக்க வேண்டும். கற்பிக்கும் விடயம் தொடர்பாக மாணவர்கள் முன்பு என்ன கற்றிருக்கிறார்கள், எதிர்காலத்தில் என்னென்ன கற்கப்போகின்றார்கள் என்ற முழுமையான புலக்காட்சி இருக்கும் போதுதான் தெளிவாகக் கற்பிக்க முடியும். இன்று கற்பித்தலில் ஈடுபடும் பல ஆசிரியர்கள் குறிப்பிட்ட பாடத்தில் தெளிவான அறிவின்றி, ஆயத்தமின்றி, முன்திட்டமிடலின்றி புத்தகத்தைப் பார்த்து கற்பிக்கும் நேரத்திலும் பார்க்க மதிப்பீடு செய்யும் நேரம் அதிகமாகக் காணப்படுகிறது. திட்டமிடலின்மை அதற்குக் காரணம் ஆகும். ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பாடத்தில் தெளிவான அறிவினைப் பெற்றுக்கொள்வதும், முன் திட்டமிடலும் அவசியமாகும்.

மாணவர்களை நன்கு அவதானித்து, வழிநடத்துவதில் வகுப்பாசிரியர்கள் அதிக அக்கறைகொள்ள வேண்டும். ஒவ்வொரு வகுப்பாசிரியரும் தமது வகுப்பு மாணவர்களின் நலன்களில் அக்கறை கொண்டு செயற்படுவதன் மூலம் மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை நன்கறிந்து ஏற்ற வகையில் உதவமுடியும். மாணவர்களை இனங்காணவும், வழிகாட்டவும் கல்வி உளவியல் பெரிதும் உதவுகின்றது. ஆசிரியர்கள் தமது தகைமையினை உயர்த்திக்கொள்ள பல்வேறு மட்டங்களில் உளவியல் கற்கின்றனர். உளவியல் கற்பதன் நோக்கம் பரீட்சை எழுதுவதற்கு என்றநிலை மாறவேண்டும். பெற்ற அறிவினை பயன்படுத்தி மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவவேண்டும்.

கடந்த காலங்களில் போர்ச் சூழலால் கற்றலில் ஏற்பட்ட தடங்கல்கள் மாணவர்களின் மொழி அறிவைப் பாதித்துள்ளது. அத்துடன் பாடசாலை நேரம் தவிர்ந்த கூடுதலான நேரம் தனியார் கல்வி நிலையங்களில் செலவாகிறது. இதனால் சுய கற்றலுக்கான வாய்ப்பினை இழந்தமையும் மொழி ஆற்றலைப் பாதித்துள்ளது. மொழி அறிவு பாதிக்கப்படும் போது ஏனைய எல்லாப்பாட அறிவும் பாதிப்படைய நேரிடும். மொழியாற்றல் இல்லையாயின் தமக்குத் தெரிந்த வற்றையும் பரீட்சையில் வெளிப்படுத்த முடியாது போய்விடும். மொழியாற்றல் இல்லாத போது எங்ஙனம் எண்ணக்கரு விருத்தி பெறும். எண்ணக்கரு விருத்தி பெறாத போது கற்றலிடமாற்றம் நிகழவும் வாய்ப்பு ஏற்படமாட்டாது. இந்நிலையில் கல்வியில் பின்னடைவு தவிர்க்க முடியாத தொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கல்வி வீழ்ச்சிக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறையே பெரும் காரணமாகக் கருதப்படுகிறது. யாழ்மாவட்டத்தில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர். ஆனால் அப்பாடங்களிலும் நாம் மிகவும் பின்தங்கிய நிலையில்தான் இருக்கின்றோம். அதற்கான கரணத்தை ஆராயுமிடத்து "கற்றலில் ஆயத்தநிலை" முக்கிய இடம் பெறுகிறது. அதாவது ஒரு விடயத்தைக் கற்கும்போது அதைக் கற்பதற்கான அலகினைக் கற்பிப்பது புறக்குடத்தில் ஊற்றும் நீர்போன்றது. உதாரணமாக பெருக்கத்தெரியாதவர் எங்ஙனம் பரப்பளவு கணக்கினைச் செய்ய முடியும்? வகுப்புமட்ட அலகு கற்பிக்கப் பட்டதா? எனக் கேட்கும் கல்வி நிர்வாகிகளுக்கு கணக்குக் காட்டும் செயலாக கற்பித்தல் அமைகிறது. முன்னறிவின்றிய கற்பித்தலால் எதுவித பயனும் கிட்டப் போவதில்லை.

எனவே, எமது கல்வி நிலையில் வளர்ச்சி காணப்பட வேண்டுமாயின் சிறார்களின் மொழி அறிவு வளர்ச்சியில் ஒவ்வொரு ஆசிரியரும் அக்கறை கொள்ள வேண்டும். மாணவர்கள் நூலகத்தைப் பயன்படுத்தவும் சுய கற்றலில் ஈடுபடவும் அவகாசம் கிடைக்கும் வகையில் தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்கக்கூடிய நாட்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும்.

பாடசாலை மட்டத்தில் பின்னடைவான மாணவர்கட்கு மேலதிக வகுப்புக்கள் மூலம் கல்வி புகட்டப்பட வேண்டும். மொத்தத்தில் பாடசாலை மாணவர்களின் தரம் குறைவாயின் கற்றலுக்கான தரத்திற்கேற்ப பாடத்திட்டத்தை ஒழுங்கமைத்து, நன்கு திட்டமிட்டு செயல் சார்ந்த கற்றல் மூலம் வளர்ச்சியடைய உதவவேண்டும். அதாவது, ஒவ்வொரு பாடசாலையும் தனது மாணவர்களின் தரத்திற்கேற்ப இலக்குகளைத் தீர்மானித்து அவற்றை முழுமையாக அடையும் வகையில் பாடசாலைச் சமூகமே ஒருங்கிணைந்து செயற்படவேண்டும்.

வெறும் நெட்டுருக் கல்வியாக குறியீட்டு முறைக் கல்வியாக, பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் கல்வியாக அமையாது மாணவர்கள் முழுமையான அறிவு பெறும் வகையில் புலக்காட்சி பெறும் வகையில் - செயல் நிலைக்கல்வி வழங்கப்பட வேண்டும். போதனாமுறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதுடன் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டங்களை பயனுறுதி வாய்ந்ததாக்கும் வகையில் அனைவரும் செயற்பட வேண்டும். மாணவர்களின் ஆற்றலுக்கேற்ப ஆலோசனை வழங்குதல், வழிகாட்டுதல் என்பவற்றில் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். செயற்பட முன்வருவார்களா?

✳

**கல்வி என்பது கற்றல், கற்பித்தல் பற்றிய தெளிவான இலக்குகளையும், நோக்குகளையும் கொண்டதாக இருத்தல் வேண்டும். கல்வியைக் கற்பிப்பவருக்கு மதிப்பளிக்காமல் கல்வியை வளர்க்கவோ, வழங்கவோ முடியாது.**

**– பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறாரும் தொடர்பாடல் உறுதிறன்களை வளமாக்குதலும்

**தா**ய்மொழி மற்றும் இரண்டாம் மொழி ஆகியவற்றின் வழியான தொடர்பாடல் உறுதிறன்களை **(Communicative Competencies)** வளர்த்தலும், வளம் படுத்தலும் அண்மைக்காலக் கல்விச் செயற்பாடுகளில் அதிக முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

தொடர்பாடல் உறுதிறனை விளங்கிக்கொள்வதற்கும், விபரிப்பதற்கும் உளமொழியியல், சமூகமொழியியல், கற்பித்தலியல் முதலாம் துறைகளில் நிகழ்ந்து வரும் ஆய்வுகள் மிகுந்த பயனுறுதியுள்ளவையாக அமைகின்றன. மொழி பற்றிய அறிவு, இடைவினைகள் பற்றிய அறிவு, பண்பாட்டு அறிவு முதலியவற்றினூடாக தொடர்பாடல் உறுதிறன்கள் பற்றிய தெளிவான விளக்கங்களை உருவாக்கிக்கொள்ள முடியும். **(Saville Troike, 1982, 25)**

மொழி பற்றிய அறிவில் சொல் சார்ந்தபண்புகள், சொல் சாராத பண்புகள் குறிப்பிட்ட பேச்சுச் சந்தர்ப்பத்தில் அமையும் மொழிக்கோலம், மொழி வேறுபாட்டின் வீச்சு, அவை தாங்கிநிற்கும் கருத்து ஆகியவை உள்ளடங்கும். இடைவினைத்திறன்களில் தொடர்பாடல் சந்தர்ப்பம் பற்றிய புலக்காட்சி குறித்த சந்தர்ப்பத்துக்குரிய மொழியைத் தெரிவு செய்தல் வியாக்கியானம் செய்தல், இடைவினை நியமங்களை அறிந்து கொள்ளல், இடைவினை வாயிலாகக் குறிப்பிட்ட இலக்குகளை எட்டக்கூடிய தந்திரோபாயங்களை முன்னெடுத்தல் முதலியவை உள்ளடங்கும்.

தொடர்பாடல் உறுதிறன்களை வளர்த்தல் பண்பாட்டு அறிவுடனும் தொடர்புடையது. பண்பாட்டு அறிவில் சமூக அமைப்புப் பற்றிய அறிவு, சமூக பெறுமானங்கள் பற்றிய அறிவு, குறிப்பிட்ட சமூகத்தில் எவ்வாறு அறிவும் திறன்களும் கையளிக்கப்படுகின்றன. என்பது பற்றிய அறிவு ஆகியவை உள்ளடங்கும்.

தொடர்பாடல் திறன்பற்றி ஆராயும் பொழுது குறித்த மொழியில் ஆட்சி வளம் பெறுதல் அல்லது சரளமாக மொழியைக் கையாளுதல் என்பதும் முக்கியமானதாக அமைகின்றது. நீண்டநேரம் பேசுதல், தங்குதடையின்றிப் பேசுதல், ஒருங்கிணைவுடன் பேசுதல், வகை வகையாகச் சொற்களை எடுத்தாளுதல், சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமான விடயங்களைப் பேசுதல், ஆக்கத்திறனுடன் உரைத்தல் கற்பனைத் திறனுடன் இணைத்தல் முதலியவை மொழியாட்சி வளத்தை வெளிப்படுத்தும்.

வயது அதிகரிக்கவும், அறிதல் வளர்ச்சியடையவும் வளர்ந்தோரின் நியமங்களோடு மொழித் தொடர்பாடல் இணங்கிச் செல்வதாக அமையும். இவ்விடயம் தொடர்பாக நியுயோர்க் நகரத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வின் முடிவுகள் வருமாறு. **(LABOV, 1970)**

| வயது வீச்சு | – | இணங்கிப் போகும் விழுக்காடு |
|---|---|---|
| 08 – 11 | – | 52 |
| 12 – 13 | – | 50 |
| 14 – 15 | – | 57 |
| 16 – 17 | – | 62 |
| 18 – 19 | – | 64 |
| 20 – 39 | – | 84 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறாரின் கருத்தாடலை மீளவாக்கும் முகவர் **(Discourse reproducing agency)** என்ற வரிசையில் குடும்பம், பாடசாலை, சகபாடிகள் குழு என்பவை சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றன. அண்மைக்கால ஆய்வாளர்கள் நுண்மதி ஈவுக்குப் **(IQ)** பதிலீடாக மொழித் தேர்ச்சியைக் கொள் கின்றார்கள். அதாவது, மொழித் தேர்ச் சிக்கும் பாட அடைவுகளுக்குமிடையே நேரான இணைப்புக் குணகம் காணப் படுதல் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் மொழிக் கட்ட மைப்பின் இருமைப்பாங்கினைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. சமூகக்கட்டமைப்பின் அடித்தளங்களில் வாழும் மக்களின் மொழி "பொதுசன மொழி" **(Public Language)** எனப்படும். அடுக்கமைப்பில் மோலோங்கிய மக்கள் பயன்படுத்தும் மொழி வரன்முறை மொழி **(Fornal Language)** எனப்படும். வரன்முறை மொழியே கல்வி மொழியாக இருப்பதனால், சமூக அடுக்கமைப்பில் மேலுயர்ந்து நிற்போருக்குப் பாடசாலை மொழி சாதகமாக அமைந்துவிடுகின்றது.

கலைத்திட்டச் செயற்பாடுகள் இணைந்த கலைத்திட்டச் செயற்பாடுகள் என்ற கட்டமைப்புக்களை அடியொற்றியே மொழித்திறன்களும், தொடர்பாடல் சார்ந்த திறன்களும் மாணவர்களிடத்து வளர்த் தெடுக்கப்படுகின்றன. வகுப்பறைக் கற்பித் தலில் முழுமையான வசன ஆக்கங்க ளுக்கும் இலக்கண வழுவற்ற வெளிப்பாடு களுக்குமே முக்கியத்துவம் தரப்படு கின்றன. இவற்றை அடியொற்றியே நல்ல ஆங்கிலம் **(Good English)** பிரபல தமிழ் என்ற வற்புறுத்தல்கள் எழலாயின. நியம மான வகுப்பறைகளிலும், மத்திய தர வகுப்புக் குடும்பங்களிலும் முறையே ஆசிரியர்களும் பெற்றோர்களும் தமக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரிய தொடர்பாடல்களில் வினாக்களையே கூடுதலாகப் பயன்படுத்தலும் ஆய்வுகளின் வழியாகக் கண்டறியப்பட்டுள்ளன. அதாவது மாணவர்கள் வினாக்களுக்குத் துலங்குவோராய் மாற்றப்படுகின்றார்களேயன்றி வினா எழுப்புவோராக மாற்றப்படவில்லை. இது ஒரு வகையிலே மாணவர்களது திறனாய்வு ஆற்றலையும், தெறி சிந்தனையையும் பாதிப்படையச் செய்கின்றது.

சிறாரின் மொழி வளர்ச்சியில் முதல் மூன்று அல்லது நான்கு வயது வரையான காலத்தில் சொற்களஞ்சிய ஆக்கத்திலும், அடிப்படை இலக்கண விதிகளை அறிந்து கொள்வதிலும் பெற்றோரின் பங்கும் மற்றும் குடும்பத் தளத்தின் பங்கும் சிறப்பாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயது வரையான காலப் பகுதியில் தொடர்பாடலும், உரையாடலும் சகபாடிகளின் தொடர்புகளினால், வளமாக்குதலுக்கும், நெறிப்படுத்தலுக்கும் உள்ளாக்கப்படுகின்றது. கட்டிளமைப் பருவத்தில் சமூகப்புலக் காட்சி மேலும் வளர வளர்ந்தவர்களுடன் ஈடுகொடுக்கக் கூடியவாறான தொடர்பாடல் திறன்கள் மேம்பாடடையத் தொடங்கும். அதனைத் தொடர்ந்து சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு மொழித் தொடர்பாடலைப் பிரயோகிக்கும் ஆற்றல் மேலும் வளர்ச்சியடையும்.

தொடர்பாடல் திறன் என்பது பேச்சுவினை **(Speech act)** எழுத்து வினை ஆகியவற்றுடன் இணைந்தது. இது அங்கீகரிக்கப்பட்டதும், மரபு தழுவியதுமான மொழிப் பிரயோகங்களுடன், இணைந்தது. அது குறிப்பிட்ட சந்தர்ப்பத்துடனும், பண்பாட்டுச் சூழலுடனும் தொடர்புடையது இருவழித் தொர்பாடலில் வழங்குதல் பெறுதல் என்ற உரைத் தொடர்பு ஒழுங்கு இருக்கும்.

தொடர்பாடல் திறன்களின் வளர்ச்சியிலே வகுப்பறை இடைவினை சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றது. வகுப்பறை இடைவினைகளில் ஆசிரியர் மேற்கொள்ளும் வினாக்கள் பொதுவாக நான்கு வகைப்பாட்டினுள் இடம்பெறும்.

அவை:

1) பாட உள்ளடக்கப் பொருள் சார்ந்தவை
2.) காரணங்காணலுடன் தொடர்புடையவை
3) திறந்த வினாக்கள் சார்ந்தவை
4) சமூகம் சார்ந்தவை

பிளண்டேர்ஸ் **(Flanders, 1970)** மேற்கொண்ட ஆய்வுகளில் ஆசிரியர் இடைவினைகளும், மாணவர் இடைவினைகளும் பின்வருமாறு இனங் காணப்பட்டன.

**1) ஆசிரியர் பேச்சு – துலங்கல் சார்ந்தது**
உணர்வுகளை ஏற்றல், பாராட்டுதல், உற்சாகமளித்தல், மாணவர் கருத்துக்களை ஏற்றல், வினாவுதல்.

**2) ஆசிரியர் பேச்சு – தொடக்கி வைத்தல் சார்ந்தது.**
விரித்துரைத்தல், பணித்தல், விமர்சித்தல்

**3) மாணவர் பேச்சு – துலங்கல் சார்ந்தது**
துலங்கலை வெளிப்படுத்தும் உரை

**பேராசிரியர் சபா. ஜெயராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) மாணவர் பேச்சு – தொடக்கி வைத்தல் சார்ந்தது.

கருத்துக்களை முன்மொழிதல்

5) மௌனம் அல்லது குழப்பம்

வகுப்பறையில் நிகழும் தொடர் பாடல் நிலைப்பட்ட இடைவினைகள் மேற்குறிப்பிட்ட அலகுகளுடன் மட்டும் கட்டப்பட்டுவிடுவதில்லை. மேலும் விரிவான அடிப்படையில் இடைவினைகளை விளக்கும் பொழுது பின்வரும் படிநிலைகளைச் சுட்டிக்காட்டலாம்.

1) கற்றல் கற்பித்தலை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்புச் செய்தல் **(Structuring)**

2) அறிகைநிலை எழுச்சிநிலை உடலியக்க நிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட துலங்கலை ஏற்படுத்தும் வினாக்களைத் தொடுத்தல் **(Soliciting)**

3) வகை வகையான துலங்கல் விளைவுகள் உருவாக்கப்படுதல் **(Responding)**

4) தெளிவை உண்டாக்குதல், தொகுத்தல், விரித்தல் முதலியவற்றை உள்ளடக்கிய தெறித்தல் **(Reacting)**

தொடர்பாடல் எவ்வாறு தொழிற் படுகின்றது என்பதை அடிப்படையாகக் கொண்டே அதன் தரத்தை நிர்ணயிக்க முடியும். கருத்து, வடிவமைப்பு, சாராம்சம் என்பவற்றின் அடிப்படையில் தொடர் பாடல் பகுப்பாய்வு செய்யப்படும்.

## References


1. Aitchison, J (1981) Language Change: Progress or Decay? London, Fonlana
Brown, R (1973)

2. Brenner. M (ed) (1980) The Structue of Action, Oxford, Blackwell.

3. Coulthard, M, (1985) An Introduction to Discourse Analyci, London, Longman,

4. Holiday, M.A.K, (1975) Learning How to Meaw, Arnold.

5. Romaine, S. (1984) The Language of Children and Adolescents, Basil Blackwell, Oxford.






**மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**
**மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் – மன்னர்க்குத்**
**தன் தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்கு**
**சென்ற இடமெல்லாம் சிறப்பு.**

**– ஔவையார் –**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''விளக்கு'' தாளிகை நடாத்திய
உலக ஆசிரியர் நாள் சிறுகதைப் போட்டியில்
முதலிடம் பெற்ற சிறுகதை

# "வானம் பொழிந்தது...... அனைத்தும் நனைந்தது"

"தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா? வாழ்வை சுமையென நினைத்துத் தாயின் கனவை மிதிக்கலாமா?" ......... என்னே அற்புதமான வரிகள். கவிஞனின் உள்ளத்திலே உதித்து, ஒலிவடிவம் பெற்று, வானொலியிலே தவழ்ந்து, அவனது செவிகளில் அவ்வரிகள் நுழைந்தபோது மூளையிலே மின்னல் பளிச்சிட்டது போன்ற உணர்வு. இது வரையில் தோல்வியிலேயே துவண்டு கிடந்த அவன் இதயத்திலே புது இரத்தம் பாய, புதிதாகத் துடிக்கின்றது அவனிதயம். புத்துணர்வு பெற்ற அவன் மூளையிலே பதிந்து இருந்த பழைய நினைவுகள் ஒலி நாடாவாக மீள்கின்றன.

ஆம்..... நீண்ட காலங்களுக்குப் பிறகு பின்னிருந்து அவன் நினைவலைகள் மீட்டப்படுகின்றன. தனது தாயாரின் புனிதமான உழைப்பு தன்னை பட்டதாரி ஆக்கியது.... தாயின் கனவினை நனவாக்க இலங்கை நிர்வாகசேவை, கல்வி நிர்வாகசேவை போன்ற உயர் பதவிகளில் இடம் பிடிப்பதற்காக பட்ட பிரயத்தனங்கள்..... ஒரு புள்ளியினால் "கட்அவுட்" எனும் பெயரில் "நொக்அவுட்" ஆக்கப்பட்ட சந்தர்ப்பங்கள்..... பதவி ஆசை காட்டி அவனது தூய்மையான காதலுக்கு வேட்டு வைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்.... மாரி காலத்திலேயே இரை தேட மறந்து வயிற்றில் உள்ளன வற்றையே மீண்டும் மீண்டும் இரை மீட்கும் ஆவினம் போல் அவன் மூளை மீண்டும் மீண்டும் இவற்றையே மீட்டு நிற்கின்றது. ஆயினும் அண்மையில் அவன் சந்தித்த துன்பமோ இவற்றுக்கெல்லாம் சிகரம் வைக்கின்றது. சுற்றிச் சுற்றி வந்து அவன் சிந்தனையைக் குழப்பிக்கொண்டே இருக்கின்றது. நாடகவடிவில் பார்த்த விந்தனின் "துயரப்பாறை" இன்று அவனது வாழ்வில் நிஜப்பாறையாக மாறிய வடிவம் அவனை பேரதிர்ச்சிக்குள்ளாக்கியது. உயிருக்குயிராய் நேசித்தவர்கள்.... ஒரே தட்டில் உணவுண்டவர்கள்...... நீயில்லை யென்றால் நானும் இல்லையென்று உணர்வுகளைப் பரிமாறிக்கொண்டவர்கள் என்று அவன் உண்மையாக நேசித்த வர்களே அவனுக்கெதிராக........ அவனை வீழ்த்துவதற்காகத் திரை மறைவில் ஆடிய நாடகம் அவனால் ஜீரணிக்க முடியாததாகச் சிந்தையைக் குழப்பி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோசெப் ஆரோக்கியம் குருஸ்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.
மடு வலயக் கல்விப் பணிமனை,

அண்மையில் வெளிவந்திருந்த இலங்கை கல்வி நிர்வாகசேவை போட்டிப் பரீட்சை முடிவிலே ஒரு புள்ளியினால் தோல்வி கண்டிருந்தான். ஏற்கனவே இத் தகைய "கட்அவுட்கள்" அவனை "நொக் அவுட் "ஆக்கி அவனது முன்னேற்றத்துக்கு வேட்டு வைத்திருந்தாலும் இத் தோல்வி உண்மையிலேயே அவனை அதிர்ச்சிக் குள்ளாக்கி இருந்தது. ஆயினும் இப்பரீட் சையிலே இவனைப் போன்று ஒரு புள்ளி யினால் தோல்வி கண்டவர்களையும் வெற்றிடமாகவுள்ள கல்வி நிர்வாக சேவைப் பதவிகளுக்கு நியமிக்கலாம் என்னும் மேலதிகாரியின் உத்தரவும், அதனைத் தொடர்ந்து அவனுக்கு கிடைத்த கோட்டக்கல்வி அதிகாரி பதவியும் அவனுக்குச் சற்று ஆறுதலைத் தந்தபோதிலும் அதுவே பல உள்ளங் களின் சுயரூபத்தினை இனங்காணக் கூடிய நிகழ்வாகவும் அமைந்தது. "ஒரு புள்ளியினால் தோல்வி கண்டாலும் தோல்வி தோல்வி தானே....... ஒரு புள்ளி குறைந்தால் பல்கலைக்கழகம் போக முடியுமா? இவனுக்கு மட்டும் ஏன் இந்தச் சலுகை இவனைச் சும்மா விடக்கூடாது". எனும் சாரப்பட எத்தனை புகார்கள்.... மொட்டைக் கடிதங்கள்..... "பெட்டி சங்கள்......." தொலைபேசி அழைப் புக்கள்.... அப்பப்பா.... உயர் அதிகாரியைச் சங்கடத்திற்குள்ளாக்கியது மட்டுமன்றி, சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்த கதையாக ஏற்கனவே நொந்து போயிருந்த அவன் உள்ளத்தை மேலும் நொருக்கிவிட்டது.

ஏழு மாதங்களாக அவன் திறமை யாக நிருவகித்து வந்த அவனது கோட்டக்கல்வி அதிகாரி பதவி அவனிட மிருந்து எதுவித காரணமும் கூறப்படாமல் கைமாறப்பட்டது. அவனை சம்மாட்டி கொண்டு தாக்கியது போன்றிருந்தது.

"ஓ...... பதவியே........ கதிரையே உன்னைப் பற்றிய ஆசை......... உன்னைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஆசை...... எவ்வளவு பயங்கரமான வேலைகளை யெல்லாம் செய்கிறது பார்த்தாயா? உண்ட வீட்டிற்கே இரண்டகம்..... கூட வந்தவனுக்கே குழிபறிப்பு. குமுறிக்குமுறி அழுகின்றான். அந்த அழுகையின் மத்தியில் ஆழ்ந்த தீர்மானம் ஒன்று அவன் உள்ளத்தில் உதயமாகின்றது. ஆம்..... இந்தச் சுயநலவாதிகள் மத்தியில் இனி ஒரு நிமிட நேரம் கூட இருக்கக்கூடாது. எண்ணிப் பார்க்க முடியாத கஸ்டங்கள் நிறைந்து காணப்படும் வன்னிப் பிரதேசத் திற்குச் சென்றுவிடுவது. அங்குள்ள மக்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்வது, உறுதியாக எடுக்கப்பட்டு நிறை வேறிய அவனது தீர்மானம். இன்று அவனை வன்னியில் ஒரு அதிகாரியாகச் செயற்பட வைத்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பச்சி ஸ்கூல் விசிற் போக வேண்டும் என்றீங்க...... நேரம் போகவில்லையா?........ வன்னியில் தாயாக இருந்து தன்னைக் கவனித்து வரும் பெறா மகள் ஜெனீற்றாவின் குரல் அவனை மீண்டும் நிஜ உலகிற்குக் கொண்டு வரு கின்றது. "ஆமாம் மறந்துவிட்டேன்"... தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு வேக வேகமாகப் புறப்படுகின்றான்.

" அம்மையா மழை வரும் போல கிடக்கு, குடை எடுத்துக் கொண்டு போங்கோ".............. பேரன் மகிழனின் குரல் செவியில் விழுந்ததும் உள்ளூர அவனுள் ஒரு நகைப்பு. வன்னியில் வாழ்கின்ற மக்களுக்கெல்லாம் வானமே குடையாக விளங்கும் போது அவனுக்கு மட்டும் குடையா?........ ஆம் என்ன விசித்திரமான உலகம்........ வன்னி மட்டும் இவ்வுலகமே கண்டிராத புதியதொரு உலகம். உலகம் புதியதோர் திசையில் எங்கோ போய்க் கொண்டிருக்க வன்னி மட்டும் எதிர்த் திசையில் சிதையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றதா?........ இங்கு காலடி வைத்தநாள் முதலாக அவனது இதயத் திலே இந்த ஓலம் ஒலித்துக்கொண்டே யிருக்கின்றது.

மடு மாதாவின் பாதத்திலே பய பக்தியாகக் கூடியிருக்கும் பக்தர்களாக மரங்களுக்குக் கீழே கல் பரப்பி மண்டி யிட்டிருக்கும் மாணவர்கள், கரும் பலகை யினையே கொண்டிராத, வகுப்புகள் எனச் சொல்லிக்கொள்ளும் மாணவர் குழுக்கள். எந்த மரத்திற்குக் கீழே எந்தப் பாடசாலை என இனங்காண்பதற்கு ஏராளமான நேரம் எடுக்கும் கடினமானநிலை. நிலத்திலே இருந்தவாறாக துள்ளிக் குதிக்கும் மாணவனுக்கு உண்ணி கடித்ததா? எறும்பு கடித்ததா? தேள் கொட்டியதா என்பதை அனுமானிக்க முடியாத அவல நிலை. பல காலங்களாக மூச்சடக்கித் தேடி முத்தினைக் கண்டவன் நிலை போல இலவசப் பாடநூல் கிடைக்கப் பெற்ற ஆசிரியர்கள், மாணவர்கள்...... பரவசநிலை. இவ்வளவிற்கு மத்தியில் தான் கல்வி அபிவிருத்திக்கான அதிகாரி, சிரிக்க முயற்சிக்கின்றான். ஆனால் மூச்ச டைப்பது போன்றிருக்கின்றது.

தான் தரிசிக்க வேண்டிய பாடசா லையை நெருங்கிவிட்டான். "அம்மா" என ஒரு அலறல். "ஈ36 இலக்கமும் 21-12-1927 திகதியும் கொண்ட கல்வி அமைச்சின் சுற்று நிருபம் என்னாச்சி".... அதிர்ச்சியில் திரும்பிப் பார்க்கின்றான். ஆசிரியர் ஓங்கிவிட்ட உதை தாங்காமல் மாணவன் ஒருவன் எழுப்பிய அவலக்குரல்.

"ஏன் அடிக்கின்றீர்கள்....."

"வேறு என்ன சேர் செய்யிறது....... உணர்ச்சி வசப்பட்ட நிலையில் குமுறிப் போயிருந்த ஆசிரியர் ஓரளவு சுயநினைவு பெறுகின்றார். "பாருங்க சேர் இலவசப் புத்தகங்கள் பெற்றுக் கொள்ளுறது. எவ்வளவு கஸ்டம்....... இங்கு புத்தகங்கள் வந்து சேர்ந்து, கிடைக்கிற புத்தகங்கள் பங்கு வைச்சு, இவங்களுக்கு ஒப்படைக் கிறதுக்குள்ள இரண்டு தவணைகள்; ஏன் சில நேரம் மூன்று தவணைகளும் முடிஞ் சிடும். புத்தகங்கள் கிடைத்தது, கிடைக் காதது பற்றி கவலையில்லை நாங்கள் பாடத்திட்டத்த ஒழுங்கா முடிக்கணும். இல்லையென்றால் ஆயிரத்து எட்டுக் கேள்விகள், குறை கண்டுபிடிப்புக்கள், குற்றச்சாட்டுக்கள், இதுக்கெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பதிலளிக்கப் பயந்து நான் வவுனியா வுக்குப் போயிருந்தபோது எனது சொந்தக் காசில போட்டோக் கொப்பி எடுத்துக் கொண்டு வந்து கொடுத்த பாடப் புத்தக பிரதிகள் சேர், அதுவும் பிராமணாலங்குள செக் பொயிண்டில நிண்ட ஆமிக்காரன் விடமாட்டன் எண்டிட்டான். பெரியவண்ட காலில விழாத குறையா கெஞ்சி மன்றாடிக் கொண்டு வந்து இவங்களுக்குப் பகிர்ந்து கொடுத்திருந்தன்.... சேர்... அதைத் தொலைச்சிட்டு வெறுங்கையோடு வந்து நிக்கிறான் சேர்.... ஆத்திரம் வருமா? இல்லையா சொல்லுங்க சேர்'' அதிகாரியையும் தன் வழிக்கு இழுத்து தனது ஆத்திரத்திற்கு நியாயம் கற்பிக்க வேண்டும். என்ற ஆதங்கத்திலே பேசிய ஆசிரியரது பணியிலே அர்ப்பணிப்பும், ஆத்திரத்திலே நியாயமும் தென்பட்ட போதிலும் "நீங்க ஆத்திரப்படுறதில அர்த்தம் இருக்கு..... ஆனால் அடிச்சதில தான் நியாயமில்லைப் போல எனக்குத் தோன்றுது...." ஆசிரியரின் முகத்தை நேருக்கு நேர் பார்த்துக்கொண்டு கூறுகின்றான். அவர் தலையைக் குனிந்து கொள்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தலையை நிமிர்ந்து பாருங்க சேர்... இதுதானா நீங்கள் கொடுத்த.... இந்த மாணவன் தொலைத்த போட்டோப் பிரதிகள்...." அவனது கந்தோர் பையினுள் இருந்து எடுத்துக்கொடுத்த அந்தக் குறிப்புக்களினை தொலைந்துபோய் மீளக் கிடைத்த புதையலைக் கண்டவர்கள் போல ஆசிரியரும், மாணவரும் ஆச்சரியம் மேலிட உற்றுப்பார்க்கின்றனர்.

உங்களிடம் எப்படி இது?" அவர்கள் இருவரதும் முகத்திலே இந்தக் கேள்விக் குறி ஒரே நேரத்தில்......

அதற்குப் புன்னகை ஒன்றினை பதிலாக உதிர்த்துவிட்டு நகர்கின்றான். அவன் வரும் வழியில் தேநீர்க்கடையிலே கைதுடைப்பதற்கு அவனுக்குத் தரப்பட்ட பேப்பரை விரித்துப் பார்த்துவிட்டு அதனுடன் சேர்ந்த எல்லாப் பிரதிகளையும் கடைக்காரரிடம் காசு கொடுத்து வாங்கிய தையும் அவற்றை அன்று உதை வாங்கிய மாணவனின் தந்தை மகனுக்குத் தெரியாமல் திருடிக்கொண்டுபோய் அந்தக் கடைக்காரனிடம் கொடுத்து அதற்காக வாங்கிய ஒரு இறாத்தல் பாணின் மூலம் தான் அவனது குடும்பத்தவர்களது வயிறு பல நாட்களுக்குப் பிறகு ஓரளவு நனைந்தது. என்பதனையும் அவர்களுக்குக் கூறினான். மீண்டும் மீண்டும் அந்தப் போட்டோப் பிரதி பாண் வடிவில் அந்த வயிறுகளை நனைப்பதைத் தடைசெய்யும் என்ற நோக்கிலே நடந்ததைக் கூறாமல் புன்னகையுடன் செல்கின்ற அவனை ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர்.

அதே புன்னகை மாறாமலே அடுத்த வகுப்பு எனக் கருதப்பட்ட புளிய மரத்தைத் தாண்டிச் செல்கின்ற அவனைக் கண்டு நெளிகின்றார் ஒரு ஆசிரியர். முழந்தாளில் இருக்கின்ற மாணவனையும், ஆசிரியரையும் மாறி மாறிப் பார்க்கின்றார். "வீட்டுப்பாடம் கொடுத்துவிட்டா ஒழுங் காய்ச் செய்து கொண்டு வாறாங்க இல்ல சேர்"

அந்த ஆசிரியரை நேருக்கு நேர் உற்றுப் பார்க்கின்றான். "மண்ணெண்ணை ஒரு லீற்றர் 300ரூபா விற்கும் போது விறகு அடுப்பின் நெருப்புத் தணலின் வெளிச்சத்தில் இரவுச் சாப்பாடு என்னும் பெயரில் எதனையோ வயிற்றுக்குள் தள்ளிக் காலத்தை ஓட்டுகின்ற இந்த மாணவர் களால் எப்படி வீட்டுப்பாடம் செய்ய முடியும் என்று எனக்கு நல்லாத் தெரிந் திருந்தும் என்னால வேறு என்னதான் செய்யமுடியும்". அவனைப் பயபக்தியுடன் பார்க்கும் ஆசிரியரது பார்வை பௌ வியமாக எடுத்துக்கூறு கின்றது. ஆசிரியரின் பார்வைக்குப்பதில் சொல்லு முன் அவனது சிந்தனையைத் திசை திருப்புகின்றது இயற்கை.

"சோ" வென ஓலமிட்டுக்கொண்டு பொல பொலவெனப் பெய்து கொண்டு வரும் மழையைக் கண்டு பதட்டமும், பரபரப்பும் அடைந்த மாணவர்களும் ஆசிரியர்களும் நிலத்திலே கிடந்து தமது புத்தகங்கள், கொப்பிகள், அலுவலகக் குறிப்பேடுகள் போன்றவற்றைப் பொறுக்கி அவை நனைந்து விடாமல் தங்களது ஆடைகளுக்குள் செருகிக் கொள்கி றார்கள். முழந்தாளில் இருந்த மாணவன் நிலத்திலே விரிக்கப்பட்டிருந்த யூ. என். எச். சீ. ஆர். அன்பளிப்பு பொறிக்கப்பட்ட மெழுகுச் சேலையை ஆசிரியரும், அதிகா ரியும் நனைந்து விடாமல் தலைக்குமேலே தூக்கிப் பிடித்துக்கொண்டிருக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அதிகாரி இதுவரை கண்ட பாடசாலைகள் எல்லாவற்றிலும் பாடசாலை முடிவடைவதை மணியோசை நிர்ணயிக்க வன்னியிலே மழையோசை நிர்ணயித்து நிற்பதை நிதானிக்கின்றான். மழையில் நனைந்த வண்ணம் மாணவர்கள் எதையோ பாடுவது மழை இரைச்சலுக்கு மத்தியிலும் அவன் காதுகளில் ஒலிக்கின்றது. ஆசிரியரிடம் கேட்கின்றான்.

"என்ன பாடுகின்றார்கள்?"

"தமிழ்த்தாய் வாழ்த்து சேர்"

"இல்லை வேறு ஏதோ பாடுகின்றார்கள்"

"வானம் மளந்த அனைத்தும் அளந்து வளர்மொழி வாழியவே! எனப் பாடுறான் சேர்" ஆசிரியரும் அவருடன் நனைந்தபடி கூறுகிறார்.

"இல்லை வானம் பொழிந்தது அனைத்தும் நனைந்தது என்றல்லவா பாடுகின்றார்கள்" நம்பமுடியாதவனாக அவன் கூறுகின்றான்.

"இல்லை சேர் தமிழ்தாய் வாழ்த்துத்தான் பாடுகின்றார்கள்...." ஆசிரியர்.

ஏற்க மறுக்கின்றது அவன் செவிகள் "வானம் பொழிந்தது, அனைத்தும் நனைந்தது" எனும் வரிகளே மீண்டும் மீண்டும் அவன் செவிகளில் ஒழிக்கின்றது.

# விளக்கின்பணி மகத்தானது.

*"**அ**ளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ் அவன் நாமம் போற்றி. ஒக்டோபர் 06 சர்வதேச ஆசிரியர் தினத்தை கௌரவிக்கும் வகையில் "விளக்கு" சஞ்சிகையின் இவ்விசேட மலர் வெளியிடப்படுவது கண்டு பெரு மகிழ்வடைகின்றேன்.*

*தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆசிரியர் வாண்மைவிருத்திக் குழுவின் முயற்சிகள் பாராட்டப்படவேண்டியவை. நலிவுற்றிருக்கும் எமது தாயகத்தின் கல்விச் செயற்பாடுகளுக்கு புத்துயிரூட்ட பல் பக்க முயற்சிகளும். அற்பணிப்புகளும். செயற்பாடுகளும் தேவைப்படும் இத்தருணததில் "விளக்கின்" பணி மகத்தானது.*

*மனித விழுமியங்கள் நிலைபெற ஒழுக்கம் நிறைந்த மாணவ சமுதாயத்தை மீழக்கட்டியெழுப்ப வழிகாட்டியாக "விளக்கு" பிரகாசிக்க வேண்டும்.*

*ஆசான் நல்லாசானாகத் திகழ வேண்டும். என்பது இம்மலரின் ஊடாக நினைவூட்டப்படுகின்றது. விளக்கின் கல்விப்பணி தொடர எனது உளப்பூர்வமான வாழ்த்துக்கள்.*

**எம். எஸ் ஏ. எம். முபாறக்**
அதிபர்.
ஒஸ்மானியாக் கல்லூரி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதவள கல்வி முகாமைத்துவத்தில் புதிய அணுகு முறைகள்

**இ**ன்று எமது பிரதேசப் பாடசாலைகளும், கல்வி நிறுவனங்களும் பல்வேறு பிரச்சினைகளையும், சவால்களையும் எதிர்கொள்கின்றன. மனித முரண்பாடுகளினால் நிறுவனங்களின் வினைத் திறன்கள் வீழ்ச்சியடைகின்றன. இதன் பல பாதகமான விளைவுகள் எதிர்கால சமூக அபிவிருத்தியைப் பாதிக்கின்றன. பல்வேறு பிரச்சினைகளுக்கும் ஈடுகொடுத்து, இயைபாகி நிறுவனங்களின் நோக்கங்களை நிறைவேற்ற புதிய மனிதவள முகாமைத்துவ செயலாற்றுகைகளையும், கட்டமைப்புக்களையும் உருவாக்க வேண்டியுள்ளது.

பல்வேறு நிலைகளில் ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளையும் இலகுவாகத் தீர்ப்பதற்கே பல நிறுவனங்களில் முகாமையாளர்கள் நியமிக்கப்படுகின்றார்கள் ஆனால் பெரும்பாலான அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் அரச சேவையிலுள்ளவர்களாலும், பாடசாலை முகாமையாளர்களினாலும் ஏற்படுத்தப்படுகின்ற பிரச்சினைகள் மேலும் அதிகமாகி விடுகின்றன. என யுனிசெப் அமைப்பின் சமூக முகாமை நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். இதைப் போக்க மனிதவள முகாமை பற்றிய விழிப்பு அவசியமாக வேண்டப்படுகின்றது. அத்துடன் தற்போதைய எல்லாப் பொது நிறுவனக் கட்டமைப்புக்களிலும் நிர்வாகக்கலாசாரம் மாற்றமடைந்து முகாமைத்துவகலாச்சாரமே நடைமுறையில் கைக்கொள்ளப்படுதலையும் பலர் அறி



யாமல் உள்ளனர். இந்நிலையைப் போக்கவும் பல்வேறு முன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

### சிறந்த முகாமையாளர்

ஏனையவர்களினூடாகப் பணிகளை நிறைவேற்றும் கலையே மனிதவள முகாமைத்துவம் என விபரிக்கப்படுகிறது. இக்கலையில் முகாமையாளர் சிறந்த தீர்மானங்களை எடுக்கக்கூடியவராகவும், சுயமாகக் கருமங்களை ஆக்கக்கூடியவராகவும், தெளிந்த சிந்தனையும் பரந்த அறிவும் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். சுறுசுறுப்பு, விவேகம், அவதானம், அனுபவம், புதியவற்றை உருவாக்கும் ஆற்றல், என்பவற்றுடன் ஊழியர்களின் சமூக - உளவியல் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய திறனும், அன்பளிப்புக்களைப் பெறாத தன்மையும், ஊழியர்களின் தவறுகளைத் தனிமையிலும் திறமைகளைப் பலர் முன்னிலையிலும் தெரிவித்தல் ஆகிய செயலாற்றலிலும் திறனுள்ளவராகவும் விளங்குதல் சிறப்பாகும்.

ஊழியர்களின் விருப்பமான உழைப்பே நிறுவன வளர்ச்சிக்கு அவசியம் என்ற உணர்வை ஊழியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் ஏற்படுத்துவதோடு, ஊழியர்கள் **தமது நிறுவனத்தின் மூல விழுமியங்களுக்கு மதிப்புக் கொடுக்கும் சூழலையும்** முகாமையாளர்கள் ஏற்படுத்த வேண்டும்.

நிறுவனத் தலைவர்கள், முகாமையாளர்கள் உயர் கல்வியைப் பெற்றிருப்பதுடன் தேவையான போது அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் மன உணர்வையும் பெற்றிருத்தல் வேண்டும். முகாமைத்துவத் துறைகளில் ஆய்வுகளை நடாத்துகின்ற திறனுடன், தம் தொழில்சார்ந்த அமைப்புக்களைக் கட்டி எழுப்பும். வல்லமையும் தமக்கென ஒரு ஒழுக்கக்கோவை ஒன்றைப் பின்பற்றுதலும் பொருத்தமானதாகும். சமூகம் விரும்பும் நடத்தைகளை உருவாக்கி தொழில் கௌரவத்தைப் பாதுகாத்து தனதும் ஏனைய ஊழியர்களினதும் தொழில் அபிவிருத்தியில் ஈடுபாடுகாட்டுவதன் மூலம் முகாமையாளர் எல்லோருக்கும் வழிகாட்டும் ஒளி விளக்காகலாம். இதற்குத் தற்போதைய நிலைமாறும் சூழ் நிலைகளில் அதற்கான மனிதவள தந்திரோபாய முகாமை அறிவியலைக் கற்பது அவசியமாகும்.

**தந்திரோபாய முகாமை:**

விரைவான சூழல் மாற்றங்கள் நடைபெற்றுக்கொண்டே இருக்கும் அவை தவிர்க்க முடியாதவை. ஆனால் போட்டிகளும், சவால்களும் வெற்றி கொள்ளப் படக்கூடியவை. இவை சரியான நேரத்தில் சரியான தந்திரோபாய நுட்பத்தைச் சரியான வழிகளில் பயன்படுத்துவதன் மூலமே சாத்தியமாகும். இங்கு தந்திரோபாயம் **(Strategy)** என்பது சூழலின் நிலமைகள் சவால்களுக்கு ஏற்ப நிறுவனத்தின் நன்மைகளைக் கருத்திற்


# பா. தனபாலன்

உப பீடாதிபதி (கல்வித் தர மேம்பாடு)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.


கொண்ட ஒன்றிணைக்கப்பட்ட தொடர்ச்சியான கருத்துக்களும், செயற்பாடுகளும் சேர்ந்த ஒரு விசேட திட்டமாகும். இது சூழல் நிலமைகளுக்கு ஏற்ப மாற்றமடையும் தன்மையதான நிபந்தனைகளையும் கொண்டது.

தந்திரோபாய நுட்பங்களைக் கொண்ட தீர்மானங்களே ஒரு நிறுவனத்தின் சிறந்த தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சியை உறுதி செய்கின்றன. ஒரு நிறுவனத்தின் தகவல்களையும், செயற்பாடுகளையும் பகுப்பாய்வு செய்வதுடன், நிறுவனத்தின் தேவைகள், எதிர்கால ஆபத்துக்கள், சவால்கள் என்பவை பற்றிய முழுமையான மதிப்பீடே தந்திரோபாய தகவல் முறைமைத்திட்டமிடல் எனப்படும்.

குறிப்பிட்ட நிறுவனத்தின் இலக்கை அடைவதில் அச்சுறுத்தலாகவும், தடையாகவுமுள்ள காரணிகளை எதிர்த்து நிற்கக்கூடிய வகையில் தந்திரோபாய மாற்றீடுகளைப் பகுப்பாய்வு செய்து, சிறப்பான மாற்று உத்திகளைத் தெரிவு செய்தலும் அவசியமாகும். இதற்குத் தகவல் தொழில் நுட்பத்தையும், தொடர்பாடல் முறைமைகளையுமே முழுமையாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

தகவல் தொழில் நுட்பத்திற்கான தந்திரோபாயப் பங்களிப்பு **(The Strategic Rote for Information Technology)** மனிதவள முகாமையில் இன்று பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. கணினி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூடான தகவல் தொழில்நுட்பமானது தொழிற்பாட்டு வினைத்திறனை மட்டும் பெற என்ற நிலை நீங்கி அது மனிதவள முகாமை யின் பல்வேறு மட்டங்களுக்கும் உதவும் வகையில்; தகவல்களை வழங்குதல். **தீர்மானம் எடுத்தல், அறிக்கையிடல், கட்டுப்படுத்தல்,** எதிர்கால நடவடிக்கைகளில் ஈடுபடல் போன்ற பல்வேறு முகாமைத்துவத் தொழிற்பாடுகளுக்கும் பயன்படுகின்றது. இதனூடாகத் திறமை மிக்கதான வளப் பயன்பாட்டினையும் ஏற்படுத்தமுடியும். இங்கு வினைத்திறன் **(Efficiency)** பயனுறுதி **(Effectiveness)** என்ற இரண்டும் முக்கியம் பெறுகின்றன. வினைத்திறன் வளங்களோடும், பயனுறுதி குறிக்கோள்களோடும் நிறுவனத்தை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லும்.

நிறுவனத்தின் செயற்திட்டங்களை வெற்றிகரமான ஒரு முடிவு நிலைக்குக் கொண்டு வருதலைச் சாதனை புரிதல் என்ற அம்சம் குறித்துக் காட்டுகின்றது. ஒவ்வொரு ஊழியரும் நிறுவனத்தின் நோக்கங்களோடும் இலட்சியங்களோடும் வாழும் போதுதான் சாதனை புரிதல் ஏற்படும். சாதனை புரிதலும், புதுமையான ஈடு இணையற்ற திட்டங்களை உருவாக்குதலும் ஊழியர்களின் பங்களிப்பினை உயர்த்த வழிகாட்டும்.

பொது, கல்வி நிறுவனங்கள் மக்களின் மாணவர்களின் தேவைகளைப் பிரதிபலிப்பதால் நீதியும், நேர்மையும் முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. ஊழியர்கள் நேர்மையாகவும், வெளிப்படையாகவும் செயற்படுவார்களேயானால் நிறுவன வளர்ச்சிக்கும், சாதனைகளுக்கும் அது உறுதுணையாக இருக்கும். இதற்கு முகாமைத் தலைவர் ஊழியர்கள் இணைந்து தர உயர்ச்சிக் கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

### தர உயர்ச்சிக் கலந்துரையாடல்கள்:

நிறுவனங்களில் பணிபுரியும் அனைவரும் பங்குபற்றக்கூடிய விதத்தில், எந்தவிதமான நெருக்கடியான சூழ்நிலைகளிலும் உவப்பூட்டும் வகையில் கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்ய வேண்டும். நிறுவன தர உயர்ச்சி அடிப்படையில் அனைவரது கருத்துக்களுக்கும் உரிய மதிப்பளிக்க வேண்டும். தலைவர் மேற்கொள்ளும் முடிவுகளில் ஊழியர்களின் கருத்துக்கள் பிரதிபலிப்பது நல்லது. மேற்பார்வை, உள்ளக முகாமைத்துவத்தில் தர உயர்ச்சிக் கலந்துரையாடல்கள் மிகுந்த பயனைத்தரும்.

பணிகளை நிறைவேற்றும் ஆற்றல் மீது மட்டுமன்றி, நிறுவனக் குறிக்கோள்களை ஏனையவர்களினூடாக அடைய உதவுகின்ற திறமைகள் மீதும் தலைவர் ஒருவரின் வெற்றி தங்கியுள்ளது. இதற்கு ஊழியர்களுடனான தொடர்பு மிக அவசியம். பிரச்சினைகளுக்கு உறுதியான தீர்வுகளைக் காண்பதுடன் அத்தகைய திறமைகளை ஊழியர்களுக்கும் முகாமையாளர் புகட்ட வேண்டும். இதற்குத் தர உயர்ச்சிக் கலந்துரையாடல்கள் பெருமளவு உதவியளிக்கும். உரிய திறமைகள், விருப்பங்கள் உடையோருக்குக் கடமைகளுக்குரிய அதிகாரங்களை வழங்குவதும் அவர் யாருக்குப் பொறுப்பானவர்! வகை கூறக்கூடியவரா! என்பது பற்றியும் முகாமையாளர் தீர்மானிக்க கலந்துரையாடல்கள் உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வகைகூறல் அல்லது பொறுப்பேற்றல் என்பது தனக்குள்ள பொறுப்புக்களை சரிவர ஏற்று, அதற்கான விளைவுகளை உணரும் தன்மை, தனது கடமையிலிருந்து விலகிக் கொள்ள முடியாத மன உணர்வு பெறல், சமூக நீதி நியாயங்கள், தத்துவ சிந்தனை கலா சாரப் பெறுமானங்கள் இவைகள் அனைத் தும் அடங்கும். பொதுவாகவே இது தொடர்பான உணர்வுகள் அரசாங்க ஊழியர்களுக்குக் குறைவாகவே உள்ளது என விமர்சிக்கப்படுகின்றது. இந்த நிலையை நீக்க புதிய நிறுவன கலாச் சாரங்களை தலைவர்களும், ஊழியர் களும் ஏற்படுத்த வேண்டும்.

**சமூக நிறுவன கலாசாரம்; (Socio - Organisational Culture)**

மனிதவள முகாமை நோக்கிய கலாசாரம் என்பது சமூகக்கலாசாரம், நிறுவன கலாசாரம் என இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றது. பொதுவாக சமூக நடத்தைகளின் தொகுப்பாகவே சமூக கலாச்சாரம் கொள்ளப்படுகின்றது. இப் பண்புகள் ஒவ்வொரு சமூக அங்கத் தவரது நம்பிக்கைகள், நடத்தைகள், அவாக்கள், என்பவற்றின் மீது செல் வாக்குச் செலுத்துகின்றது. இச்சமூகக் கலாசார விழுமியங்களில் நிறுவனங்களும் ஊடாடி தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு நிறுவனத்தின் நாடித்துடிப்பின் எச்சங்கள் சமூக கலா சாரம் நோக்கிய அதன் வெளியீட்டு இதழ்கள், நூல்கள், ஆய்வு ஏடுகள், விவர ணங்கள், தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள், பத்திரிகை அறிக்கைகள் என்பனவாகும்.

நிறுவன கலாசாரம் என்பது அதன் வழமையான செயற்பாடுகளை மேற்கொள் வதாகும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என எடுகோள்களின் அடிப்படையில் உரு வாக்கப்பட்டு பயன்படுத்துகின்ற செயற் பாடுகளின் தொகுப்பாகவுள்ளது. இக்கலா சாரங்கள் வழமையானதாக இருப்பினும் முகாமையாளர்களால் மாற்றப்படலாம். புதுமைப்புனைவுகள் ஏற்படலாம். அப் போதுதான் நிறுவனம் வெற்றிப்பாதையில் வீறு நடைபோடும்.


கலாசாரத் தொகுப்புக்களில் ஊக் கப்படுத்தல் தொடர்பாக கூட்டுக்கலாசாரப் பண்புகள் கவனத்தில் எடுக்கப்படு கின்றன. இதில் வேலை தொடர்பான ஊழியரின் எண்ணம், பாதுகாப்புத் தன்மையின் பங்கு, அதிகார இடை வெளி, சமயம் மற்றும் கலாசார நம்பிக் கைகளின் பாங்குகள், ஆர்வங்கள் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன.

மனிதவள அபிவிருத்தி முகாமைத் துவ நோக்கில் மேற்கூறிய விடயங் களுடன் நிறுவனம் தன்னை எப்பொழுதும் உயிர்துடிப்புள்ளதாக வைத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் புதியன புனைவ திலும் அக்கறை காட்ட வேண்டும். பயன் தரும் முகாமை மூலமே நிறுவனங்கள் உயரவும், ஒரு நாடு அபிவிருத்தியடை யவும் முடியும். இதற்குச் சிறந்த முகா மைத்துவத் தலைவர்களின் வழிகாட்டல் அவசியமாகும். தான்விரும்பிய ஒன்றை, தான் விரும்பியபடி மற்றவர்களைக் கொண்டு அவர்களது விருப்புடன் செய்து முடிப்ப வரே சிறந்த முகாமையாளர். இந்த முயற் சியில் அவர் மேற்கொள்ளும் உபாயங்களே சரியான மனிதவள முகா மைத்துவமாகும். இதுவே நிறுவன உயர்வுநோக்கிய இலக்கிற்கு வழிகாட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்



ஏட்டுக்கல்வியும், தொழிற் கல்வியும் இணையப் பெற்ற நாட்டிற்தான் அறிவும், திறனும், வாழ்வும் வளமும், பெருகும். அறிவும் திறனும் ஒருங்கே பெற்று ஆற்றல் உள்ளவர்களை உருவாக்கக்கூடிய டிப்ளோமா கற்கை நெறிகளைக் கொண்டு நடாத்த ஏற்புடைத்தான சுதந்திரமான கூட்டுத்தாபன அமைப்பின் அவசியத்தை நன்குணர்ந்த இலங்கை அரசு 1995ம் ஆண்டு 29ம் இலக்கச் சட்டத்தின் கீழ் இலங்கை உயர்தொழில் நுட்ப கல்வி நிறுவனத்தை **(Sri Lanka Institute of Advanced Technical Education)** உருவாக்கியது.

திணைக்கள வடிவில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரிகள் இலங்கை நிதி நிர்வாகப் பிரமாணங்களுக்கு அமைவாகத் தொழிற்பட வேண்டியிருப்பதால் மூன்றாம் நிலைக்கல்வியில் உயர் தகைமையுடைய டிப்ளோமா கற்கைநெறிகளைப் போதிப் பதற்கு உயர்தொழில் நுட்ப நிறுவனங் களை நிறுவி அவற்றை இலங்கை உயர் தொழில் நுட்ப கல்வி நிறுவனத்தின் கீழ் தொழிற்பட வழிவகை செய்யப்பட்டது.

இன்று இலங்கை முழுவதும் தெகிவளை, காலி, கண்டி, குருநாகல், பதுளை, யாழ்ப்பாணம், மட்டக்குளி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லபுடுவ, நய்வளை, அம்பாறை, திருகோண மலை ஆகிய இடங்களில் இயங்கும். பதினொரு உயர்தொழில் நுட்ப நிறுவனங்கள், இலங்கை உயர்தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் கீழ் தொழிற்பட்டு வருகின்றன. இவற்றுடன் அநுராதபுரம், இரத்தினபுரி, மருதானை, களுத்துறை மட்டக்களப்பு, மாத்தறை, பெலியத்தை, சம்மாந்துறை ஆகிய எட்டு தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் உயர்தொழில் நுட்ப நிறுவனத்தின் பகுதிகளும் செயற்படுகின்றன.

உயர்தொழில் நுட்பக்கல்வி நிறுவனம் உயர்கல்வி அமைச்சின்கீலும் மூன்றாம் நிலைக் கல்வி, கல்வி அமைச்சின் கீலும் காலத்துக்குக் காலம் முறையே செயற்பட்டு வந்து தற்சமயம் கல்வி அமைச்சின் கீழ் தொழிற்படுகிறது. பிரதிநிதிகள் ஆலோசனைச்சபை மூலமும் ஆளுகைச்சபை மூலமாகவும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு உயர்தொழில் நுட்ப கல்வி நிறுவன பணிப்பாளர் நாயகத்தின் மூலமாக அமுலாக்கப்படுகின்றன.

உயர் தேசிய டிப்ளோமா, தேசிய டிப்ளோமா ஆகிய தொழில்சார் தகைமைகளை வழங்கக்கூடிய 4வருட, 3½ வருட, 3வருட, 2வருட கற்கைநெறிகளை சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலம் காலை நேரத்திலும், மாலை நேரத்திலும், வாரஇறுதி நாட்களிலும் இந்நிறுவனங்கள் நடாத்தி வருகிறன்றன.

பகல் நேரக்கற்கை நெறிகள் 22 வயதைப் பூர்த்தி செய்யாத தொழில் அனுபவம் இல்லாத மாணவர்களுக்கு ஏற்றதாகவும், மாலைநேர, வாரஇறுதி நாட்களில் நடைபெறும். கற்கை நெறிகள் 18 வயதுக்கு மேற்பட்ட தொழிலில் ஈடு

## க. கதிரமலை

விரிவுரையாளர், உயர்தொழில் நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம்.

பட்டவர்களுக்கு ஏற்றதாகவும் நடைபெறுகின்றன.

பகல் நேரக் கற்கை நெறிகளை மேற்கொள்பவர்களில் 20% மாணவர்களுக்கு மகாபொல உதவுதொகை ரூபா 750/= வழங்கப்படுகிறது. இத்தொகை 2005ம் ஆண்டிலிருந்து ரூபா 1000/= ஆக அதிகரிக்கப்படும். பகல்நேர மாணவர் அனைவரும் போக்குவரத்துச் சபையின் பருவகாலச் சீட்டுக்களைப் பெறுவதற்கு உரித்துடையவர்கள். அம்பாறைகாடி உயர்தொழில் நுட்ப நிறுவனத்தில் ஆண்கள், பெண்கள் தங்குவதற்கும், தெகிவளையிலும், நய்வளையிலும் பெண்கள் தங்குவதற்கு விடுதி வசதிகள் வழங்கப்படுகின்றன. தெகிவளை போன்ற உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் மாணவர்களுக்கு உணவு, தேநீர் போன்றவற்றிற்கு அரசமானியமும் வழங்கப்படுகிறது.

மாலைநேர அல்லது வார இறுதி நேர மாணவர்கள் கட்டணம் செலுத்தி கற்கை நெறிகளை மேற்கொள்ள வேண்டும். தற்சமயம் அரை ஆண்டிற்கு ரூபா ஆயிரம் கட்டணமாக அறவிடப்படுகிறது. காலத்திற்குக் காலம் இக்கட்டணம் மாற்றியமைப்படுகிறது. தொழில் புரிவோருக்கு மாத்திரம் என மாலைநேர கற்கைநெறிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. யாழ் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில்

1. உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா காலை **(HNDA. Day)** 4 வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா மாலை **(HNDA Eve)** 4 வருடம்

3. உயர்தேசிய முகாமைத்துவ டிப்ளோமா காலை **(HNDM. Day)** 4 வருடம்

4. உயர்தேசிய வியாபார கல்வி டிப்ளோமா காலை **(HNDBS. Day)** 3 வருடம்

5. உயர் ஆங்கில தேசிய டிப்ளோமா காலை **(HNDE Day)** 2 வருடம்

6. உயர் ஆங்கில தேசிய டிப்ளோமா மாலை **(HNDE Eve)** 2 வருடம்

ஆகிய கற்கை நெறிகள் இடம் பெற்று வருகின்றன. இந்த ஆறு கற்கை நெறிகளிலும் யாழ்ப்பாண உயர்தொழில் நுட்ப நிறுவனத்தில் 980 மாணவர்கள் தற்சமயம் கல்வி கற்று வருகின்றனர். உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா மாலை நேரக் கற்கை நெறிமட்டும் தமிழ்மொழியிலே இடம்பெறுகின்றது. ஏனைய கற்கைநெறிகள் யாவும் ஆங்கில மொழிமூலம் இடம்பெறுகின்றன. ஆனால் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா பகல்நேரக் கற்கைநெறி முதலில் இருவருடம் தமிழ்மொழி மூலமும் 3ம், 4ம் வருடங்கள் ஆங்கில மொழி மூலமும் நடைபெறும். இக்கற்கை நெறிகளை மேற்கொள்வதற்கு க.பொ.த. உயர்தரப் பரீட்சை (பழைய பாடத்திட்டம்) 4 பாடங்களில் அல்லது (புதிய பாடத்திட்டம்) 3 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் ஆகக்குறைந்த தகைமையாகக் கருதப்படும். அத்துடன் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கில மொழியில் சித்தி பகல்நேரக் கற்கை நெறிகளுக்கு அவசியமாகும். அல்லது கற்கை நெறிகளுக்கு ஏற்புடைய தொழில் நுட்பக் கல்லூரியின் சான்றிதழ் பரீட்சை களில் சித்தியடைந்து அத்துடன் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். ஆங்கில தேசிய டிப்ளோமா கற்பதற்கு க.பொ.த. உயர்தர சித்தியுடன் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கில மொழியில் விசேட சித்தி தேவைப்படும் க.பொ.த. சாதாரணதரத்தில் விசேட சித்தி இல்லாத விடத்து ஆங்கிலமொழியில் திறமை சித்தி யுடன் ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தி பெற்றிருந்தாலும் போதுமானது.

**HNDA, HNDM, HNDE** போன்ற கற்கை நெறிகள் க.பொ.த. உயர்தரத்தில் வர்த்தகம், கணிதம், கலை, விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் எப்பிரிவில் கற்று சித்தி அடைந்தவர்களும் கற்பதற்கு வாய்ப்பு வழங்கும் வகையில் நிபந்தனைகளைக் கொண்டது. ஆனால் **HNDBS** கற்பதற்கு க.பொ.த.உயர்தரத்தில் வணிகப் பிரிவில் சித்தி அடைந்திருத்தல் அவசியமாகும்.

தொழில்சார் தகைமையாகக் கருதப்படும் **HNDA, HNDC, HNDM** என்பன பல்கலைக்கழக பட்டத்தகை மைக்கு சமமானதாக 46/90 சுற்று நிருபத் துக்கு இணங்க அரச நிறுவனங்கள் அனைத்திலும் ஏற்றுக் கொள்ளப்படும். **HNDA** சித்தி அடைந்து கணக்காய்வில் போதிய அனுபவம் பெற்றவர்கள் தனி வியாபாரம், பங்குடைமை, தனியார் கம்பனி என்பவற்றை கணக்காய்வுசெய்யும் தொழில்சார் தகைமையுள்ளவர்கள் ஆவர். 4 வருட டிப்ளோமா கற்கை நெறிகளில் சித்தியடைபவர்கள் இடைமட்ட முகா மைத்துவ பதவிகளைப் பெறுவதற்கு தகுதியுள்ளவர்கள் ஆவர். 4 வருட கற்கை நெறிகளில் 2 வருடம் பகல் நேரத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



3ம், 4ம், வருடம் வார இறுதி நாட்களிலும் இடம்பெறும். 3ம், 4ம், வருடத்தில் வார இறுதி நாட்களில் அறிவுக்குரிய கல்வியைப் பெறுவதுடன் வாரநாட்களில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனங்களில் பயிலுனராக இருந்து தொழில்திறன் பெறுவதும் கட்டாயமாகும்.

யாழ் உயர் தொழில்நுட்ப நிறுவனம் 1997 முதல் திருநெல்வேலியில் 5 வருடக் குத்தகைக்குப் பெறப்பட்ட தனியார் காணியில் குத்தகைக் காலம் முடிந்தும் குத்தகை புதுப்பிக்கப்படாது. தற்காலிக கொட்டகையில் தொடர்ந்தும் இயங்கிவருகிறது. கல்விசார் உத்தியோகத்தர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மாணவர்கள் என அனைவருக்கும் பொதுவாக ஆண்களுக்கு ஒரு மலசலகூடமும் பெண்களுக்கு ஒரு மலசல கூடமும் மட்டும் காணப்படுகிறது.

நவீன கற்பித்தல் சாதனங்கள் எதுவுமின்றி மிகக்குறைந்த கணினி மற்றும் உபகரண வசதிகளுடன் இந்நிறுவன மாணவர்கள் தொடர்ந்தும் கல்வி கற்று வருகிறார்கள். கற்றல் செயற்பாட்டை நிறைவேற்றும் கல்விசார் உத்தியோகத்தர்களில் 13 நிரந்தர விரிவுரையாளர்கள் உள்ளனர். ஆங்கில விரிவுரையாளர்கள் ஆறுபேர் தேவையாக இருந்தும் இருவர் மட்டுமே நிரந்தரமாகக் கடமை ஆற்றுகிறார்கள். சட்டம் கற்பிப்பதற்கு நிரந்தர விரிவுரையாளர்கள் எவரும்இல்லை. இக்குறைபாட்டை வருகை விரிவுரையாளர்கள் மூலமாகவே நிவர்த்தி செய்ய முடிகிறது. கற்றல் செயற்பாட்டில் நிரந்தர நியமனம் இல்லாது விட்டாலும் வருகை விரிவுரையாளர்களின் மூலம் அச் செயற்பாட்டை திறம்பட நடத்தமுடியும். ஆனால் கல்விசாரா உத்தியோகத்தர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பை தற்காலிக பயிலுனர்கள் மூலம் நிறைவேற்ற முடியாது. கல்விசாரா உத்தியோகத்தர்களில் பணிப்பாளர், கணக்காளர் இருவர். மட்டுமே நிரந்தரமாக நியமிக்கப்பட்டுளார்கள். பதிவாளர், எழுதுவிளைஞர்கள், நலன்புரி உத்தி யோகத்தர், நூலகர், போன்ற பொறுப்பு மிக்க பதவிகள் நிரந்தர நியமனம் இன்மையால் பல குறைபாடுகளுக்கு உள்ளாவதை அவதானிக்க முடிகிறது. ஊழியர்களில் 4 தொழிலாளர்களும், 2 காவலாளிகளும் மட்டும் நிரந்தரமாகத் தொழிற்படுகிறார்கள். நூலக உதவி யாளர்கள், கணனி அறை உதவியாளர், சாரதி என்பவர்களுக்கு பதவி வெற்றிட மிருந்தும் நிரப்பப்படவில்லை.

நிரந்தர கட்டிடம் அமைக்க நிரந்தர காணி அவசியம் என்ற நிலை காணப்படுகிறது. இக்குறைபாட்டை நீக்க 2004ம் ஆண்டு பின் அரையாண்டில் தமிழர் கூட்டமைப்பு, தமிழீழ அரசியல் துறை, யாழ் அரச அதிபர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் குருநகரில் 2.4 ஏக்கர் காணியை ஆயுள் குத்தகைக்கு பெற்றுள் ளோம். ஆனால் குருநகர் காணியில் நிலவும் சுகாதார சீர்கேட்டை தடுத்து நிறுத்த மேலதிகமாக எமது நிறுவனத் திற்கு 4 நிரந்தரக் காவலாளிகள் தேவை. அல்லது ஏற்ற மாற்று வழிகள் ஏற்படுத் தப்படல் வேண்டும்.


குருநகர் காணியில் நிரந்தர கட்டிடம் உருவாகி போதியவளம் பெற றதும் எமது நிறுவனத்தில் இல்லாத இலங்கை உயர் தொழில் நுட்ப நிறுவனத் திற்குரிய பின்வரும் ஆறு கற்கை நெறிகளில் முதல் மூன்று கற்கைநெறி களையும் கோரிக்கை மூலம் பெற்று அதனூடாக அப்பயிற்சி நெறிகளை பயில் வதற்குரிய வாய்ப்பை தமிழ் மாணவர்கள் கூடுதலாக பெற்றுக் கொள்வார்கள் என்பதில் ஐயம் இல்லை.

1. உயர் தேசிய பொறியியல்
   டிப்ளோமா **HNDE**
   காலை முழுநேரம் 3½ வருடம்
   ஆங்கில மொழி மூலம்
2. உயர் தேசிய தகவல் தொழில்
   நுட்ப டிப்ளோமா
   காலை 2½ வருடம் முழுநேரம்
   ஆங்கில மொழி மூலம்.
3. உயர் தேசிய தொழில் நுட்ப
   டிப்ளோமா விவசாயம்
   காலை 3 வருடம் முழுநேரம்.
   ஆங்கில மொழி மூலம்.
4. தேசிய போசாக்கு சுகாதார விஞ்ஞான
   டிப்ளோமா காலை 2 வருடம் முழுநேரம்
   ஆங்கில மொழி மூலம்.
5. தேசிய செயலாண்மை பயிற்சி
   டிப்ளோமா
   பகுதி நேரம் 2 வருடம்
   ஆங்கில மொழி மூலம்.
6. தேசிய வியாபார நிதி டிப்ளோமா
   **NDBF**
   காலை முழுநேரம் 2 வருடம்
   ஆங்கில மொழி மூலம்.

மேற்கூறிய முதல் மூன்று பயிற்சி நெறிகளும் முறையே மட்டக்குளியிலும், லபுதுவ, அம்பாறை- நய்வளை எனும் இடங்களில் உள்ள உயர்தொழில் நுட்ப நிறுவனங்களில் மட்டும் தற்போது பெற்றுக்கொள்ளமுடியும். அரசினால் வழங் கப்படும் மேற்கூறிய வாய்ப்புக்களை தமிழ் மாணவர்கள் சரியான முறையில் பயன் படுத்தி தொழில்சார் தகைமைகளினால் கிடைக்கக்கூடிய நயப்பாடுகளை பெற்றுக் கொள்ளல் காலத்தின் தேவையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விளக்கு" தாளிகை நடாத்திய
உலக ஆசிரியர் நாள் விமர்சனம் எழுதும்
போட்டியில் முதலிடம் பெற்ற
விமர்சனக் கட்டுரை



# புது மெருகுடன் விளக்கு வெளிவர...

காலத்தின் தேவையை நிறைவு செய்யும் வகையில் 1993இல் விளக்கு சுடரேற்றப்பட்டு 1995 அக்டோபர் வரை ஒளிபரப்பியது. எனினும் 1995 இல் வீசிய பேரினவாத ஆக்கிரமிப்புச் சூறாவளியால் அணைந்துபோய் மீண்டும் 2003 அக்டோபரில் சுடரேற்றப்பட்டுத் தொடர்ந்து ஒளிபரப்ப ஆரம்பித்துள்ளது. எனினும் தூண்டுவோர் இல்லாவிட்டால் ஊடு பற்றுதலைத் தவிர்க்கமுடியாது. அவ்வாறு ஊடுபற்றவிடாது தூண்டி நன்கு வெளிச்சம் பரவச் செய்வது, கல்விப் பணியாற்றும் அனைவரதும் கடமையாகும். தன்னை விளக்கமுறச் செய்து தன்னைச் சூழவுள்ள இடத்தையும் விளக்கமுறச் செய்வது விளக்கு.

வித்தியாபோதினி, கல்வி முதலான கல்விசார் சஞ்சிகைகள் முன்பு வெளி வந்த போதிலும் ஆசிரியத் தொழிலை முதன்மைப்படுத்தும் - ஆசிரியவாண்மை விருத்திக்கு உதவும் வகையில் இன்று விளக்கு வருகின்றது. 2003 அக்டோபரில் இருந்து மீண்டும் வெளிவரத் தொடங்கிய விளக்கு இதுவரை ஆறு வெளியீடுகளாக வந்துள்ளது. இவ் ஆறு வெளியீடுகளிலும் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், தொடர்கள், கருத்துத் திரட்டல், அனுபவத் தொடர், நூல் அறிமுகம், எதிரொளி,





நினைவில் நிலைத்திருப்போர், மெய்யறியக் கேளுங்கள், நேருக்குநேர், எனப்பல விடயங்களைத் தாங்கி வந்துள்ளன.

"மீண்டும் தொடங்கும் மிடுக்கு", "நாளைய சமுதாயம் நலம்பெற", "செந் நீரால் காத்தபயிர் செழிக்க", "தரமான கல்விக்குத் தகைமையுள்ள ஆசிரியர்", "ஆசிரியர்களே வாழ்க்கையின் வழி காட்டிகள்", "கற்போம் கற்பிப்போம்" ஆகிய தலைப்புக்களில் ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வெளியீடுகளும் ஆசிரியர் தலையங்கங் களைத் தாங்கிவந்துள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு செய்தியை வெளிப்படுத்து கின்றன. எனினும் முன்னர் வெளிவந்த விளக்கில் காணப்படும் உடனடித்தேவை, கல்வியிலே தன்னிறைவு, அளவுகோல் போன்றதான வேறுபல ஆசிரியர் தலை யங்கம் தீட்டப்படுவது வரவேற்கத்தக்கது. அத்துடன் முன்னைய விளக்கின் மகுட வாக்கியமான "வாண்மை ஓங்க மாநிலம் சிறக்கும்'' என்ற மகுடவாக்கியத்தை விளக்கு கைவிட்டுவிட்டதா? இதுவும் இனி வரும் வெளியீடுகளில் இடம்பெறவேண்டும். டிசம்பர் 2003 இன் விளக்கின் ஆசிரியர் தலையங்கம் இடம்பெற்ற பகுதியில் விளக்குச் சஞ்சிகையின் சின்னம் இடம் பெறவில்லை. இத்தகைய தவறுகள் திருத் தப்பட வேண்டும். விளக்கில் வெளி வந்துள்ள கட்டுரைகள் ஒவ்வொன்றும் ஆசிரிய வாண்மைக்கான அரிய பல கருத்துக் களைத் தந்துள்ளன. நல்ல நல்ல விடயங்கள் அனைவரையும் சென்றடைய வழிவகுத்துள்ளது.

எனினும் தரமான கட்டுரைகளை எழுதும் ஆற்றல் உள்ள அறிவுள்ள அறிஞர்கள் பலர் எம்மிடத்தில் உள்ளனர். வெறுமனே விளம்பரமாக சஞ்சிகையில் ஆக்கங்கள் எழுதுமாறு கேட்பதை விடுத்து நூலாக்கக்குழு நேரடியாகச் சென்று இத்தகையவர்களிடம் ஆக்கங் களைக் கேட்டுப் பெற்று வெளியிடுவது நல்லது. அத்துடன் ஆர்.கே.மேனன் போன்று இளம் படைப்பாளிகளையும் ஊக்குவிக்க வேண்டும். பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் இலங்கையில் கல்வி அபிவிருத்தியும் வெளிநாட்டு உதவியும் என்ற தலைப்பில் அதன் அனுகூல, பிரதிகூலங்களை ஆராய்ந்து நன்றாக எழுதியுள்ளார். இன்னமும் விரிவாகவும், தொடராகவும் இதனை எழுதியிருக்கலாம். அதேபோன்று உதயா சிவஞானம் எழுதிய "விரைவான விடைகளுக்கு" என்ற கட்டுரையைப் போன்று தொடர்ந்தும் கட்டுரைகளை வெளியிட வேண்டும்.

பா. தனபாலன் அவர்கள் தான் எழுதிய மூன்று கட்டுரைகளிலும் மூன்று வேறு வேறான விடயங்களை விளக்கி யுள்ளார். நல்ல தரமான கட்டுரைகளாக அவை காணப்படுகின்றன. "ஆசிரியர் செயலாற்றுகை" என்ற கட்டுரையில் "எந்த ஒரு ஆசிரியரையும் வற்புறுத்தலாலோ அல்லது அதிகாரத்தினாலோ நீண்ட காலம் வினைத்திறனுடையவராகச் செயலாற்றுகைக்கு உட்படுத்தமுடியாது. முதலில் அவருக்குக் கற்பித்தலில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விருப்பையும், ஈடுபாட்டையும் (Involment) ஏற்படுத்தவேண்டும். அதற்கான சூழ் நிலைகளை, சந்தர்ப்பங்களை, மரியாதை களை வழங்கவேண்டும்.'' எனக்குறிப் பிட்டுள்ளமை இன்றைய கல்வி நிர்வா கத்தின் யதார்த்தத்தினைச் சுட்டிக்காட்டு வதாக அமைந்துள்ளது. செயலாற்றுகை என்ற அஸ்திரத்தைக் கையிற்தூக்கு பவர்களுக்கு இது சமர்ப்பணம்.

''கணிப்பீடும், ஆசிரியரும்'' என்ற கட்டுரையில் கட்டுரை ஆசிரியர் அறிவு றுத்தலை மேம்போக்காக வழங்குவதை விடுத்து முன்மாதிரியான வழிகாட்டல் களை மேற்கொண்டு ஆசிரியர், மாணவர் களை ஊக்குவிக்கும் விதத்தில் எழுதி யிருக்கவேண்டும். இவ்வாறான வழிகாட்ட லோடு கூடிய கட்டுரைகளை விளக்கு எதிர்காலத்தில் வெளியிடுவது சிறந்தது.

அதேபோன்று ''பரிகாரக்கற்பித்தல்'', ''நேர முகாமைத்துவம்'' என்ற விடயங்கள் ஒரு பக்கத்திற்குள் சுருங்கிவிட்டது. இவை விரிவுபடுத்தப்படல் வேண்டும். அத்துடன் பரிகாரக்கற்பித்தல் தனியே ஒரு பாடத் திற்குள் குறுங்காமல் வழிகாட்டல் களோடு வரல்வேண்டும்.

''மொழியைப் பிழையின்றி எழுத முயல்வோம்'', ''மாணவர்களின் ஆக்கத் திறமைகளை வளர்த்தெடுப்பதில் ஆசிரியர்களின் பங்களிப்பு'', ''விசேட கல்வி பற்றிய வழிகாட்டல்'' ஆகிய கட்டுரை களை எழுதியவர்கள் யார் என்று தெரிய வில்லை. இவை தவிர்க்கப்படல் வேண்டும். வல்வை ந. அனந்தராஜ் அவர்கள் எழுதிய ''ஒரு பாடசாலையின் வளர்ச்சியில் பகிரங்கப்படுத்தல்'' என்ற தொடர் டிசம்பர் 2003 வெளியீட்டில் கட்டுரை என்ற பிரிவுக்குள் சேர்க்கப்பட்டுவிட்டது. இது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொடராக 2004 ஜனவரி, பெப்ரவரி வெளியீடுகளில் இடம்பெற டிசம்பர் 2003இல் மட்டும் மாறி இடம்பெற்றுள்ளது. இதுவும் தவிர்க்கப்படல் வேண்டும்.

ஆறு வெளியீடுகளிலும் இடம் பெற்ற சிறுகதைகள் அனைத்தும் உணர்ச் சியைத் தூண்டக்கூடியனவாக உள்ளன. அவற்றிலும் ''மனிதம்'', ''நிறைவு'', "அவனை விட்டுவிடுங்கள்", "ஒருநாள் விடுகை'' போன்றன உள்ளத்தைத் தொட்டுநிற்கும் கதைகளாகும்.

"ஒருமை பன்மை'' என்ற சிறுக தையை எழுதிய செல்லமகேந்திரன் "பாவம் மாஸ்ரர் பிள்ளைகள்'' என்று உதவிக்கல்விப்பணிப்பாளர் கூறியதுடன் மட்டுமல்லாமல் இன்னமும் சிறிது அறிவு றுத்தும் வகையில் கதையை எழுதியிருக் கலாம். எனினும் அவரது நான்கு சிறுகதைகளும் அடுத்தடுத்து வந்துள்ளன அவை பாராட்டுக்குரியன.

"ஒரு நாள் விடுகை", "திருப்பங்கள்" ஆகிய சிறுகதைகள் எங்கே, எப்போது எதற்கு எழுதப்பட்டவை போன்ற விபரங் களை விளக்கு வெளியிட மறந்துவிட்டது. ஏனெனில் இவையும் ஆசிரியர் தின எழுத்தாக்கப் போட்டியில் முல்லை வல யத்தில் வெற்றிபெற்ற கதைகளே. அதோடு முல்லை வலயத்தின் முன்மாதிரியை ஏனைய வலயங்களும் பின்பற்ற விளக்கு ஊக்குவிக்க வேண்டும்.

மீண்டும் வெளிவரத் தொடங்கிய ஆறு வெளியீடுகளிலும் கவிதைகள் உள்ளத்தை ஈர்க்கும் வகையிலும் ஆசிரி யத் தொழிலின்மேன்மை பற்றி போட்டி சுவைபட எழுதப்பட்டுள்ளன. எனினும் குறும்பா என் றொருவடிவம் கவிதையில் இன்று காணப்படுகிறது. "போதனை" என்ற தலைப்பிலான குறும்பாபோன்று இன் னமும் பல குறும்பாக்களை வெளி யிடுவதுடன் மரபுக்கவிதையை விளக்கு மறந்துவிட்டது போலுள்ளது.

தொடர்களாக அ. பஞ்சலிங்கம், செல்லத்துரை சேதுராஜா, வல்வை ந. அனந்தராஜ் ஆகியோரின் தொடர்களும் "வாசித்தோம். வாசிப்போம்" என்ற வழி காட்டுகைத் தொடரும் சிறப்பாக உள்ளன. இவை போன்ற தொடர்கள் தொடர வேண்டும் அ. பஞ்சலிங்கம் அவர்களின் "அங்கும் இங்கும்" என்ற தொடரில் நல்ல நல்ல விடயங்களைக் குறிப்பிட்டு எழுதி வருகின்றார். அந்தவகையில் "கல்வியும் இன்றைய சமூகமும்" என்பதில் சிவ சரவணபவன் குறிப்பிட்டவை வளப்பங்கீடு தனியார் கல்வி நிறுவனங்கள், கணிப் பீடுகள் பற்றியது போன்றவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்கத்தக்கவை. எனினும் கல்வியின் எதிர்காலம் பற்றிய அவரது தொடர் குறுகி விட்டது. அ. பஞ்சலிங்கமோ மா. சின்னத் தம்பியோ அதனை ஒரு தனித்தொட ராகவோ அல்லது கட்டுரையாகவோ விரிவுபடுத்தி எழுதியிருக்கலாம். பய னுள்ள விடயம் இன்றைய கல்வியின் போக்கு பற்றியும் தொடர்கள் வருவதுடன் கல்வியும் தொழில் வாய்ப்பும் போன்ற வழிகாட்டல் தொடர்களும் அவசியம் வேண்டும். "வாசித்தோம் வாசிப்போம்" என்ற தொடர் பல விடயங்களைத் தாங்கி வருவது சிறப்பானதாகும். தொடர்ந்து நல்ல நல்ல விடயங்களுடன் வரவேண்டும். தாபன விதிக்கோவை பற்றிய தொடர்கள் தொடர்ச்சியாக வருவதுடன் அதிலும் முக்கியமாக விடுகை (லீவு) ஓய்வூதியம், முதலானவற்றைக் கல்விப் பணிபுரியும் அனைவரும் அறியும் விதத்தில் விளக்க மான தொடராக வெளியிட வேண்டும். கணினி பற்றிய தொடர் புதிதாக வருவதும் முக்கியமாகும்.

கருத்துத் திரட்டல் என்ற விடயம் 2003 அக்டோபரில் மட்டுமே வந்துள்ளது. அதேபோல் "சி.பி.சிவை" எழுதும் அனுப வத்தொட்டும் இரு வெளியீடுகளில் (டிச. 2003 ஜன. 2004) மட்டும்தான் உள்ளது. "நூல் அறிமுகம்" மூன்று வெளியீடு களிலும் எதிரொளி இரு வெளியீடுகளிலும் "நினைவில் நிலைத்திருப்போர்" ஒரு வெளியீட்டிலும் "மெய்யறியக்கேளுங்கள்" இரு வெளியீகளிலும் "நேருக்கு நேர்" ஒரு வெளியீட்டிலும் என இடம்பெற்றுள்ளன. உண்மையில் தரமான விடயங்களாக உள்ள இவை இடையில் ஒளி மங்கிய தேனோ தெரியாது. தொடர்ந்து ஒவ்வொரு விளக்குச் சுடரிலும் இவை பிரகாசிக்க வேண்டும்.

அட்டைப் படங்கள் நல்ல முறையில் வெளிவந்தாலும் தொடர்ந்தும் சிறுவர் சிறுமியர்களது படங்களை மட்டும் அச்சிட்டு அலங்கரிப்பதுடன் நின்றுவிடாது முன்னைய விளக்குச் சஞ்சிகைகளில் வெளி வந்தது போன்ற அட்டைப் படங் களையும் பிரசுரிக்க வேண்டும் அத்துடன் ஆக்கக் கர்த்தாக்களின் படங்களும் தொடர்ந்து வெளிவரவேண்டும். "மெய்யறியக் கேளுங்கள்" பகுதிக்கு அனுப்புவதற்காகப் பிரசுரிக்கப்படும் முகவரியானது கட்டுரை யையோ, தொடரையோ, ஆக்கத்தையோ மறுபுறத்தில் பாதிக்காத வகையில் பிரசுரித்தால் நல்லது. இடம் நிரப்பிகள் நல்ல சிறந்த முறையில் அமைந்துள்ளன. இன்னமும் நல்ல கருத்துத்துணுக்குகள் வரவேண்டும்.




**கா. சசிதரன்**
யா/அருணோதயாக் கல்லூரி,
அளவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் வரும் வெளியீடு களில் பின்வரும் விடயங்களைத் தொடர்ந்து வெளியிடுவது சிறந்ததெனக் கருதிகிறேன். "முதல்" என்ற அனுபவத் தொடர், "நூல் அறிமுகம்", "நேருக்குநேர்" என்பவற்றுடன் சிறந்த ஆசிரியர், அதிபர், மாணவர் சிறப்புக்கள் பெருமைகள் மாணவரது ஆக்கங்கள், அனுபவப் பகிர் வுகள் என்பனவும் ஓய்வு பெற்றவர்களிட மிருந்து பெற்று வெளியிடல் வேண்டும்.




மேலே குறிப்பிட்டவற்றைவிட எழுத்துப் பிழைகள். கணினி வடிவமைப் புப்பிழைகள் அதிகம் காணப்படுகின்றன. உதாரணமாக அக்டோபர் 2003 இதழில் "எழுதிப் பிழைக்காதிருக்க" என்ற கட்டு ரையில் வாய்க்கியம் "போதையால் அழியும் செல்வம்" என்பதில் பெருட்கள்




"எங்கள் வாத்தியார்" என்ற கவிதையில் தாழ்கள்

என்பன போன்ற எழுத்துப்பிழை களும், கணனி வடிவமைப்புத் தவறுக ளான சொற்கள்பிரிதல் (கோட் பாடு) எழுத்துக்களுக்கிடையில் இடைவெளி வருதல் (ஆ சி ரி யர் வளம்) போன்றனவும் இடம் பெறாதிருத்தல் வேண்டும்.

இவற்றையெல்லாம் கருத்தில் எடுத்து எதிர்காலத்தில் மேலும் புதுமெரு குடன் விளக்கு வெளிவர ஆவன செய்தல் வேண்டும்.

"குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்"

✦✦✦✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயன்முறைக் கல்வியின் அவசியம்

நல்லதொரு பாடசாலையில் ஆண்டு - 1 அனுமதி பெறவேண்டும் என்பதற்காக முன்பள்ளிக்கு மூன்று வயதிலேயே பிள்ளைகள் அனுப்பப்படுகின்றனர். ஆண்டு-6 இல் தலைசிறந்த பாடசாலையில் அனுமதி பெறுவதற்காக புலமைப்பரிசில் பரீட்சைக்கு என மாணவர் தயார் செய்யப் படுகின்றனர். இவ்வண்ணமே பல்கலைக் கழகத்தில் நுழைவதற்காக பாடசாலை செல்வதுடன். பல தனியார்கல்வி நிறுவனத்தின் படிகளில் ஏறி இறங்குகின்றனர். பாடசாலையில் சேர்வதற்கு முன்பிருந்தே பெற்றோர்களாலும், பாடசாலைகளில் ஆசிரியர்களாலும் பரீட்சையை மையமாகக்கொண்டு பெரும் பழு சுமத்தப்பட்டு மாணவர்கள் திக்குமுக்காடுகின்றார்கள். தாமாகவே தேடிக்கற்கும் ஆற்றல் அவர்களிடம் விருத்தி செய்யப்படுவ தில்லை. அவர்கள் இயந்திரமாகவே செயற்படுவதற்குப் பழக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கான தீர்மானங்களை மற்றவர்கள் எடுக்கிறார்கள்.

தற்பொழுது நடைமுறையில் உள்ள பரீட்சைமுறைகளில் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகிய மூன்று கூறுகளில் அறிவு அடைவுமட்டத்தை அளவீடு செய்வனவாகவும், திறன், மனப்பாங்கு ஆகிய வற்றை அளவிடும் அம்சங்கள் குறைவாகவும் காணப்படுகின்றன. செயன் முறைக்கல்வியில் பங்குபற்றாமலே எந்தவொரு பரீட்சையிலும் உச்சப்பெறு பேறுகளைப் பெறக்கூடியதாக பரீட்சைகள் அமைவதால் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் செயன்முறைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அனேகமான பாடசாலைகளில் தொழிற் கூடங்களும், ஆய்வுகூடங்களும் மூடப் பட்டே கிடக்கின்றன. உபகரணங்கள் அலுமாரிகளில் உறங்கிக்கிடக்கின்றன. கல்விக்கான பெரும் வளம் பயன்படுத்தப் படாமல் முடங்கிக்கிடக்கின்றன. மாணவர்களின் ஆற்றல்கள் மழுங்கடிக்கப்படுகின்றன.

பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வி மாணவர்களுக்கு பல ஆண்டுகளாக செயல்முறைமூலம் கற்பிக்கப்பட வில்லை. தொழில்நுட்பப் பாடங்களுக்குப் பதிலாக வர்த்தகம் கற்பதிலேயே மாணவர்கள் நாட்டம் காட்டுகின்றனர். எழுத்துப் பரீட்சைமூலம் உயர்கல்வியைப் பெறும்வாய்ப்பு உள்ளதால் ஆரம்பக் கல்வியில் மாணவர்கள் ஆக்கத்திறன் வளர்க்கப்படுவது அருகியே காணப் படுகின்றது. பரீட்சைக்குப் புள்ளி வழங்கு

**செல்வி திலகவதி பெரியதம்பி**

வடக்கு கிழக்கு மாகாண

முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கான ஆக்கங்கள் வீட்டில் உள்ளவர்களாலேயே தயார் செய்யப்பட்டு பாடசாலைகளுக்கு எடுத்து வரப்படுகின்றன. இவ்வாறான சூழலில் எவ்வாறு மாணவரிடையே திறன்களை விருத்தி செய்ய முடியும்? பாடசாலையில் மரவேலை கற்றலால் வாழ்க்கையிலும் அதனையே தொழிலாகக் கொள்ளவேண்டும் என்ற நிலை இல்லாதிருந்தும் அதனைக் கற்க விரும்புகிறார்கள் இல்லை. மரவேலையைத் தொழில்நுட்பப் பாடமாகக் கற்கும் போது பெறப்படும் திறன்கள், வேலை ஒழுங்முறைகள், தொழிற்கூடத்தின் துப்பரவு ஒழுங்கமைப்பு என்பன அவர்கள் பெரியவர்களாகி எந்தத் தொழிலை மேற்கொண்டாலும் அவர்கள் சிறந்து விளங்குவதற்கு அடிகோலும் என்பதை மறந்து செயற்படுகின்றார்கள். விவசாயத்தைத் தொழில்நுட்பப் பாடமாகக் கற்றால் விவசாயியாகவே இருக்கவேண்டும். என்ற நிலை இல்லை. அவன் பெறும் அனுபவங்கள் அவன் எதிர்காலத்தில் பொறுப்பான பதவி வகிக்கும்போது தீர்மானங்களை எடுப்பதற்கு உதவும் எனச்சிந்திப்பவர்கள் ஒரு சிலரே. ஆகவே தொழிற்கல்வி பற்றி எல்லோரிடமும் நல்லமனப்பாங்கு ஏற்படுத்தப்பட வேண்டும்.

பாடசாலையில் அனுமதி பெறும் மாணவர்களில் இரண்டு சதவீதத்தினரே பல்கலைக்கழக வாயில்களை எட்டிப் பிடிக்கின்றனர். ஆரம்பக்கல்வியைப் பூர்த்தி செய்யாது இடைவிலகுவோர், இடைநிலைக் கல்வியைப்பூர்த்தி செய்யாது இடைவிலகுவோர், க.பொ.த. சாதரணதரப் பரீட்சையின் பின் பள்ளி வாழ்க்கையை முடித்துக்கொள்வோர் என்பவர்கள் மிகுதி 98% இல் அடங்குவார்கள். இந்த 98% மாணவர்களும் வேலை உலகுக்கு அடி எடுத்து வைக்கும்போது தான் மலைக்கின்றார்கள். அவர்களிடம் திறமைகள் பல இருக்கும், ஆனால் அவர்களின் வேலைக்குப் பொருத்தமான திறமைகள் இவர்களிடம் இருக்கமாட்டாது. ஆகவே பாடசாலை மட்டத்தில் அதாவது மாணவர்கள் பாடசாலையில் தங்கிவாழும் காலத்தில் அவர்களிடம் பொருத்தமான திறன்களையும், நல்மனப் பாங்குகளையும் விருத்தி செய்வதில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். இவற்றுக்கான வாய்ப்புக்கள் கல்வித் திட்டத்தில், பாடவிதானத்தில் இருந்தும் அவற்றினைப் பயன்படுத்த மாணவர்கள் தவறிவிடுகின்றனர். அவற்றினை பயன் படுத்திக்கொள்வதற்கு வேண்டிய மனப்பாங்கினை விருத்தி செய்வதற்கு பெற்றோர்களும், ஆசிரியர்களும், சமூகமும் முன்வருதல் வேண்டும்.

01. ஆரம்பக் கல்வி நிலையிலே ஆக்கததிறன்களை விருத்தி செய்தல் வேண்டும்.

02. இடைநிலைக் கல்வி நிலையில் செய்முறை மூலம் விஞ்ஞானக் கல்வி, வாழ்க்கைத்திறன் கல்வி, தொழில்நுட்பக் கல்வி வழங்கப் படுதல்வேண்டும்.

03. அழகியற் கல்வியில் நாட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும். சங்கீதம் நடன பாடங்களுடன் சித்திர பாடம் கற்பதற்கான நாட்டத்தினை ஏற்படுத்தல் வேண்டும்.

04. இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. ஆய்வுகூட, தொழிற்கூட வசதிகளுடன் உபகரண வசதிகளும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் வேண்டும்.

06. தொடர் மதிப்பீட்டு முறைமூலம் அறிவுத்திறன், மனப்பாங்கு விருத்திக்கு வழிவகுத்தல் வேண்டும்.

07. கல்வி வழிகாட்டலுடன் தொழில் வழிகாட்டலும் பாடசாலைகளில் இடம்பெற வேண்டும்.

08. தொழில் வாய்ப்புக்கள் பற்றியும், தொழில் வழங்குதலின் எதிர்பார்ப்புக்கள் பற்றியும் பாடசாலையில் கற்கும் காலத்திலேயே அறிவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

09. பாடசாலையை விட்டு விலகிய பின்னும் தொழில் பயிற்சிகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளும் தொழிற் கல்வி மூலம் உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளும் விஸ்தரிக்கப்படுதல் வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக எத்தொழிலைச் செய்பவர்களும் தம்மைத்தாமே மதிப்பீடுசெய்து, வினைத்திறனைக் கூட்டிக் கொள்வதற்கு ஏற்றவாறு மேலும் தம் திறன்களை விருத்தி செய்து உற்பத்தியைப் பெருக்கவும், நல்ல சேவையை வழங்கவும் முயற்சிக்கும் மனப்பாங்கு அவசியமாகும்.

✦


## "விளக்கு" கற்பித்தலுக்கு உரமூட்டுகிறது

**உலகளாவியரீதியில் நவீன ஆசிரியவாண்மைக் கல்விச் செல்நெறிகள் பரந்த அளவில் விரிவடைந்து வருகின்றன. அதற்கிணங்க எமது ஆசிரியர்களின் வாண்மையை விருத்தியடையச்செய்ய "விளக்கு" சஞ்சிகை பல வழிகளைக் காட்டிவருகின்றது. சிறந்த ஆக்கங்களைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது. இதுவரை காலமும் வெளிவந்த விளக்குச் சஞ்சிகைகள் அனைத்தும் ஆசிரியர்களின் ஆற்றலை அவர்களுக்கு உணர்த்தி, அவர்களின் வாண்மையை வளர்த்து, அவர்கள் வரித்துக்கொண்ட பணியை உறுதியுடனும், உற்சாகத்துடனும் தொடர "விளக்கு" உரமூட்டுகின்றது.**

**மாணவர்களின் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு சிறந்த வகுப்பறைக் கவின்நிலை இருக்கவேண்டும். இதற்கு ஆசிரியர்களே அச்சாணிகளாவர். ஆசிரியர்களுக்குரிய எதிர்பார்ப்புக்கள் அவர் வாழும் சமூக செல்வாக்கிற்கு உட்படுகின்றன. சமூக எதிர்பார்ப்பின் அழுத்தங்கள் ஆசிரியரது எதிர்பார்ப்புக்களைத் தீர்மானிப்பதால், ஆசிரியர் என்ற சமூக மனிதருடைய சிந்தனைகள், செயலாற்றுகைகள் உளநினைவுகளுக்கு சமூகம் ஊக்கம் கொடுக்கும்போது அவர்களுக்குத் தொழில்சார் உளநிறைவு ஏற்படுகின்றது. இதற்கான உறுதியைத் தொடர்ந்து விளக்கு எடுத்தியம்பி வழிகாட்டவேண்டும். தொடர்ந்து சிறந்த மெருகுடன் விளக்கு சஞ்சிகை மலர இறையருள் துணை நிற்பதாக.**

**கலாநிதி தி. கமலநாதன்**
பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உபாத்தியாயருக்கு

வாதம்பி! ஆசிரிய வட்டத்துள் வந்துவிட்டாய்
வாழ்த்துக்கள் ஆம் தம்பி!
வேறு தொழில் இல்லையென்று வந்தாயா?
அன்றி,
சேவை செய்ய வேண்டுமென்ற சீரிய நோக்கமா?
ஆசிரியர் குறையுணர்ந்த அமைச்சரின்
பெரிய ''சம்பள'' த்திட்டத்திற் காதலா?
என் பழுத்த வார்த்தைக்குச் செவிதருக.

வெளியிலே எமைப்பற்றி கதையாய் கதைப்பார்கள்
பருவ வீடுமுறையும் 'கசுவல் மெடிக்கலொடு'
அரச வீடுமுறையும் வருடத்தில் பாதிநாள்
லீவில் இருக்க உபாத்திக்கு வாய்ப்பென்பர்
தோட்ட முயற்சிக்குத் தோதான தொழில் என்பர்
கேட்டிருப்பீர்!

இதை நம்பி வந்தீரேல் ஏமாந்தீர்' போ தம்பி
பிரகடனம் செய்யாத அவசிய சேவையிது
சனியும் ஞாயிறும் 'கருத்தரங்கு' இருக்கும்
பருவ விடுமுறையில் இணைப்பாடச் செயலிருக்கும்
கலைப் போட்டி தமிழ்ப் போட்டி உடற்போட்டி என்று
வருடமுழு நாளும் பெரும் பாரச் செயற்பாடு
வெருளாதீர் தம்பி! இன்னும் விரிக்கின்றேன்.

''ஓஎல்''லும் ''கம்பஸ்'' சும் ''ரீச்சேஸ் ற்றெயினிங்'' உம்
எல்லாமே பெற்றிட்டேன் இனியென்ன படிப்பென்று
எண்ணாதே! இனித்தான் படிப்புனக்கு.
''பென்சன் புகுவரைக்கும் கற்கை நன்றே''
ஔவையார் இன்றிருந்தால் இப்படித்தான் பாடுவார்.
கலைச்சொல் மாறும் கணிப்பீட்டு முறை மாறும்
அமைச்சர் மாற அடியோடு திட்டம் மாறும்.
புதுப்புதுச் செய்தியுடன் சுற்றறிக்கை சுற்றி வரும்
எதற்கும் அசையாது. என்றும் சளைக்காது.
படிப்பதற்கும் கொடுப்பதற்கும் தயார் என்றால் வா தம்பி!
வந்து விட்ட சில நாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சு நடாத்திய மூத்த கலைஞர்கள் கௌரவிப்பின்போது ''கலைஞான கேசரி'' என்னும் விருதைப் பெற்றவரான புத்தூர் வே. இளையகுட்டி அவர்கள் ஓர் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆவார். அவர் எழுதிய பல கவிதைகள் பரிசுகளையும், சான்றிதழ்களையும் அவருக்குப் பெற்றுக் கொடுத்தன.

புலிகளின் குரல் (நிதர்சனம்) ஆண்டு விழாக் கவிதைப் போட்டியிலும், ஈழநாதம் ஆண்டு விழாக் கவிதைப் போட்டியிலும், உதயன், ரீ.ரீ.என். நிறுவனம் இணைந்து நடாத்திய மாவீரர் தினக் கவிதைப் போட்டியிலும், பேராதனை பல்கலைக்கழக தமிழ்மன்ற பவளவிழாக் கவிதைப் போட்டியிலும் இவரது கவிதைகள் பரிசில்களை பெற்றுள்ளன.

சிறந்த ஆசிரியரான இவரது ஆக்கங்கள் பலராலும் பாராட்டப்படுபவை. அவர் வெளியிட்ட ''ஆண் பாவம்'' என்ற கவிதைத் தொகுதியில் இருந்து புதிய உபாத்தியாயருக்கு என்னும் கவிதையை ''விளக்கு'' தாளிகை நன்றியுடன் மீள் பிரசுரம் செய்கிறது.



''ஓவற்ரையிம் கிளெயிம்'' இல்லா வேலை யென்று
ஓடிவிட எண்ணாதே!
சேவைக்காய் உன்னைத் தேய்த்து! நாளைய சந்ததிக்காய்
யாகக்குழியில் ஆகுதியாய் வா தம்பி!

நாளையொரு இளைஞன் – உயர்
நாற்காலி விட்டெழுந்து
''சேர்'' என்னைத் தெரிகிறதா – உங்கள்
சேவையினால் உயர்ந்த
மாணவரில் நானொருவன்'' என்றொரு வார்த்தை வந்தால்
தேகம் புல்லரிக்கும்; தேய்ந்த உடல் பூரிக்கும்
''ஓவற்ரையிம் ''புறமோஷன் பின் தோட்டம் எல்லாம்
உபாத்திக்கு இது போன்ற வார்த்தைகளே! ✳

புத்தூர், **வே. இளையகுட்டி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் நாள் அக்டோபர் ~ 6

"ஆசிரியர்களை நான் மிகவும் அன்பு செய்கிறேன்" நான் என் தாய் மடியைவிட்டு இறங்கிக் காலடி எடுத்து வைக்கின்றபோது எனக்கு நேசக்கரம் நீட்டும் ஓர் ஜீவன் ஆசிரியரே! தாய்க்குத் தாயாக, தந்தைக்கு தந்தையாக சகோதர உணர்வுகளோடெல்லாம் எனக்கு வழி காட்டும் ஜீவன்கள் ஆசிரியர்களே! ஒவ்வொருவருடமும் வந்துபோகின்ற ஒக்டோபர்- 6 அவர்களை மேன்மைப்படுத்துகின்ற நாள். அவர்களுடைய சேவைகளைப் பாராட்டி கௌரவிக்கின்ற நாள். முதல் நாளே எங்கள் ஆசான்களுக்கு மாலை கட்டவேண்டும், பாட்டுக்கள் பாட வேண்டும், அன்பளிப்புக்கள் வளங்க வேண்டும், என்றெல்லாம் மாணவர்களுடைய சிந்தனைகளும் ஏக்கங்களுமாக இருக்க நானும் அந்த மாணவர் குழுக்களில் ஒருவனாகி வகுப்பு ஆசிரியரிடம் மாலைகட்டுவது இந்த வகுப்பில் யார் என்று கேளுங்கள் ரீச்சர் என்றபோது நான்தான் முந்தியடித்துக் கொண்டு முதல் ஆளாக மாலை கட்டுகிறேன் என்றேன். பாடசாலை விட்டு வீடு சென்று ஒவ்வொரு வீடுவீடாக மாலை கோறப்பதற்கு பூப்பறிப்பதில் மும்முரமாக ஈடுபட்டேன். நேரம் ஏழு மணியைத் தாண்டியும் பூப்பறிக்கும் வேலை முடிந்தபாடில்லை நிறையப்பூக்கள் ஆயவேண்டும் என்ற துடிப்பே என் உள்ளத்தில் இருந்தது. ஒரு வீட்டில் பூப்பறிக்கச் சென்றபோது அவ்வீட்டு நாய்க்கு இலக்காகிவிட்டேன் அக்கணமே அலறினேன் என்னைக் காப்பாற்றுங்கள் என்று கத்தினேன் என்னை அந்த வீட்டார் நாயிலிருந்து காப்பாற்றினர். பத்திரமாக எமது வீட்டிற்கு அனுப்பிவிட்டனர். இரவு வேளை ஆகிவிட்டது. வைத்தியசாலைக்கு என்னை அழைத்துச் சென்றபொழுது அங்கு மருந்தில்லை நாளை காலையில் மன்னார் வைத்தியசாலை சென்று ஊசி போடும்படி எங்களை அனுப்பி விட்டார்கள்.

காலையில் பாடசாலைக்குச் சென்றபோது அங்கு மாணவ மாணவிகள் ஆசிரியர்களை வரவேற்கப் பரபரப்புடன் செயற்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஆசிரியர்களை வரவேற்கின்ற நிகழ்வில் நானே பறித்த பூவிலிருந்து ஆக்கிய மாலையை ஒரு ஆசிரியருக்கு அணிவிக்க ஆசைப் பட்டேன். ஆனால் எனது கால் வருத்தம் காரணமானக வைத்தியசாலை செல்ல வேண்டியிருந்தது. பஸ்தரிப்பு நிலையத்தில் என் தந்தையுடன் நின்று கொண்டிருந்தேன். வாத்தியங்கள் இசைக்க ஆரம்பித்தது. நானும் அந்த பஸ் தரிப்பில் நின்ற இடத்திலிருந்து 50 யார் தூர இடைவெளியில் நடந்து கொண்டிருந்த ஆசிரியர் நாள் நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். மாலைகள் அணிவிக்கப்பட்டன. கைகள் குலுக்கப்பட்டன. மேள தாள இசையுடன் வரவேற்பு ஆரம்பமாகியது. நான் அந்த பஸ் நிலையத்தில் கவலையும், அச்சமும் கலந்த மனநிலையில் நின்று கொண்டிருந்தேன். ஊசிகள் நிறையப் போடுவார்கள். என்றும் பயந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வேளையிற்றான் ஒரு பருத்த உருவமுடைய மனிதர் வந்தார். எங்களிடம் என்ன விசேசம் இங்கு என்று கேட்டார். "ஆசிரியர் தினம்" என்றேன். "ஆசிரியர்களா 2000 ரூபா சாறி உடுத்தி தங்களின் பெருமைகளைத் தான் காட்டு கிறார்கள். பிள்ளைகளின் படிப்பில் என்ன அக்கறை எடுக்கிறார்கள் புலமைப் பரிசில் தரம் 5 இல் எத்தனை பிள்ளைகள் பாஸ் பண்ணி இருக்கிறார்கள்" என்றெல்லாம் அந்த மனிதனின் பேச்சு நீண்டு கொண்டே போக நான் குறுக்கிட்டு "ஏன் பெரியவரே ஒரு பக்கச்சார்பாக பேசுகிறீர்கள். பிள்ளைகள் படிக்காதது ஆசிரியர்களுடைய தவறு மட்டுமா? பெற்றோர், பிள்ளைகள், சூழல் எல்லாம் பிள்ளைகளின் கல்விக்குப் பாதக மாக அமையவில்லையா? ஆசிரியரை மட்டும் இப்படிக் குறை கூறுகின்றீர்களே" என்றேன். அதற்கு அவர் "அது சரிதான் காசு காசென்று உயிரை வாங்குகிறார் களே. நாங்கள் உழைக்கிறதில் பெரும் பகுதி பள்ளிக்குச் செலவாகுதே" என்றார்.

பிள்ளைகளுக்கு இடுகிற முதல்கள் வங்கியில் வைப்பிலிடப்பட்ட பணம் போல நன்மை பயக்கும் என்று தெரியாமல் இவ்வாறு பேசுகிறாரே என்று நானே சிந்தித்துக்கொண்டிருக்க பஸ் தரிப் பில் பஸ்சும் வந்து நிற்றது. பஸ்சில் ஏறிப் போய்க்கொண்டிருந்தேன்.

இவ்வாறான விமர்சனங்கள் நிறையவே இருக்க அவற்றின் மத்தியில் ஆசிரியர்தினம் இன்று நடைபெறுகின்றது ஆனால் ஆசிரியர்களுடைய ஆதங்கங் களை கேட்கும் போது எமக்கு கவலை யாக உள்ளது.

"இன்றைய நாளை நான் வெறுக் கிறேன் என்கிறார் ஒரு ஆசிரியர்" "பிள்ளைகள் தருகின்ற சிறிய அன்ப ளிப்பை விட சமூகம் தருகின்ற விமர்சன அன்பளிப்பே போதுமையா என்கிறார் ஓர் ஆசிரியர். முன்னொன்று பின்னொன்றாகப் புறம்பேசும் மானிட வாழ்வில் ஏன் இந்த பெருமையும், புகழ்ச்சியும் எண்கின்றார். வேறொரு ஆசிரியர். இவ்வாறான விமர்சனங்களின் மத்தியில் ஔவையார் விருந்துண்ண சென்ற போது விருப்பின்றி தந்த விருந்துபசாரம் போல இந்நிகழ்ச்சி எனக்குத்தோன்றியது.

"காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே மாணொக்க வாய்திறக்க மாட் டாதே. வீணுக்கென் என்பெல்லாம் பற்றி எரிகின்றதையையோ அன்பில்லாள் இட்ட அமுது." சமூகம் தருகின்ற விருந்து இத் தகையது தானா?

என் உடன் மாணவர்களே பள்ளியில் அன்பை விதையுங்கள். ஆசிரி யர்களே பிள்ளைகளுக்கு அறிவுப்பால் ஊட்டுகிறார்கள். அது மட்டுமல்ல பண் போடு அன்பும், அறிவும் ஊட்டுபவர் அவரே. எனவே ஆசிரியர்களைப் போற்றுங்கள்.

*

**என். கனிலான்**
மன்/ முருங்கன் மகா வித்தியாலயம்

இது ஒரு மாணவனின் ஆக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கு சஞ்சிகையின் எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

2004ம் ஆண்டு உலகஆசிரியர் நாளையொட்டி தமிழ்ழக்கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வெளியீடாகிய "விளக்கு" நடாத்திய தமிழ்மொழி எழுத்தாக்கத்திறன் போட்டிகளில் பரிசில் பெறுவோர் விபரம்:

**கட்டுரை எழுதுதல்:** முதலாம் இடம் – **திரு. மு. மோகனேந்திரன்**
ஈச்சந்தீவு, விபுலாநந்த வித்தியாலயம்.
திருகோணமலை.

பரிசுத் தொகை ரூபா **10000/00**

இரண்டாம் இடம் – **திரு. கே. ஞானரெத்தினம்**
சிவானந்த வித்தியாலயம்,
கல்லடி உப்போடை,
மட்டக்களப்பு.

பரிசுத் தொகை ரூபா **7500/00**

மூன்றாம் இடம் – **திருமதி. கோகுலவாணி தேவராஜா**
மல்லாவி மத்திய கல்லூரி,
மல்லாவி.

பரிசுத் தொகை ரூபா **5000/00**

**சிறுகதை ஆக்கம்:** முதலாம் இடம் – **திரு. யோசெப் ஆரோக்கியம் குரூஸ்**
மடு வலயக் கல்விப் பணிமனை,
ஆண்டாங்குளம்.

பரிசுத் தொகை ரூபா **10000/00**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் இடம் – திரு. மு. இராசநாயகம்
கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
பரிசுத் தொகை ரூபா **7500/00**

மூன்றாம் இடம் – செல்வி இரத்தினேஸ்வரி சிவசிதம்பரம்
முகாமைத்துவ உதவியாளர்,
கண்டாவளைக் கல்விக் கோட்டம்,
கிளிநொச்சி.
பரிசுத் தொகை ரூபா **5000/00**

**கவிதை ஆக்கம்:** முதலாம் இடம் – திருமதி. எம். வீ. எ.ஃப். ஸீல்.ஃபிகா
ஹெ/ அல் கஸ்ஸாலி மத்திய கல்லூரி,
அட்டுலுகம,
பண்டாரகம.
பரிசுத் தொகை ரூபா **5000/00**

இரண்டாம் இடம் – அருட்சகோதரி ஞா. இமல்டா சுபாஜினி
தேசிய கல்வியியற் கல்லூரி,
வவுனியா.
பரிசுத் தொகை ரூபா **3000/00**

மூன்றாம் இடம் – செல்வி. இரத்தினேஸ்வரி சிவசிதம்பரம்
முகாமைத்துவ உதவியாளர்,
கண்டாவளைக் கல்விக்கோட்டம்,
கிளிநொச்சி.
பரிசுத் தொகை ரூபா **2000/00**

**விமர்சனம் எழுதுதல்:** முதலாம் இடம் – திரு. கா. சசிதரன்
யா/அருணோதயாக் கல்லூரி,
அளவெட்டி.
பரிசுத் தொகை ரூபா **5000/00**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி போட்டி முடிவுகள் யாவும் ஆக்கப்பரிசீலனைக் குழுவால் தெரிவுசெய்யப்பட்டு இறுதிமுடிவு எடுக்கப்பட்டவையாகும்.

போட்டிகளில் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம். எதிர்வரும் காலங்களில் உங்கள் அனைவரினதும் பூரணஆதரவையும், ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றோம்.

வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் யாவும் 2005 ஜனவரி மாதத்தில் வழங்கிக் கௌரவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

பலவேறு சிரமங்களின் மத்தியில் அனைத்து எழுத்தாங்கங்களையும் பரிசீலித்துப் பரிசுக்குத் தேர்வான போட்டியாளர்களின் பெயர்களைக் குறித்த காலத்தில் விளக்கு தாளிகையின் ஆசிரிய குழுவினரிடம் கையளித்த எழுத் தாக்கப் பரிசீலனைக் குழுவினரின் பயன்கருதாப்பணிக்கு விளக்குத் தாளிகை என்றும் மதிப்பளிக்கிறது.

விளக்குத் தாளிகையின் வாசகர்களுக்கு அவர்களின் பெயர்களைத் தருவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

- ✤ மூத்த தமிழறிஞரும் எழுத்தாளருமான
  உயர்திரு. க. சொக்கலிங்கம் அவர்கள்
- ✤ யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப்
  பேராசிரியர். அ. சண்முகதாஸ் அவர்கள்
- ✤ யாழ் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர்
  உயர்திரு. அ. பஞ்சலிங்கம் அவர்கள்
- ✤ யாழ் கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி
  உயர்திரு. பா. தனபாலன் அவர்கள்
- ✤ நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர்
  உயர்திரு. எஸ். சேதுராஜா அவர்கள்

விளக்கின் சார்பில் இவர்கள் அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- ஆசிரியர் குழு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரிய விளக்குகள் ஆளுமை விளக்குகளாக...


**ப. விக்கினேஸ்வரன்**

வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.


அகத்தியர் காப்பியம் பள்ளிகளில் ஒளி கொடுக்கும் நிலவு களாக மினுங்கி தொல்யுகத்தில் மொழியின் செழுமைக்கு வைரங்கள் பதித்தன. கம்பன் கூத்தன் இளங்கோ ஆகியோரின் இலக்கியங்கள் கல்விக் கூடங்களின் மொழி விருத்திக்கு சூரிய னாய் அனல்வீசி நெருப்பில் படையல்கள் செய்தன. அறிவியலும், தேடலும், மொழியும் பிரிக்கமுடியாத இலக்குகளில் இலக்கியப் படையல்களை ஆக்கிக் குவித்தன.

உயிரை மொழிக்கும், தீக்கும் வழங்கி சாவரையும் மொழியை சுமந்து சுதந்திர வாழ்வை மாணவர்க்கு கல்வி மூலம் புகட்டிய ஆசிரியர்களின் பணி மகத்தானது.

கலைகளை, கணிதத்தை, அறிவியலை தொடர்பாடலை நவீன கணினி உத்திக்குள் நகர்த்தும் இன்றைய ஆசிரியர்களின் யுகப்பாச்சல் எதிர்கால நிர்மாணத்தின் கட்டமைப்புக்களை கோடு போட்டு காட்டுகின்றன.

திண்ணைக்கல்வி இன்று எண்ணும் கல்வியாகி குளிருட்டிக்குள் கணினியாக உலகத்தைக் கைகளுக்குள் அடக்கி வைத்துள்ளது.

தமிழ்மொழி உலக மொழிகளுடன் கைகோர்த்து தளபதி நிலையில் தலைமை தாங்கவேண்டுமானால் விஞ்ஞான மொழிகளைத் தனக்குள் உள்வாங்கி நவயுக புதினங்களை இன்றைய தலைமுறைக்குக் கொடையாக்க வேண்டும்.

இன்றைய ஆசிரியர் நாளில் சென்ற நாட்களின் ஆசிரியர்களின் பாதங்களை வணங்கும் நாம் எதிர்காலத்தின் நிர்மாண வடிவமைப்புக்குகந்த இன்றைய நாட்களின் அறிவியற் பாதங்களைத் தோளிற் சுமக்க ஒவ்வொரு ஆசிரியரும் களமாடல் வேண்டும்.

அப்போது தான் தடைக்கற்கள் உடைக்கப்பட்டு புதிய படிக்கற்கள் எமது பூமியில் ஆக்கப்படும். எனவே ஆசிரிய விளக்குகள் அறிவியல் விளக்குகளாக மாறுதல் பெறல்வேண்டும். ☆




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துக்கள்

குப்பி விளக்கிலும்
உப்பெண்ணை விளக்கிலும்
வித்தகம் கற்ற உத்தமர்
வாழ்ந்த மண்ணில்
மின்சார ஒளியிலும்
கணினியதன் திரையிலும்
கல்வியற்ற சமூகமொன்று
தோன்றும் நிலை கண்டு
கற்றோரெல்லாம் தலையில்
கைவைத்து
ஒப்பாரியிடும் நேரமதில்



மீண்டுமொரு விளக்கு
பூபாளம் பாடுகின்றது
குப்பி விளக்கல்ல
இது எங்கள்
குலவிளக்கு
உப்பெண்ணை விளக்கல்ல
எங்கள் உத்தமர் விளக்கு இது
பாரெல்லாம் பரவிட
சிற்றெறும் பொன்றின்
வாழ்த்துக்கள்
வாழ்க வாழ்க
பல்லாண்டு காலமது

**யோ. ய. பேனாட்**
**உள்ளகப் பயிற்சி ஆசிரியர்**
**யாழ். கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை




# ஆசிரியர் திருந்தினால்...

சங்கரப்பிள்ளை வாத்தியாரின் வகுப்பிற்தான் தனது மகன் படிக்கிறான் என்பதை அறிந்து கொண்ட டாக்டர் சுப்பிரமணியம் மகிழ்ந்து போனார். ஏனென்றால் சங்கரப்பிள்ளை வாத்தியார் சிறந்த ஓர் ஆசிரியர் என்பதை பலர் சொல்ல டாக்டர் கேட்டிருக்கிறார்.

தனது மகன் கஜனைப் பாட சாலையில் தரம் ஒன்றில் சேர்த்தபோது அந்தப் பிரபலமான ஆரம்ப பாடசா லையின் சாதனைகளைப் பற்றியும், சங்கரப்பிள்ளை மாஸ்ரரின் படிப்பித்தல் பற்றியும் டாக்டர் நன்கு தெரிந்து கொண் டார். அதனாலேயே நன்கொடையாகப் பதினையாயிரம் கொடுத்துப் பலரைப் பின் கதவாற் சந்திதித்து வெற்றிகரமாகப் பாடசாலை அனுமதியைப் பெற்றுக் கொண்டார்

இப்பொழுது மகன் தரம் நான்கில் படிக்கிறான். எல்லாப் பாடங்களிலும் அவன் தேர்ச்சி பெற்றிருப்பதை அவனது மாணவர் அறிக்கைப் படிவம் தெளிவாகக் காட்டியது. வருடஇறுதியில் அவனது தேர்ச்சி அவதானிக்கப்பட்டுத் தரம் ஐந் திற்கு வகுப்பேற்றப்பட்டுமிருக்கிறான்.

கஜன் எல்லாப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றாலும் அவனது அப்பியாசக் கொப்பிகளில் அவனது எழுத்துக்கள் உறுப்பின்றியே காணப்பட்டன. எழுத்துப் பிழைகள் இல்லை, விடயங்களையும், கருத்துக்களையும் கூறுவதில் அவனிடத் தில் எந்தத்தவறும் இல்லை. ஆனால் உறுப்பற்ற கோணல் வாணலான எழுத்துக்கள் இன்னமும் திருத்தமுற வில்லை. வாசிப்பதற்குப் பெரும் சிரமமாக இருந்தது. அதற்கான காரணத்தை அறிய டாக்டர் சுப்பிரமணியம் பல முயற்சிகளை மேற்கொண்டார். ஆய்வுகள், விசாரணை களின் பின்னர் டாக்டர் கண்டு கொண்ட உண்மை அவருக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

கஜனின் எழுத்து அவனது வகுப்பாசிரியரின் கையெழுத்தைப் பின்பற்றியதாகவே இருக்கிறது, என்பது தான் அந்த உண்மையாகும். கஜனது ஆசிரியர் சிறந்த கற்பித்தல், வழிகாட்டல், அனுபவமுடையவர். பலராலும் போற்றப் படுபவர்.கற்பித்தலில் தளராத ஆர்வமுடை

**செல்லமகேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யவர். இத்தனை சிறப்புக்களைப் பெற்ற ஆசிரியரின் கையெழுத்தில் அழகும் தெளிவும் இல்லாமற் போனதால் தன் மகன் கஜனுக்கு ஏற்பட்ட பாதிப்பை உணர்ந்தபோது அவருக்குப் பெரும் வேதனையாக இருந்தது. தனது மகனது எழுத்துத் திருந்தவேண்டுமானால் அவனுக்குக் கற்பிக்கும் ஆசிரியரின் எழுத்தில் மாற்றம் வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டார். அதனை எவ்வாறு ஆசிரியருக்குத் தெரிவிப்பது என்பதைப் புரியாமல் தவித்தவருக்கு ஒரு கதைதான் ஞாபகத்துக்கு வந்தது.

பல காலமாகப் பிரபலம் பெற்றிருந்த கண்வைத்தியர் ஒருவரிடம் கண்களைக் காட்டிப் பரிசோதனை செய்ய ஒருவர் வந்திருந்தார். அவரோ கண்களில் பார்வைக் குழப்பமுள்ள ஒரு நோயாளி. டாக்டர் அவரைப் பார்த்து அவரது நோய் பற்றி, வினாவியபோது அவர் ''எனக்குத் தெரிபவை எல்லாமே... பொருட்களாக விருப்பினும் சரி, உயிர்களாக இருப்பினும் சரி, இவ்விரண்டாகத் தெரிகின்றன'' என்றார்.

அதைக் கேட்டுச் சிறிது நேரம் மௌனமாக இருந்து சிந்தித்த டாக்டர், அவரைக் கூர்ந்து நோக்கினார். பின்னர் ''அதற்காக நீங்கள் ஏன் ஐந்தாறு பேர் வந்து ஒரேயடியாகக் கத்தித் தொலைக் கிறீர்கள்'' என்றார். வந்திருந்த நோயாளிக்கோ டாக்டரின் வார்த்தைகள் பெரும் ஆச்சரியத்தையும், பெருத்த ஏமாற்றத்தையும் கொடுத்தன. டாக்டரின் பார்வையில் ஏதோ பெரும்பிழை இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்ட நோயாளி, டாக்டரின் பார்வையை எண்ணிக் குழம்பிப்போனார். டாக்டரின் பார்வையோ இவ்வாறு குழப்பமாக இருக்கும் போது எவ்வாறு நான் அவரிடம் வைத்தியம் பார்க்கமுடியும் என்று தனக்குள்ளே சிந்தித்தார். தனது பார்வையில் இவ்விரண்டாகத் தெரியும் காட்சி டாக்டரின் பார்வையில் ஐந்தாறாகத் தெரிகிறதே. இவரிடம் எவ்வாறு வைத்தியம் பார்க்க முடியும் – முடியாது! என்ற முடிவோடு எதுவுமே கூறாமல் மௌனமாக மெல்ல எழுந்து வெளியேறிவிட்டார்.

அழகான எழுத்தை எழுதுவதற்கு தனது மகன் பயிற்சி பெறவேண்டுமானால் ஒரு நல்ல ஆசிரியரிடம் அவனை அனுப்பவேண்டும். அந்த ஆசிரியர் அழகான எழுத்து எழுதும் திறமையுள்ளவராக இருத்தல் வேண்டும். எனப் பலவாறு எண்ணிய டாக்டருக்கு சங்கரப் பிள்ளை வாத்தியாரிடம் இருந்து தனது மகனை மீட்க வேண்டுமென்ற கருத்தே மேலோங்கி நின்றது.

அக்கருத்தைச் செயற்படுத்த எண்ணிய டாக்டர், பாடசாலை அதிபரைச் சந்தித்து தனது எண்ணத்திலிருந்த சிறு கதையைக் கூறினார். அதனைக் கேட்ட அதிபர் உரத்துச் சிரித்தார். அத்துடன் நின்றுவிடாமல் ஆழ்ந்து சிந்தித்தார். டாக்டரின் கருத்துப்படி மாணவர்கள் ஆசிரியர்களையே பின்பற்றுகிறார்கள். அந்த வகையில் சங்கரப்பிள்ளை வாத்தியாரின் கிறுக்கல் எழுத்துக்கள் அவரிடம் கற்கும் மாணவர்களின் எழுத்துக்களிற் பதிந்ததில் ஆச்சரியமில்லை.

எனவே சங்கரப்பிள்ளை வாத்தியாரின் கையெழுத்தில் மாற்றம் வேண்டும். என்பதை உறுதி செய்துகொண்ட அதிபர் உடனேயே சங்கரப்பிள்ளை வாத்தியாரிடம் இந்தக் கதையைக்கூறி தமது நோக்கத்தையும் விளக்கினார்.

சங்கரப்பிள்ளை வாத்தியார் தனது புகழுக்குத் தடையாக இருக்கும் கிறுக்கல் எழுத்துக்களை மாற்றி உறுப்பமைய, அழகாக எழுதவேண்டும். என உறுதி செய்துகொண்டார். அதற்காகவே இப்பொழுது தனது எழுத்தில் நிறைய மாற்றத்தை விரும்பிப் பயிற்சிசெய்து கொண்டிருக்கிறார். **ஆசிரியர் திருந்தினால்** மாணவர்கள் திருந்திவிடுவார்கள். ✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மனியில்
# தமிழாலயங்களின் கல்விப்பணி

யேர்மனிய மண்ணில் அந்நாட்டின் மொழி கலை பண்பாடுகளுடன் இணைந்து எம் தாய்மொழியாம். தமிழ் மொழியைப் பேசும், காக்கும், வளர்க்கும் நோக்கில் அங்கியங்கும் தமிழாலயங்கள் புலம் பெயர்ந்த தமிழர்களுக்குக் கல்விப் பணியாற்றி வருகின்றன. ஈழத்தமிழர்களின் இதயங்களில் அவர்களின் தாய் மொழிப் பற்றும் ஈழமண்ணின் மீது அவர் கொண்ட வீடுதலை வீரும்பும் வெளிப்பட நூற்றுக் கணக்கான தமிழாலயங்கள் யேர்மனிய மண்ணில் விரிந்து பரந்து செயலாற்றுகின்றன.

மொழிப்பற்றும் இனப்பற்றும் அவர்களின் கல்வீப் பணியில் வெளிப்பட அவர்கள் வாரத்தில் ஒரு தினமேனும் தமிழ்மொழியைக் கற்க ஒன்று கூடுகின்றனர். தமிழரின் கலை கலாசாரத்திற்கு இயைபுடையதான பாடசாலை ஒழுங்குகளும், ஆசிரியர்களின் தன்னலமற்ற பணிகளும் பாராட்டப்படவேண்டியவையாகும்.

ஒவ்வொரு தமிழாலயத்தின் வளர்ச்சிக்கும், வீவேகத்திற்கும் தூண்டு கோல்களாக அணிசெய்யும் மொழிக் கல்வீ, நடனம், வீளையாட்டு, இசை, எனப்



பிலபெல்ட் தமிழாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொண் தமிழாலயம்



ஸ்ருற்காட் தமிழாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேர்கைம் ரெக் தமிழாலயம்


பல்துறை வளங்களும் அங்கே செறிந் துள்ளன. தமிழாலயங்களின் விரிவுக்கு உழைத்து வரும் எம் தமிழ் உள்ளங்களைப் போற்றுதலும் அவர் பணி முன்னேற்றத் திற்கு உதவுதலும் ஈழத்தமிழர்களின் சிறப்புடைச் செயல்களாகும். பெருவிருட் சமாக விரிந்து பரந்து தமிழ் காக்கும் பணிக்கு அங்கேயே விளைந்து விழுது



கேர்ப்பன் தமிழாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேர்லின் தமிழாலயம்

பரப்பும் மாணவச் செல்வங்களின் சிந்தனையிலும் செயற்றிறனிலும் புதுமையும் ஈழத்தமிழர் தம் விடுதலை வேட்கைக்கு உதவும் உணர்வும் ஓங்கி நிற்பதைக் காணுகின்றோம்.

தமிழ் மொழியைக் கற்பதில் விருப்புடன் ஈடுபடும் தம் பிள்ளைகட்குப் பெற்றோர் கொடுக்கும் ஊக்கமும் தமிழாலயங்களின் மேம்பாட்டிற்கு வளங்கும்



என்னெப்பெற்றால் தமிழாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கவுதவிகளும் அளப்பரியவை. எந்நிலையிலும் ஈழத்தமிழ் மக்கள் இணைந்து தாமே முன்வந்து தமிழ்மொழிக் கல்விக்கு ஆதாரமாகி நின்று அகிலமே வியக்க நல்லன செய்து வாழ்கின்றனர். அவர்களின் புகழ் சிறக்க வாழ்த்துகின்றோம்.

புலம் பெயர்ந்த நிலையிலும் தமிழர்தம் குலம் சிறந்த வாழ்வுக்குக் கல்வியை ஆதாரமாக்குவோம். எங்கு கிளை பரப்பினாலும் ஈழ மண்ணிலே அவர்களின் வேர்கள் பலம்பெற நாம் அதற்கென உரமிடுவோம். உறுதுணையாவோம்.

# மாவீரர் புகழ் பாடு

மாவீரன் யார் என்றால் சொல்லக்கேளும்
மறத்தமிழன் வீரத்தை உணர்த்தும் வீரன்
நாவீரம் பேசிவிட்டுக் கோழை சாவான்
நடுங்காத மாவீரன் இறந்தும் வாழ்வான்.

மறத்தமிழர் தலைநிமிர்ந்து வாழுகின்றோம்
மாவீரர் செய்துவிட்ட தியாகத்தாலே
மாவீரர் இறந்துவிட்டார் இல்லை! இல்லை!
மறத்தமிழர் நெஞ்சகத்தில் வாழுகின்றார்.

இறவாத புகழுடைய மாவீரர்க்கு
இருந்து வரும் தமிழர் நாம் செய்வதென்ன?
மறவாது அவர் வழியைப் பின்தொடர்ந்து
மாவீரர் புகழ் பாடி வாழவேண்டும்.

பார்முழுதும் அவர்வீரம் பரவவேண்டும்
பரவிவரும் அவர் இலக்கு மலரவேண்டும்
ஊர் புகழத் தமிழர் நாம் வாழவேண்டும்
உண்மையொளி உள்ளத்தில் ஒளிரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய விளக்குகள்



கல்வியின் சின்னங்களாக அன்னம், தாமரை, விளக்கு, புத்தகம் ஆகியன சித்தரிக்கப்படுகின்றன. இவற்றில் விளக்குக்கு ஒரு சிறப்புண்டு. ஒரு விளக்கு பலவிளக்குகளாக ஏற்றப் பயன்படுத்தப் படுகின்றது. இதன் மூலம் அதன் சுடர்கள் எங்கும் பிரகாசிக்கின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த பெயரைத் தாங்கிவரும் விளக்கு சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். சமுதாயத்தின் விளக்குகளாக விளங்குகின்ற ஆசிரியர்களைக் கௌரவிக்கும் சிறப்புமலர் ஆசிரியத்துவம் பற்றிய பல செய்திகளைத் தாங்கி வருகின்றது.

ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் பல சுடர்களை ஏற்றும் விளக்குகளாக மிளிர வேண்டமென வாழ்த்துகின்றேன்.

**பொ. வேணுகோபாலவாணிதாஸன்**
கல்விப்பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
வேலணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அச்சுப்பதிப்பு:

பிள்ளையார் நேரச்சுப்பதிப்பகம்

**PILLAIYAR OFFSET PRINTERS**

*(a graphic arts Industuy)*

676, Point Pedro Road,
Nallur, Jaffna.

676, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VISIT OUR NEW SHOWROOM...

# சுந்தர்சன்

# SUNDHARSON

DISTRIBUTORS OF ELECTRICAL ITEMS AND ELECTRICAL APPLIANCES, WATER PUMPS, SANITARY WARE, FLOOR & WALL TILES.

தமிழீழக் கல்விக் கழகம் வெளியிடும் ஆசிரிய வாண்மை விருத்தித் தாழிகையான
"விளக்கு" இதழ் மென்மேலும் வளர்ச்சி பெற மனமார வாழத்துகின்றோம்!


"சுந்தர்சன்"
மானிப்பாய்.



## உங்களின் மின்சார சாதனங்களின் தெரிவுகளுக்கு

## சுந்தர்சன்

**ABANS** தயாரிப்புக்களான **LG** குளிர்சாதனப்பெட்டிகள், **T.V**க்கள், சலவை இயந்திரங்கள்,
வீடியோ டெக், மின்சார உபகரணங்கள், மின் நீர் இறைக்கும் இயந்திரங்கள்,
மின் அலங்கார பொருட்கள், மின் அழுத்திகள், மின் விசிறிகள், மின் அடுப்புகள், றைஸ் குக்கர்,
மின் இணைப்பு வயரிங் பொருட்கள், மின்சாரத்தில் இயங்கும் சமையலறை பொருட்கள்



இன்னும் ANTON PVC நீர்க்குழாய்கள்
அதன் இணைப்புகள், PVC கூரைப் பீலிகள்
அதன் இணைப்புகள் மற்றும் பரிசுப்பொருட்களையும்
ஒரே இடத்தில் நிதானம், நியாயம்,
உத்தரவாதத்துடன் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம்.

"SUNDHARSON"
சுந்தர்சன்

ABANS
நிறுவனத்தின்
அங்கீகரிக்கப்பட்ட
விற்பனையாளர்
சுந்தர்சன்

சுந்தர்சன்
யாழ் வீதி,
மானிப்பாய்.
T.P: 222 2751, 4591569
Fax: 222 2751

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org